தெய்வத் தமிழ்






பேராசிரியர் இரா.மோகன்

வானதி பதிப்பகம்

தெய்வத் தமிழ்

பேராசிரியர் **இரா.மோகன்**

வானதி பதிப்பகம்
23, தீனதயாளு தெரு,
தி.நகர், சென்னை – 17.

முதற்பதிப்பு : அக்டோபர், 2014
© பேராசிரியர் இரா. மோகன்

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. **100.00**

Title	:	**THEYVATH TAMIL**
Author	:	Professor Era. Mohan
Language	:	Tamil
Subject	:	Bakthi Literature
Edition	:	First Edition, October, 2014
Pages	:	184
Published By	:	**VANATHAI PATHIPPAKAM** 23, Deenadayalu Street, Thyagaraya Nagar, Chennai-600 017. Ph:24342810 / 24310769 e-mail: vanathipathippakam@gmail.com
Price	:	**₹ 100.00**

Laser Typeset by: **P.K.Ramkumar**
Printed at : Ganapathi Process, Chennai-5..

சில சொல்

மேலை நாட்டு எழுத்தாளர் **ட்ரண்ட் வாட்ச்** என்பவரின் அற்புதமான நூல் 'உன்னதத்தைத் தேடி'. அதில் அவர் அடுத்த நூற்றாண்டில் - இருபத்தியோராம் நூற்றாண்டில்- இரண்டு விஷயங்கள் முக்கியத்துவம் பெறும் என அடையாளம் காட்டியுள்ளார். அவையாவன:

1. மக்கள் ஆன்மிகத்தில் ஆழ்ந்து போவார்கள்.
2. பெண்கள் முதன்மை பெறுவார்கள்.

சிந்தனையாளர் டாக்டர் **எம்.எஸ்.உதயமூர்த்தி** ஒருமுறை கோவை நகரில் உரையாற்றிய போது இந்நூலினைப் பற்றிய தகவலைத் தெரிவித்தார்; 'ஓம் சக்தி' இதழ் (செப்டம்பர், 1999, பக்.33-35) அரிய இத்தகவலைப் பதிவு செய்திருந்தது.

வேறு எக்காலத்தையும் விட, இக்காலத்திலேயே மனிதன் மன அழுத்தத்திலும் கவலையிலும் சிக்கித் தவிக்கிறான்; புற வளர்ச்சியில் இமாலய உச்சியைத் தொட்டிருந்தாலும், அக உலகில் மயக்கத்திலும் கலக்கத்திலும் குழப்பத்திலும் நடுக்கத்திலும் அகப்பட்டு, அல்லற்பட்டு, ஆற்றாது, அழுது புலம்புகிறான்; 'எங்கே நிம்மதி, எங்கே நிம்மதி? அங்கே எனக்கு ஓர் இடம் வேண்டும்' என்றும், 'ஆயிரம் தான் வாழ்வில் வரும், நிம்மதி வருவதில்லை' என்றும் பாடித் திரிகிறான். கடுமையான இச்சூழலில் - நெருக்கடியான இத் தருணத்தில் - ஆன்மிகமே அவனுக்குக் கைகொடுக்கும் - மனத்திற்கு ஆறுதல் தரும் - அருமருந்தாக விளங்குகின்றது.

தவத்திரு **குன்றக்குடி அடிகளார்**, "ஆன்மிகம் என்பது ஆன்மாவின் - உயிரின் தரத்தை வளர்த்துக் கொள்ளுதல். 'நான்', 'உள்ளம்', 'ஞானம்' என்ற மூன்றும் இணைந்து வளர்ந்த ஒன்றே

ஆன்மிகம்" (குன்றக்குடி அடிகளார் நூல் வரிசை: தொகுதி 12, ப.476) என ஆன்மிகத்திற்கு வரைவிலக்கணம் வகுப்பார். இக் கருத்தியலின் ஒளியில் ஆன்மாவின் - உயிரின் - தரத்தை மேம்படுத்தும் குறுங்கட்டுரைகள் இந்நூலில் தொகுத்துத் தரப் பெற்றுள்ளன. மாணிக்கவாசகரின் மந்திர மொழி கூறுவது போல், 'நான்', 'உள்ளம்', 'ஞானம்' என்ற மூன்றும் இணைந்து வளர்ந்த ஒன்றே ஆன்மிகம் என்பது இந்நூலில் பல்வேறு எடுத்துக்காட்டுகளாலும் ஏதுக்களாலும் நிறுவப் பெற்றுள்ளது.

வழக்கம் போல் நனிசிறந்த முறையில் இந்நூலினை வெளியிட முன்வந்த 'பதிப்புத் திலகம்' வானதி **இராமநாதன்** அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றி என்றும் உரியதாகும். நூலின் கட்டுரைகளை நிரல்படுத்துவதில் எனது வலது கரமாகச் செயல்பட்ட வாழ்க்கைத் துணை முனைவர் **நிர்மலாவுக்கும்,** கணினியாக்க முயற்சியில் முனைப்புடன் செயல்பட்ட அன்பு இளவல் **பி.கி.இராம்குமாருக்கும்** இத்தருணத்தில் என் நன்றியறிதலை உரித்தாக்குகிறேன்.

உலகெங்கிலும் உள்ள ஆன்மிக அன்பர்கள் இந்நூலினை வரவேற்றுப் போற்றுவார்கள் என எதிர்நோக்குகிறேன்.

மதுரை 625 019

இரா. மோகன்

23.09.2014

பொருளடக்கம்

சில சொல் 3

1. ஆன்மிக வாழ்வின் முதல் படி 7

2. ‘தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி..’ 11

3. பக்தி வலையில் சிக்கிய பரம்பொருள்! 15

4. கத்தரிக்கோலை விட ஊசியே மேல்! 19

5. வாழ்வில் எல்லாம் இன்ப மயமே! 22

6. இறைவன் வகுத்த நியதி 25

7. ‘மனம் இருப்பவரே பணக்காரர்!’ 28

8. ஔவைத் தமிழாய் வாழ்க்கை இனிக்க... 31

9. மரணமும் மங்கலமான நிகழ்ச்சியே! 34

10. கண்ணதாசனின் கீதோபதேசம்! 37

11. எது மெய்யான பக்தி? 40

12. கடவுளின் கருணை யாருக்கு? 43

13. யார் ஞானி? 46

14. சொர்க்கமும் நரகமும் எவை? 49

15. முத்தியும் சித்தியும் எப்போது வாய்க்கும்? 52

16. எது உண்மையான வீரம்? 55

17. மனித வாழ்க்கை எவ்வளவு காலம்? 59

18. உங்கள் வயது என்ன? 62

19. எங்கே உள்ளான் இறைவன்! 65

20. விடை காண முடியாத வினா 68

21. எல்லா நேரமும் நல்ல நேரம்தான்! 72
22. சகுனம் பார்க்கும் வழக்கத்திற்கு முழுக்குப் போடுங்கள்! 75
23. உழைப்புக்குப் பின் வரும் உறக்கம் தான் சொர்க்கம்! 78
24. நில்லா உலகில் நிலைத்த சுகம் பெற... 81
25. மரணத்தை மகிழ்வுடன் வரவேற்போம் 85
26. வேண்டாமை என்னும் விழுச்செல்வம் 89
27. இன்பம் இருக்கும் இடம்! 93
28. பால் மனம் கொண்ட பால்காரி 96
29. 'கஞ்சி வரதப்பா & எங்கே வருதப்பா?' 99
30. 'சும்மாவின் பெருமை சொல்லவும் அரிதே!' 102
31. பழைய கதை புதிய பார்வையில்... 108
32. நம்மை அறிய நமக்கொரு திறவுகோல்! 111
33. அன்பு நெறியே தமிழருடைய தனிப்பெரு நெறி 114
34. 'கன்னித் தமிழ் தந்ததொரு திருவாசகம்' 121
35. கணினி யுகத்திற்கு அருணகிரிநாதர் 125
36. தாழ்ச்சி சொல்வோரே வாழ்வில் உயர்ச்சி அடைவர்! 131
37. இராமகிருஷ்ண பரமஹம்சர் என்னும் ஆன்மிகப் பேரொளி 134
38. சுவாமி விவேகானந்தர் காட்டும் பெருவாழ்வு 138
39. பாரதியார் போற்றும் ஆன்மிக விழுமியங்கள் 141
40. ஆண்டவன் கட்டளை ஆறு 147

1

ஆன்மிக வாழ்வின் முதல் படி

"உன்னையறிந்தால் - நீ உன்னையறிந்தால்
உலகத்தில் போராடலாம்!
உயர்ந்தாலும் தாழ்ந்தாலும் - தலை
வணங்காமல் நீ வாழலாம்!"

-கண்ணதாசன்*

ஆன்மிக வாழ்வின் முதல் படி - அடிப்படைத் தேவை - ஒருவன் தன்னைத் தான் அறிவது.

"தன்னை அறிந்து இன்பமுற வெண்ணிலாவே ஒரு
தந்திரம்நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே"

என்பது நம் அருளாளர் வாக்கு.

கிரேக்க நாட்டுத் தத்துவ ஞானி **சாக்ரடிசும்** 'மனிதனே! உன்னை நீ அறிவாயாக!' (Know thyself) என்று மனிதனைச் சிந்திக்குமாறு வேண்டினார். 'உன்னை நீ அறிவாயானால், உனக்கொரு கேடும் இல்லை' என்றே நம் ஆன்றோரும் மொழிந்தனர்.

ஆன்மிக வாழ்வின் அடுத்த நிலை - இரண்டாவது படி - ஒருவன் தன்னுடைய குறைகளை உணர்ந்து, அவற்றை நீக்கி வாழ முயலுதல்; அதாவது தன்னைத் தானே திருத்திக் கொள்ளுதல். "தன்னைத் தானே திருத்திக் கொள்வதே பிரதானம். தன்னைத் திருத்தி அமரனாகச் செய்து கொள்க. அதுவே ஒருவன் செய்ய வேண்டிய தலைமைத் தொழில்" (பாரதியார் கட்டுரைகள், ப.401). எனப் **பாரதியார்** தம் கட்டுரை

---

* கவிஞர் கண்ணதாசன் திரை இசைப் பாடல்கள்: முதல் தொகுதி, ப.299.

ஒன்றில் குறிப்பிடுவார். பாரதியாரின் நோக்கில் பூமியில் எவர்க்கும் கடமை எனப்படுவன நான்கு. அவற்றுள் முதலாவது தன்னைக் கட்டுதல். இதனை அவர் **'தன்னை ஆளும் சமர்த்து'** எனச் சுட்டுவார்.

> **"தனைத்தான் ஆளுந் தன்மைநான் பெற்றிடில்,**
> **எல்லாப் பயன்களும் தாமே எய்தும்"**
>
> **(பாரதியார் கவிதைகள், ப.6)**

என்பது பாரதியாரின் முடிந்த முடிபு.

ஆன்மிக வாழ்வில் தன்னை அறிதலின் - தன்னைத்தான் ஆளும் தன்மையின் - இன்றியமையாமையை **ரமண மாமுனிவர்** நிதாகன் கதை மூலம் தமக்கே உரிய பாணியில் விளக்கிச் செல்வார். தருக்க நெறியில் சிறந்து விளங்கும் அக்கதை வருமாறு:

"ரிபு என்ற முனிவரிடம் நிதாகன் என்பவன் உபதேசம் பெற்று மாணாக்கனாக இருந்தான். அவன் நன்றாகப் படித்தவன்; அறிவாற்றல் உடையவன். ஆனாலும் இன்னும் அவன் மெய்ஞ்ஞானம் பெறவில்லை. அவனைச் சோதனை செய்வதற்காக ஒருநாள் ரிபு முனிவர் ஒரு பட்டிக்காட்டானைப் போல வேடம் புனைந்து அவனிடம் சென்றார். அந்தச் சமயத்தில் அரசன் வீதியில் பவனி வந்து கொண்டிருந்தான். அந்தப் பவனியை நிதாகன் மிகவும் அக்கறையோடு கவனித்துக் கொண்டிருந்தான். பட்டிக்காட்டானாகச் சென்ற ரிபு முனிவர் நிதாகனைப் பார்த்து, 'இது என்ன இவ்வளவு ஆரவாரம்? இவ்வளவு கூட்டம்?' என்று கேட்டார்.

'ராஜா பவனி போகிறார்' என்று நிதாகன் சொன்னான்.

'ராஜாவா? பவனி போகிறாரா? யார் ராஜா?' என்று ஆச்சரியத்தோடு பட்டிக்காட்டானாக வந்த ரிபு முனிவர் கேட்டார்.

'அதோ யானை மேல் அமர்ந்திருக்கிறாரே, அவரே ராஜா' என்று விடை கூறினான் நிதாகன்.

'ராஜா யானை மேல் இருக்கிறாரா? இரண்டு வஸ்துக் களைக் காண்கிறேன். அந்த இரண்டு பேரில் யார் ராஜா? யார் யானை?'

நிதாகனுக்குச் சிரிப்பு வந்தது.

'என்ன இது? நான்தான் காட்டினேனே! ராஜாவையும் யானையையும் தெரிந்து கொள்ள முடியவில்லையா? அட பைத்தியக்காரா! மேலே இருக்கிறவர் ராஜா; கீழே இருப்பது யானை' என்றான்.

'கோபித்துக் கொள்ள வேண்டாம். எனக்குத் தெரியவில்லை. அதுதானே கேட்கிறேன்?'

'இப்போது' தெரிந்து விட்டதா?'

'நான் இன்னும் முட்டாளாகவே இருக்கிறேன். உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். ராஜா மேலே, யானை கீழே என்றாயே; மேல், கீழ் என்றால் என்ன? அதுவே எனக்குத் தெரியவில்லையே?'

'அட, அடி முட்டாளே! பிரம்மாண்டமான யானையையும் காட்டினேன்; ஆடையணி அணிந்த அரசனையும் காட்டினேன். மேலே இருக்கிற ராஜாவை உனக்குத் தெரிந்து கொள்ள முடிய வில்லை. மேல், கீழ் என்பதே தெரியவில்லை. கண்ணால் கண்டும் உனக்கு விளங்காவிட்டால் ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. எங்கே, குனி' என்றான் நிதாகன். அவனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

பட்டிக்காட்டான் மறுபேச்சுப் பேசாமல் குனிந்தான். அவன் தோளில் மேல் நிதாகன் ஏறிக் கொண்டான். 'இப்போதாவது புரிகிறதா உனக்கு? நான் தான் ராஜா; நீ தான் யானை. நான் மேலே இருக்கிறேன்; நீ கீழே இருக்கிறாய். விளங்குகிறதா?' என்று படபடப்பாகக் கேட்டான்.

பட்டிக்காட்டான் நிதானத்தை இழக்கவில்லை. 'இல்லையே, இன்னும் தெளிவாகவில்லையே! ராஜா, யானை இரண்டும் முதலில் விளங்கின; இப்போது மேல், கீழ் என்பவையும் ஒருவாறு புரிகின்றன. ஆனால் மற்றொரு 'சந்தேகம் அல்லவா வந்துவிட்டது? நான் மேல், நீ கீழ் என்றாயே; நான், நீ - இந்த இரண்டும் எனக்குப் புரியவில்லை. இந்த இரண்டும் எவற்றைக் குறிக்கின்றன? அருள்கூர்ந்து இதையும் விளக்க வேண்டும்' என்று கேட்டான்.

அதுவரைக்கும் நிதாகனுக்கு எளிமையாக இருந்தது;

பட்டிக்காட்டானைக் கண்டு ஏளனமாக இருந்தது. கோபமும் வந்தது. 'நான், நீ' என்ற வேறுபாட்டை விளக்க வேண்டும் என்று பட்டிக்காட்டான் கேட்டவுடனே அவனுக்கே மலைப்பாகப் போய்விட்டது. 'நான், நீ என்று பேசினேன். அவற்றின் பொருள் என்ன? ராஜா, யானை இரண்டையும் எளிதிலே காட்டி விட்டேன். நான், நீ - இந்த இரண்டையும் எப்படிக் காட்டுவது? நான் இவற்றை உணர்ந்தேனா? என்னையே நான் உணரவில்லை போலத் தானே இருக்கிறது? ஆம்; நான் என்பதே இன்னும் எனக்குத் தெளிவாகவில்லை!' - நிதாகன் சிந்தனையில் ஆழ்ந்தான். அப்போது தான் அவனுக்கு உண்மை விளங்கிற்று. 'இங்கே நிற்பவன் பட்டிக் காட்டான் அல்ல. எனக்கு உண்மையை உணர்த்த வந்த ஞான குரு. இப்படி என்னைச் சுமந்தாவது உண்மையை உணர்த்தும் கருணை நம்முடைய குருநாதர் ரிபுவுக்குத் தான் உண்டு. இவர் நம் குருநாதரே!' என்று தோன்றியது. உடனே கீழே குதித்தான். முனிவருடைய கால்களைப் பற்றிக் கொண்டான்.

நீ, நான் என்ற பேதம் உடம்புக்கு ஏறியது என்பதை ரிபு முனிவர் இப்படித் தம் சீடனுக்கு உணர்த்தினார்."

(ரமண மாமுனிவர், பக்.101-104)

அருளாளர்கள் காட்டிய வழியில் முதலில் நம்மை நாம் அறிவோம்; நம்மை நாமே திருத்திக் கொள்வோம்; அடுத்து, நம்மைக் கட்டுப்படுத்தி, நம்மை நாம் ஆளும் திறத்தினைப் பெறுவோம். அப்போது தான் பாரதி போற்றும் **'அமர வாழ்வு** நமக்கு வசப்படும்'; **'வானுறையும் தெய்வ நிலை'** வாய்க்கும்.

2

'தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி..'

"நாம் முன்னேற வேண்டுமானால் முதலில் நமக்கு நம்மிடம் நம்பிக்கை வேண்டும், பிறகு கடவுளிடம் நம்பிக்கை வேண்டும். தன்னிடம் நம்பிக்கை இல்லாதவன் கடவுளிடமும் ஒருபோதும் நம்பிக்கை வைக்க முடியாது."

- **விவேகானந்தர்***

'**கன்னித் தமிழ் தந்ததொரு திருவாசகம்**' என்பது கவியரசர் **கண்ணதாசனின்** புகழாரம். 'திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்பது தமிழக மக்கள் நாவில் தொன்றுதொட்டு வழங்கி வரும் ஒரு பழமொழி. 'ஒரு தமிழ் மாணவன்' எனத் தம்மைச் சுட்டிக்கொள்வதிலே பீடும் பெருமையும் கொண்ட அறிஞர் **ஜி.யு.போப்** 'எலும்பை உருக்கும் பாடல்கள்' (Bone Melting Hymns) கொண்டது எனத் திருவாசகத்தைப் போற்றிக் கூறியதும் இங்கே நினைவுகூரத்தக்க தாகும். திருவாசகத்தின் நான்காம் அகவலான 'போற்றித் திருவக'வலில் கடவுள் என்பதொரு கருத்து விளைந்து, வெறுப்பு இல்லாதாகிய அந்த ஒப்பற்ற பொருளையே எண்ணத் தொடங்கும் நிலை மனித வாழ்வில் எப்போது வாய்க்கும் என்பதைப் பற்றி மாணிக்கவாசகர் விரிவாகக் குறிப்பிடுகின்றார். இந்த நிலையை ஒரு மனிதன் தன் வாழ்வில் அடைவதற்கு முன்பு அவன் எத்துணை இன்னல்களில் இருந்து - நெருக்கடிகளில் இருந்து- தப்பிக்க வேண்டியுள்ளது என்றும் அவர் பட்டியல் இடுகின்றர்ர் **'பிழைத்தும்'** என்ற சொல்லை 20 முறை, இப் பகுதியில் மாணிக்கவாசகர் கையாண்டிருப்பது கூர்ந்து நோக்கத்தக்கது.

"தெய்வம் என்பதோர் சித்தமுண் டாகி
முனிவி லாததோர் பொருள்அது கருதுதலும்"

---

* சுவாமி விவேகானந்தரின் வரலாறும் அறிவுரைகளும், ப.93.

"புற வாழ்வாகிய உலகியல் போகங்களில் சிக்கியவனுக்குக் கடவுட் சிந்தனையுண்டாதல் மிகமிக அருமையாதலின் 'தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி' என்றருளினர்" (திருவாசகம் - விளக்கவுரை: முதற்பாகம், ப.144) என உரை விளக்கம் வரைவார் மகாவித்துவான் **ச.தண்டபாணி தேசிகர்**.

"சித்தத்தில் இறங்கிவிட்ட ஒன்றை எளிதாக அசைக்கவோ, போக்கவோ முடியாது. ஆனால், மனத்தில் தோன்றும் ஒன்றை மிக எளிதாகப் போக்கிவிட முடியும். இந்த ஆழமான கருத்தை மனத்திற் கொண்டுதான் தெய்வம் என்பதோர் **நினைவுண்டாகி** என்றோ, **எண்ணமுண்டாகி** என்றோ, **கருத்துண்டாகி** என்றோ கூறாமல், **'சித்தமுண்டாகி'** என்றார் அடிகளார். மனத்தில் தோன்றுவதை **'எண்ணம்'** என்றும், சித்தத்தில் தோன்றுவதைச் **'சிந்தனை'** என்றும் கூறலாம். 'சித்தமுண்டாகி' என்று கூறுவதால் அந்தச் சித்தத்தில் வேறு ஒரு சிந்தனைக்கும் இடமில்லாமல் சித்தம் முழுவதும் இறையுணர்விற்கே இடமாயிற்று என்பது பெறப்படும்" (திருவாசகம் - சில சிந்தனைகள்: தொகுதி 1, ப.245) என்னும் பேராசிரியர் **அ.ச.ஞானசம்பந்தனின்** நுண்ணிய கருத்து விளக்கம் இங்கே மனங்கொளத் தக்கதாகும்.

'**போ**ற்றித் திருவக'லிலேயே பிறிதோர் இடத்தில், 'அயலார்கள் பலர் கூடி கடவுள் இல்லை என்னும் நாத்திக வாதம் பேசி நாத்தழும்பேறினர்' என்பதையும் சுட்டிக்காட்டு கின்றார் மாணிக்கவாசகர்.

"... .... அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும்பு ஏறினர்"

(போற்றித் திருவகவல், 46-47)

'கடவுள் இல்லை, இல்லை, இல்லவே இல்லை' என்று நாத்திகவாதம் பேசிப் பேசியே அவர்களது நாவிலேயே தழும்பேறி விட்டதாம்.

ஒன்று மட்டும் உண்மை.

வாழ்வில் பல விதமான துன்பங்களும் துயரங்களும் நெருக்கடிகளும் பிரச்சினைகளும் அணிவகுத்து வந்து தாக்கும் போது தான் மனிதனுக்கு இறை நினைவு வருகின்றது; 'தெய்வம் என்பதோர் சித்தம்' உண்டாகின்றது. அதே போல, வாழ்வில் என்ன நேர்ந்தாலும் நாத்திகவாதம் பேசிப் பேசியே நாத்தழும்பு

ஏறியவர்களும் உலகில் இன்னமும் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

இவ்வகையில் மனங்கொளத் தக்க **ஓஷோ**வின் குட்டிக் கதை ஒன்று:

"மலைச் சிகரத்தின் மீது ஒரு நாத்திகன் நடந்து கொண்டிருந்த போது தவறி விழுந்து விட்டான்.

பாறை இடுக்கில் வளர்ந்திருந்த ஒரு மரக்கிளையை விழும் போது பிடித்துக் கொண்டான் அவன்.

உயிரை நடுக்கும் குளிர்காற்று வீசிக் கொண்டிருந்தது.

மரக்கிளையைப் பிடித்தவாறு தொங்கிக் கொண்டிருந்த நாத்திகன் தனது நம்பிக்கையற்ற நிலையைச் சிந்தித்துப் பார்த்தான்.

கீழே பெரும் பாறைகள். மேலே ஏறிச் செல்லவும் முடியாது. கிளையின் மீதான பிடிப்பும் நழுவிக் கொண்டிருந்தது.

அவன் நினைத்தான்.

'நல்லது! கடவுள் மட்டுமே என்னைக் காப்பாற்ற முடியும். எப்போதுமே நான் கடவுளை நம்பியதில்லை. நான் இதில் தவறு செய்திருக்கலாம். இதனால் என்ன இழப்பு வந்துவிடப் போகிறது?'

இப்படி நினைத்த அவன் கடவுளை அழைத்தான். 'கடவுளே! நீ இருப்பது உண்மையென்றால் என்னைக் காப்பாற்று, நான் உன்னை நம்புகிறேன்!'

பதிலே இல்லை.

அவன் மீண்டும் அழைத்தான்:

'கடவுளே! என்றுமே உன்னை நான் நம்பியதில்லை. ஆனால் இப்போது என்னைக் காப்பாற்றினால், நான் உன்னை இப்போதிருந்தே நம்புவேன்!"

மேகக் கூட்டத்திலிருந்து திடீரென ஒரு குரல் எழுந்தது:

'நீ என்னை நம்ப மாட்டாய்! உனது தன்மை எனக்குத் தெரியும்!'

கிளையின் பிடியை அறவே விட்டுவிடக்கூடிய நிலையில் இருந்த அந்த நாத்திகன் இதைக் கேட்டு ஆச்சரியம் அடைந்தான்.

'கடவுளே, தயவு செய்யுங்கள்! நீங்கள் கூறுவது தவறு! நான் உண்மையாகவே கூறுகிறேன். நான் நம்பிக்கை வைப்பேன்!'

'இல்லை. நீ நம்பிக்கை கொள்ள - மாட்டாய்! அப்படித் தான் எல்லோரும் கூறுகிறார்கள்!'

அந்த மனிதன் மீண்டும் கெஞ்சினான்; வாதாடினான்.

இறுதியாகக் கடவுள் கூறினார்:

'சரி. நான் உன்னைக் காப்பாற்றுகிறேன். மரக்கிளையை விட்டுவிடு!'

'மரக்கிளையை விடுவதா? என்னை முட்டாள் என்று நினைக்கிறீர்களா?' என்று கேட்டான் நாத்திகன்."

(ஓஷோவின் குட்டிக் கதைகள், பக்.48-50)

கவியரசர் **கண்ணதாசன்** இரத்தினச் சுருக்கமாகக் கூறுவது போல், 'நம்பிக்கை வைத்துக் கல்லையும் பார்த்தால் அதுதான் தெய்வத்தின் சாட்சி - உள்ளத்தின் சாட்சி - உண்மைக் குச் சாட்சி!' நம்பிக்கை சிறிதும் இல்லாமல் கடவுளையே பார்த்தால் கூட, அது வெறும் கல்லாகத் தான் காட்சி அளிக்கும். **'தெய்வம் என்றால் அது தெய்வம் - அது சிலை என்றால் வெறும் சிலைதான்! உண்டு என்றால் அது உண்டு! இல்லை என்றால் அது இல்லை!'**

(திரை இசைப் பாடல்கள்: நான்காம் தொகுதி, ப.393;
இரண்டாவது தொகுதி, ப.337)

3

பக்தி வலையில் சிக்கிய பரம்பொருள்!

"பக்தி வழி என்பது மென்மையானது.
அங்கே வேண்டுதல் இல்லை; வேண்டாமை இல்லை.
அங்கே இறைவனின் திருவடியில்
ஒவ்வொருவரும் சரண் அடைகிறார்கள்."

- கபீர்*

'சரஸ்வதி சபதம்' திரைப்படத்திற்காகக் கவியரசர் கண்ணதாசன் எழுதிய பக்திப் பாடலில் இடம்பெற்ற வைர வரிகள் இவை:

"தெய்வம் இருப்பது எங்கே?
அதுஇங்கே வேறெங்கே?
தெளிந்த நினைவும் திறந்த நெஞ்சும்
நிறைந்ததுண்டோ அங்கே!"

(கவிஞர் கண்ணதாசன் திரைஇசைப் பாடல்கள்: முதல் தொகுதி, ப.3)

எங்கே?, இங்கே?, அங்கே! என்னும் மூன்றே சொற்களைக் கொண்டு அருமையான சொல் விளையாட்டு ஒன்றினை நடத்தி இருப்பார் கவியரசர். மேலும் அவர், 'ஆடை அணிகலன் ஆடம்பரங்கள், ஆண்டவன் விரும்புவதில்லை! அங்கொரு கண்ணும் இங்கொரு கண்ணும் ஆலய வழிபாடில்லை!' (ப.4) என்று இறைவனின் இயல்பையும் வழிபாட்டின் அடிப்படையையும் தெளிவுபடுத்துவார். அவரது கருத்தில் நன்றி நிறைந்தவர்-நன்மை புரிந்தவர் - பழமை நிறைந்தவர் - பாசம் நிறைந்தவர் எங்கெல்லாம் இருக்கிறார்களோ அங்கெல்லாம் இறைவன்

---

* தமிழில்: எழில்முதல்வன், கபீரின் நூறு பாடல்கள், ப.70.

இருக்கின்றான். **மாணிக்கவாசகர், வள்ளலார், தாயுமானவர்** முதலான அருளாளர்களின் சொற்களில் குறிப்பிடுவது என்றால், இறைவன் 'பக்தி வலையில் படுவோன்'; 'அன்பெனும் குடில் புகும் அரசன்'; 'நெஞ்சகமே கோயில், நினைவே சுகந்தம், அன்பே மஞ்சன நீர்; பூசை கொள்ள வாராய்!' என உள்ளன்போடு அழைத்தால் ஓடோடி வருபவன்!

'வலைக்குள் சிக்கிய பரம்பொருள்' என்னும் தலைப்பில் முக நூலில் (facebook) இடம்பெற்றிருக்கும் ஆன்மிகக் கதை:

காட்டில் ஒரு வேடன். கடுமையான உழைப்பாளி. பாமரன். எது தேவையோ அதை முயற்சி செய்து பெற்று, மன நிறைவுடன் வாழ்ந்து வந்தான்.

அங்கு ஒரு முனிவர். இறைவனை தரிசிப்பதே அவர் இலட்சியம். கடுமையான தவத்தில் அவர் ஈடுபட்டு வந்தார். பல மாதங்கள் சரியாகச் சாப்பிடாமல் நீரையும் சிறிது பழங்களையும் மட்டுமே சாப்பிட்டு வந்தார்.

எவ்வளவோ கடுமையாகத் தவம் செய்தும் அவரால் தம் இலட்சியத்தை அடைய முடியவில்லை. தம் முயற்சியில் வெற்றி காணாமல் தளர்ந்த நடையுடன் காட்டின் வழியே போய்க் கொண்டிருந்தார்.

வேடன் அவரைப் பார்த்தான். மிகவும் களைப்பாக இருந்த அவரைப் பார்த்து அவனுக்குப் பரிதாபம் ஏற்பட்டது. அவரிடம் சென்று வணங்கினான். "முனிவரே உங்களுக்கு என்ன தேவை? எதையாவது தேடிக் கொண்டிருக்கிறீர்களா? நான் உங்களுக்கு ஏதாவது உதவி செய்யலாமா? இந்தக் காட்டின் மூலை முடுக்கெல்லாம் எனக்கு அத்துப்படி. இங்கே எதைக் கேட்டாலும் என்னால் கொண்டு வர முடியும். உங்களுக்கு என்ன வேண்டும் என்று சொல்லுங்கள். நான் செய்கிறேன்" என்றான்.

முனிவர் அவனை அன்புடன் பார்த்து, "மகனே, நான் தேடுவது பரம்பொருளை. அவன் எங்கும் நிறைந்திருப்பவன். ஆனால், யார் கண்ணுக்கும் தெரிய மாட்டான். உன்னால் எனக்கு உதவ முடியாது" என்றார்.

"யாராக இருந்தால் என்ன? இந்தக் காட்டிலே இருப்பாரா? பார்க்க எப்படி இருப்பார்? எந்த மிருகத்தைப் போல இருப்பார்? மான் போலவா? முயல் போலவா? சிங்கம்,

புலி, கரடி... இப்படி எதைப் போல இருப்பார்? எனக்கு அடையாளத்தை மட்டும் சொல்லுங்கள். அவரைப் பிடித்துக் கொண்டு வந்து உங்கள் முன்னால் நிறுத்துகிறேன். என்னால் முடியுமா என்று சந்தேகப்படாதீர்கள். தயவு செய்து சொல்லுங்கள்" என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கேட்டான் வேடன்.

அவனுடைய அறியாமையை நினைத்து முனிவருக்குச் சிரிப்பு வந்தது. அவனுக்கு எப்படிப் புரிய வைப்பது என்று யோசித்தார்.

"அடையாளம் மட்டும் சொல்லுங்கள்" என்று மீண்டும் கேட்டான் வேடன்.

அவனுடைய அன்புத் தொல்லையிலிருந்து மீள முனிவருக்கு ஒரு யோசனை தோன்றியது. "மகனே, கேள். நான் தேடும் பரமன், சிங்கத்தின் தலையுடனும், மனித உடலுடனும் இருப்பார். நிச்சயமாக இந்தக் காட்டிலும் இருப்பார். உன்னால் முடிந்தால், தேடிக் கண்டுபிடி" என்றார்.

"அவ்வளவு தானே? நீங்கள் ஓய்வெடுங்கள். நான் எப்படியாவது தேடிக் கண்டுபிடிக்கிறேன்" என்று சொல்லி விட்டுக் கிளம்பினான் வேடன்.

காடு முழுவதும் அலைந்து திரிந்தான். சாப்பாடு, தூக்கம், உற்றார், உறவினர் எதுவும் நினைவில்லை. அவன் உடல், மனம், ஆன்மா அனைத்தும் அந்த மிருகத்தைத் தேடி அலைந்தது.

"சிங்கத்தின் தலை... மனித உடல்..." திரும்பத் திரும்ப அதையே சொல்லிக் கொண்டிருந்தான்.

"இந்தக் காட்டில், எனக்குத் தெரியாமல், இத்தனை நாளாய் இந்த மிருகம் ஒளிந்து கொண்டிருக்கிறது. எப்படியும் அதைக் கண்டுபிடித்தே தீருவேன்... கடவுளே எப்போது எதைத் தேடினாலும் எனக்கு உதவுவாயே இப்போது ஏன் எனக்கு உதவ மறுக்கிறாய்?" என்று வருந்தினான்.

நாட்கள் கடந்தன. அவனுக்கு அந்த நினைவே இல்லை. "சிங்கத்தின் தலை... மனித உடல்... சிங்கத்தின் தலை... மனித உடல்... சிங்கத்தின் தலை... மனித உடல்..." அவன் உடலின் ஒவ்வொரு அணுவிலும் அதே எண்ணம்.

கடைசியில் ஒரு நாள்... அந்த மிருகம் அவன் கண்ணில் தென்பட்டது. அவனது தேடலின் தீவிரத்தால் கவரப்பட்ட கடவுள் சிங்கத்தின் தலையுடனும் மனித உடலுடனும் அவன் கண் முன்னே காட்சி அளித்தார்.

"ஆஹா... மாட்டிக் கொண்டாயா, உன்னை விட மாட்டேன்" என்று அலறியபடி தன் வலையை வீசினான். பரம்பொருள் அந்த வலையில் கட்டுண்டார். அவரைப் பிடித்து இழுத்தவாறே, முனிவரிடம் ஓடினான்.

"முனிவரே, இதோ நீங்கள் கேட்ட பரம்பொருள். நீங்கள் சொன்ன அதே அடையாளம். சிங்கத்தின் தலை, மனித உடல். என் வலையில் சிக்க வைத்துவிட்டேன்..." என்று கூத்தாடினான்.

முனிவருக்கு அதிர்ச்சி. அவனையும் அவன் வலையையும் பார்த்தார். வலை ஒரு உருவத்தைச் சுற்றியிருப்பது போன்ற தோற்றம் தெரிந்தது. அந்த வலைக்குள் இருக்கும் உருவம் அவர் கண்ணுக்குத் தெரியவில்லை. ஆனால் அவனுக்குப் புரிந்து விட்டது. வலைக்குள் இருக்கும் உருவம் எது என்பது அவருக்குப் புரிந்து விட்டது.

வேடனைப் பார்த்தார். அவன் இத்தனை நாட்களும் குளிக்கவில்லை, பூஜை செய்யவில்லை, சாப்பிடவில்லை. தண்ணீர் கூடக் குடித்திருப்பானா என்பது சந்தேகம் தான். அவன் முழு உடலும், ஒவ்வொரு அணுவும் தாம் சொன்ன பரம்பொருளைத் தேடுவதிலேயே ஈடுபட்டது என்பதைப் புரிந்து கொண்டார்.

வேடனின் கண்ணுக்குக் கடவுள் தெரிகிறார். அவனுக்காகக் கடவுள் சிங்க முகம், மனிதத் தலையுடன் காட்சி தந்து விட்டார் என்பது அவருக்குப் புரிந்தது. அவனுடைய தவம் தம்முடைய தவத்தை விட மேலானது என்பதும் புரிந்தது.

முனிவரின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது அவர் வேடனின் கால்களில் விழுந்தார்.

4

கத்தரிக்கோலை விட ஊசியே மேல்!

"உலகத்தை வெறுப்பது ஆன்மிகம் அல்ல; உலகத்தை அறிந்து கொண்டு, அதற்குள் வாழ்ந்து, தங்களையும், உலகத்தையும் ஒருசேர வளர்த்துக் கொள்வதே ஆன்மிகம்."

- குன்றக்குடி அடிகளார்*

"'ஒப்பிலாத சமுதாயம்'
தனித்திருந்தவன்
பசித்திருந்தவன்
விழித்திருந்து கண்ட கனா!...
அங்கே
சமயங்களெல்லாம்
தைக்கின்ற நூலாகும்
கத்தரிக் கோல்களின்
காரியத்தைச் செய்யாது
இனிய கீதை
இந்துக்களையும்
கீர்த்திமிகு பைபிள்
கிறித்துவர்களையும்
முதிர்ந்த குர்ஆன்
முஸ்லிம்களையும்
உற்பத்தி செய்யாமல்
மனிதர்களை உருவாக்கும்" (நேயர் விருப்பம், பக்.80;88)

* எங்கே போகிறோம்?, பக்.159-160.

என மொழிவார் கவிக்கோ **அப்துல் ரகுமான்**. இவ் விழுமிய சிந்தனைக்கு உயிருள்ள இலக்கியமாகத் திகழும் ஓர் உண்மை நிகழ்ச்சி இங்கே மனங்கொளத் தக்கதாகும்.

ஓர் ஊரிலே தையற்காரர் ஒருவர் இருந்தார். அவர் அதிகம் படிக்காதவர்; ஆனால் கேள்வி ஞானத்திலும் இறை அன்பிலும் சிறந்தவராக விளங்கினார். ஆகவே அவ்வூர் மக்கள் தங்கள் பிரச்சினைகளுக்காக அவரிடம் சென்று, நல்ல நியாயமான தீர்வுகளைப் பெறுவதுடன் மன அமைதியையும் பெற்றுச் செல்வது வழக்கம்.

அவருடைய சொல்லும் செயலும் ஞானம் நிரம்பியன வாக இருக்கும். அவருடைய புகழ் எங்கும் பரவி இருந்தது. இதைக் கேள்விப்பட்ட அவ்வூர் அரசன், அவரைத் தன் அரண் மனைக்கு வரும்படி அழைப்பு விடுத்தான். அங்கு அவருக்குச் சிறப்பான வரவேற்பு கொடுத்து, அவரைச் சிறப்பிக்கவும் விரும்பினான்.

அரசனின் விருப்பத்துக்கு இணங்கி ஞானியும் அரண் மனைக்கு வந்தார். அரசன் அவருக்கு, அவரது தொழிலைக் குறிக்கும் வண்ணமாகத் தங்கத்தில் செய்து, வைரம், முத்துக்கள் ஆகியன பதித்த கத்தரிக்கோல் ஒன்றைப் பரிசாக அளித்தான். ஞானியோ அந்தப் பரிசை ஏற்க மறுத்தார். வியப்படைந்த அரசன், "ஞானியாரே, இது மிகவும் விலையுயர்ந்த பரிசு. இதை ஏன் ஏற்க மறுக்கிறீர்கள்? இதை விட மேலான பரிசு வேறு ஏதாவது வேண்டுமா? அப்படியானால் அது என்னவென்று எனக்குச் சொல்லுங்கள். உடனே அதை உங்களுக்கு வழங்க உரிய ஏற்பாடுகளைச் செய்கிறேன்" என்றான்.

ஞானி, "ஆம் அரசே! எனக்கு இந்தக் கத்தரிக்கோல் வேண்டாம். ஒரு சிறிய ஊசியை எனக்குப் பரிசாக அளியுங்கள். அதுவே நான் விரும்பும் பரிசு" என்றார்.

மன்னனுக்கோ ஆச்சரியம் தாங்க முடியவில்லை. "ஞானியே, உங்கள் விருப்பம் மிகவும் புதுமையாக உள்ளதே! விலை மதிப்பற்ற இந்தத் தங்கக் கத்தரிக்கோலை விட, நீங்கள் கேட்கும் ஊசி எவ்விதத்திலே உயர்ந்தது?" என்று கேட்டான்.

"மன்னா! நீங்கள் தர விரும்பும் கத்தரிக்கோல் விலை மதிப்பற்றதுதான். ஆனால் அதன் பணி வெட்டுவதே! ஆனால்,

ஊசியோ வெட்டுண்டதை இணைத்து ஒன்றுசேர்த்திடும் உயர்ந்த பணியைச் செய்கிறது. நான் வெட்டுவதை அல்ல; இணைப்பதை மட்டுமே விரும்புபவன்" என்றார்.

இதைக் கேட்ட அரசன். ஞானி விரும்பிய பரிசை அவருக்கு வழங்கியதுடன், புதியதோர் செய்தியை உணர்ந்து கொண்ட மகிழ்ச்சியில் திளைத்தான்.

இக்கதையில் வரும் ஞானியைப் போல நாம் அன்பினால் உலகில் அனைத்தையும் - வாழ்வில் அனைவரையும் - இணைப் பவர்களாக மாறுவோம்; பகைமை உணர்வினை வெட்டிச் சாய்த்து, அதற்குத் தடித்த முற்றுப்புள்ளியை வைப்போம். அப்படிச் செய்தால், வாழ்வில் நமக்கு எவ்வளவு தான் வசதியும் வாய்ப்பும் கிடைக்கும் நிலை வந்தாலும், அன்பு என்னும் இணைப்புக்காக நாம் எதனையும் - எல்லாவற்றையும்- துறந்து விடவும் தயாராக இருப்போம்.

பாட்டுக்கொரு புலவர் **பாரதியார்** குறிப்பிடுவது போல், பகைவனுக்கும் அருளும் நன்னெஞ்சத்துடன், எப்போதும் அன்பு மயமான ஓர் அணுகுமுறையைப் பின்பற்றி வாழ்வோம் ஆயின், நிச்சயமாக நாம் வாழும் இம் மண்ணுலகம் புதிய பூமியாய், இன்பம் விளையும் பூந்தோட்டமாய் மாறி விடும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

5

வாழ்வில் எல்லாம் இன்ப மயமே!

"அனைத்தையும் இனிய தேனாய் மாற்று; தெய்விக வாழ்வின் விதி இதுவாகும்."

- அரவிந்தர்*

வாழ்விலே நாம் நினைப்பதெல்லாம் நினைத்த படியே நடக்க வேண்டும் என எதிர்பார்க்கக் கூடாது; நடப்பதையே நினைப்பது என்பதும் இயலாது. கவியரசன் **கண்ணதாசன்** ஒரு திரை இசைப் பாடலில் குறிப்பிடுவது போல், "நினைப்ப தெல்லாம் நடந்து விட்டால் தெய்வம் ஏதுமில்லை! நடந்ததையே நினைத்திருந்தால் அமைதி என்றும் இல்லை!' (திரை இசைப் பாடல்கள்: இரண்டாது தொகுதி, ப.343). எந்தச் சூழலையும் வாழ்வில் மகிழ்ச்சியோடு அணுகக் கற்றுக் கொள்ள வேண்டும்; இப் பண்பு கைவரப் பெற்றால் எந்தச் சூழலையும் இன்ப மயமாக்கிவிட முடியும். இல்லாவிட்டால், வாழ்வில் மகிழ்ச்சி யான சூழல்கள் வாய்த்தால் கூட, அதில் ஏதாவது துக்கம் இருந்துகொண்டே தான் இருக்கும். 'இன்னாது அம்ம இவ்வுலகம்; இனிய காண்க இதன் இயல்புணர்ந்தோரே' (புறநானூறு 194) என்னும் சங்கச் சான்றோர் **பக்குடுக்கை நன்கணியாரின்** வாக்கு வாழ்க்கையில் அனைவரும் பின்பற்ற வேண்டிய நெறி ஆகும்.

இதனை உணர்த்தும் வகையில் முகநூலில் (Facebook) கண்ட ஓர் உண்மை நிகழ்ச்சி:

புத்தரின் தலைமை மடாலயத்தில் நிகழ்ந்த ஒரு சுவையான நிகழ்ச்சி. அடிப்படை சன்னியாசப் பயிற்சியை வெற்றிகரமாக முடித்த சந்நியாசிகள், மக்களுக்குத் தியானத்தைக் கற்றுத் தந்து,

---

* ஸ்ரீஅரவிந்தர் சிந்தனைப் பொறிகள், ப.91.

அவர்களை முன்னேற்றுவதற்காக நாடு முழுவதும் பணியாற்றப் புறப்படும் நேரம் வந்தது.

அதில் **பூர்ணகாஷ்யபா** என்னும் சன்னியாசிக்கு மட்டும் எங்குச் செல்வது என்பது சொல்லப்படவில்லை.

பூர்ணகாஷ்யபா புத்தர் பெருமானிடமே நேரடியாகச் சென்று கேட்டார்: "நான் எங்குச் செல்லட்டும்?"

புத்தர் பெருமான் சிரித்தபடியே சொன்னார்: "நீயே அதைத் தேர்வு செய்து கொள், அப்பா!"

இந்தியாவின் ஒரு குறிப்பிட்ட பகுதிக்குத் தாம் செல்ல விரும்புவதாகச் சொன்னார் பூர்ணகாஷ்யபா.

சீடனைப் பார்த்து மிகவும் வியந்தவராகப் புத்தர் பெருமான் கேட்டார்: "அந்தப் பகுதிக்கா? அங்கே வாழும் மனிதர்கள் மிகவும் முரடர்கள். சின்னச் சின்னப் பிரச்சினைக் கெல்லாம் அடிதடி சண்டையில் இறங்குவார்கள். கொஞ்சம் கூடப் பக்தியோ, தியான உணர்வோ இல்லாதவர்கள். இப்படிப் பட்ட பொல்லாதவர்களிடமா நீ போக விரும்புகிறாய்?'

'ஆமாம்' என்று தைரியத்தோடு சொன்ன சீடனிடம் புத்தர் சொன்னார்: "உன்னிடம் மூன்று கேள்விகள் கேட்க விரும்புகின்றேன். இந்த மூன்று கேள்விகளுக்குச் சரியான பதில் சொல்லிவிட்டால் நீ போகலாம்."

"ம்..."

முதல் கேள்வி: "அங்கே சென்ற பிறகு உன்னை வரவேற்பதற்குப் பதில் அவர்கள் உன்னை அவமானப் படுத்தினால் என்ன செய்வாய்?"

"மிகவும் மகிழ்ச்சி அடைவேன். அவர்கள் என்னை அடிக்கவில்லை, உதைக்கவில்லை, திட்டுவதோடு நிறுத்திக் கொண்டார்களே, மிகவும் நல்லவர்கள் என்று நன்றி சொல்வேன்."

இரண்டாவது கேள்வி: "ஒரு வேளை திட்டாமல் அடித்து உதைத்தால் என்ன செய்வாய்?"

"அவர்கள் மிகவும் நல்லவர்கள். அதனால்தான் என்னைக்

கொல்லாமல் விட்டுவிட்டார்கள், வெறுமனே அடித்ததோடு நிறுத்திக் கொண்டார்களே என மகிழ்ச்சி அடைவேன்.”

மூன்றாவது கேள்வி: “ஒருவேளை அவர்கள் உன்னைக் கொன்றுவிட்டால் என்ன செய்வாய்?”

“ஆஹா, இன்னும் மகிழ்ச்சி அடைவேன். மொத்தமாக இந்த வாழ்க்கையில் இருந்தே எனக்கு விடுதலை அளித்து விட்டார்கள். இனி எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை என்று மிகவும் மகிழ்ச்சி அடைவேன்” என்று பூர்ணகாஷ்யபா சொன்னதும்,

“நன்றாகத் தேறிவிட்டாய் அப்பா. அங்கு மட்டுமல்ல, எங்குச் சென்றாலும் நீ வாழ்ந்து விடுவாய். எதனாலும் இனி உன்னை வீழ்த்த முடியாது. **எப்போதும் மகிழ்ச்சியாய் இருக்கும் பக்குவத்தைப் பெற்றுவிட்டாய்.** எங்குச் சென்றாலும் நன்றாக இருப்பாய் அப்பா, போய் வா!” என்று வாழ்த்தி அனுப்பி வைத்தார் புத்தர் பெருமான்.

வாழ்வில் நாம் வளர்த்துக் கொள்ள வேண்டியது பூர்ணகாஷ்யபாவின் இம் மனப் பக்குவத்தையே ஆகும். இம் மனப் பக்குவம் கைவரப் பெற்றால் **வாழ்வில் எல்லாம் இன்ப மயம் ஆகும்;** துன்பமும் முடிவில் நமக்கு இன்பம் தர வந்ததாகவே தோன்றும்.

6

இறைவன் வகுத்த நியதி

"கடவுள் மனிதனுக்குச் சொல்லுகிறார், 'நான் உன்னைக் குணப்படுத்துகிறேன், அதனால் துன்புறுத்துகிறேன்; உன்னிடம் அன்பு கொண்டிருக்கிறேன், அதனால் தண்டிக்கிறேன்!'"

-தாகூர்*

கவிஞர் கண்ணதாசன் தம் திரை இசைப் பாடல் ஒன்றில் இப்படிக் கூறுகிறார்:

"இன்பத்தில் துன்பம் துன்பத்தில் இன்பம்
இறைவன் வகுத்த நியதி"

(திரைஇசைப் பாடல்கள்: முதல் தொகுதி, ப.311)

இங்கே என்ன சொல்ல வருகிறார் கவிஞர்? 'இன்பத்தில் துன்பமாம், துன்பத்தில் இன்பமாம்' - வேடிக்கையாக இல்லை? இது இறைவன் வகுத்த நியதியாம்! வேறு வேலையே இல்லை இந்தக் கவிஞருக்கு! பக்தி முற்றிப் போனால் இப்படித்தான் ஆகும் போல் தெரிகிறது! இப்படித்தான் உங்களைப் போலவே நானும் நீண்ட காலமாக எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால், கிருபானந்த வாரியார் சுவாமிகளின் வாழ்க்கையில் நடந்த அனுபவம் ஒன்றைப் படிக்க நேர்ந்த போது தான் எனக்குத் 'துன்பத்தில் இன்பம்' என்ற தொடரின் உண்மையான பொருள் விளங்கியது. இதோ, வாரியார் சுவாமிகளின் சொற்களிலேயே அந்த அனுபவம் பற்றிக் காண்போம்:

"வள்ளி நாயகியார் அவதரித்த தலம் வள்ளி மலை. அங்கு நான் திருப்பணி செய்து கொண்டிருந்தேன்.

காலை 9 மணிக்கு வள்ளி மலையில் கால்கோள் விழா, தந்தி கொடுப்பதற்கும் வழியில்லை; காட்பாடி இரயில்

---

* மொழிபெயர்ப்பு: பெ.தூரன், பட்டிப் பறவை, ப.19.

கிடைக்காமையினால் தீயில் விழுந்து போன புழுப்போல் மிகவும் தவித்துவிட்டேன்.

அடுத்து, விடியற்காலை 5.30 மணிக்குத் திருச்சிக்குப் போகும் இரயிலில் முதல் வகுப்பில் ஏறினேன். 'வள்ளி நாயகி! உன்னுடைய திருப்பணிக்குப் போகும் எனக்கு இத்தகைய இடர்ப்பாடு நேர்ந்ததே! உனக்குக் கருணை இல்லையா? என்னை இந்த வேதனைக்கு ஆளாக்கினையே அம்மா! கால்கோள் விழா என்ன ஆயிற்றோ? அத்திருப்பணிக்கு நான் தானே தலைவன்? என்னை நம்பிப் பலரும் வந்திருப்பார்களே! நான் போகவில்லையானால் அவர்கள் என்ன நினைப்பார்களோ? தகவல் கொடுக்கவும் வழி இல்லையே!" என்று புலம்பிக்கொண்டே இரயிலில் பிரயாணம் செய்தேன். பகல் 12 மணிக்குத் திருச்சி வந்தேன்.

திருச்சியில் முதல் வகுப்புப் பிரயாணிகள் தங்கும் அறையில் நீராடி வழிபாடு செய்தேன். மாலை 3.30-க்கு இரயில் ஏறி இரவு பத்து மணிக்கு மதுரை சேர்ந்தேன். அப்பொழுது நான் மதுரையில் வசித்துக் கொண்டிருந்தேன். வீடு முழுவதும் மழையால் நனைந்திருந்தது. சாய்வு நாற்காலியில் படுத்துறங்கினேன்.

பொழுது புலர்ந்தது. காலை 7.15 வானொலிச் செய்தியில் அரியலூரில் இரயில் விழுந்து பலர் மாண்டு விட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டது. அதைக் கேட்டு நான் திடுக்கிட்டேன்.

என்னுடைய திட்டத்தின்படி இரயில் விழுப்புரத்தில் கிடைத்து நான் வள்ளிமலைக்குப் போயிருப்பேனேயானால் திரும்பி வரும் பொழுது அந்த இரயிலில் வந்து அரியலூரில் விபத்துக்கு ஆளாகி இருப்பேன். கருணையே வடிவான அந்தக் கந்தப் பெருமான் இன்னும் சில திருப்பணிகளை என்னைக் கொண்டு செய்விக்கும் பொருட்டு இந்த மாறுதலைச் செய்தார். விழுப்புரத்தில் இரயில் கிடைக்காத பொழுது தெய்வத்தை நொந்து கொண்டேனே! இறைவனுடைய திருவருட் செயலை யாரே அறிவார்?"

(வாரியார் விருந்து, குமுதம்: 07.09.1995, இலவச இணைப்பு)

உள்ளத்தை உருக்கும் ஓர் உண்மை நிகழ்ச்சி:

விம்பிள்டன் டென்னிஸ் வீரர் ஆர்தர் ஆஷ் (Arthur Ashe)

உடலில் இரத்தம் செலுத்தப்பட்ட போது மருத்துவமனையின் கவனக் குறைவால் அவருக்கு எய்ட்ஸ் வந்துவிட்டது.

மரணத்தின் வாயிலில் இருந்த அவர் முழு நலம் பெறவேண்டி உலகின் பல பகுதிகளில் இருந்தும் அவரது ரசிகர்கள் கடிதங்கள் எழுதினார்கள்.

அவர்களுள் ஒருவர், "கடவுள் ஏன் இந்தக் கொடிய நோய்க்கு உங்களைத் தேர்ந்தெடுத்தார்?" என்று கேட்டிருந்தார்.

அதற்கு ஆர்தர் ஆஷ், "நண்பரே, உலகில் 5 கோடிக் குழந்தைகள் டென்னிஸ் விளையாடக் கற்றுக் கொள்கிறார்கள். அவர்களுள் 50 லட்சம் பேர் டென்னிஸ் போட்டியில் கலந்து கொள்கின்றனர். 50 ஆயிரம் பேர் தேசிய அளவில் ஆடுகின்றனர். அவர்களுள் 5 ஆயிரம் பேர் கிராண்ட் ஸ்லாம் போட்டியில் விளையாடத் தகுதி பெறுகின்றனர். 50 பேர் விம்பிள்டனில் விளையாடுகின்றனர். அவர்களுள் 4 பேர் அரை இறுதிக்குத் தகுதி பெறுகின்றனர். 2 பேர் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறுகின்றனர்.

நான் பரிசுக் கோப்பையைக் கையிலேந்தி நின்ற போது இறைவனிடம், 'இறைவா, என்னை ஏன் இதற்குத் தேர்ந் தெடுத்தாய்?' என்று கேட்கவில்லை. இப்போது துன்பத்தில் துடித்துக் கொண்டிருக்கும் போதும், 'ஏன் என்னைத் தேர்ந் தெடுத்தாய்?' என்று இறைவனிடம் முறையிடுவது நியாய மில்லை என்றே நினைக்கிறேன்" என்றார்.

"இறைவா, என்னை
இன்பத்தில் சிரிக்க வைத்தாய்,
துன்பத்தில் அழ வைத்தாய்;
வெற்றியில்
மனிதனாக்கினாய்,
தோல்வியில்
என்னைச் செப்பனிட்டாய்;
நீயே என்னை வாழ வைத்தாய்,
நீயே எனக்கு ஓய்வும் அளித்தாய்."

7

‘மனம் இருப்பவரே பணக்காரர்!’

“மனம் என்ற சர்வ சக்தி படைத்த கருவி நம் கையில் இருக்கும் போது நாம் எதற்கு அஞ்ச வேண்டும்?”

*- **கி. நாச்சிமுத்து****

*பணக்காரர் யார்? வங்கிக் கையிருப்பு மிகுதியாக உள்ளவரா? வீடு வாசல், தோட்டம் துரவு, மாடி மனை ஆகியவற்றைச் சொந்தமாக உடையவரா? சங்கச் சான்றோர் **பாண்டியன் அறிவுடை நம்பி** குறிப்பிடுவது போல், ‘படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும் உடைப் பெருஞ் செல்வம்’ (புறநானூறு, 188) படைத்தவரா? இல்லவே இல்லை. மிகச் சரியாகச் சொல்லுவது என்றால், **பணம் படைத்தவர் மட்டும் பணக்காரர் அல்லர்; மனம் இருப்பவர் யாரோ, அவரே உண்மையில் பணக்காரர்.** இதனைப் பறைசாற்றும் ஓர் உண்மை நிகழ்ச்சி:*

“அந்தச் சிறிய சர்ச்சுக்கு வெளியே நின்று, ஒரு குட்டிப் பெண் அழுது கொண்டிருந்தாள். அவள் பெயர் ‘ஹட்டிமே வியாட்.’

‘ஏன் அழுகிறாய்?’ என்று அங்கு வந்த பாதிரியார் கேட்டார்.

‘உள்ளே இடமில்லை என்று கூறி என்னை உள்ளே விட மாட்டேன் என்கிறார்கள்’ என்று தேம்பினாள் அவள்.

ஏழ்மையின் காரணமாகச் சமுதாயத்தில் பின்தங்கிய வர்களின் குழந்தைகள் பள்ளிகளுக்குப் போகாமல் கெட்ட லைந்து கொண்டிருந்தார்கள். அப்படிப்பட்டவர்களுக்குச்

---

* *கரையே(ற்)றுங் கருத்துக்கள், ப.95.*

சமயக் கல்வியை போதிக்க சர்ச்சுகளில் ஏற்பாடு செய்யப்படும் மரபு சாராக் கல்வியை **'ஞாயிறு பள்ளி'** என்பர்.

அவளை அழைத்துச் சென்று இடம்பிடித்து அமர வைத்தார் பாதிரியார்.

அவளுக்கு ஒரே மகிழ்ச்சி!

அன்று இரவு படுக்கப் போகும்போது, 'என் போன்ற துரதிருஷ்டசாலிகளுக்கு இறைவனை வணங்கப் போதுமான இடமில்லையே' என்ற எண்ணம் அவளைச் சுற்றிச் சுற்றி வந்தது.

இரண்டு ஆண்டுகள் கழிந்தன.

வறுமை அவளை வாட்டி எடுத்ததில் அவள் ஓர் எலும்புக் கூடு போலானாள். ஐயோ! அந்தச் சிறுமி ஒருநாள் இறந்தே விட்டாள்.

அவளை நேசித்த அந்தப் பாதிரியாரையே அழைத்து வந்து அவளது இறுதிச் சடங்கை நடத்த வேண்டினர் அவளது பெற்றோர்.

அவளது உடலைப் புதைப்பதற்காக எடுத்த போது, அவளது கையில் ஒரு அழுக்கான சிவப்பு வண்ணப் பை இருந்தது. அதில், 57 சென்ட் நாணயங்களும் ஒரு காகிதமும் இருந்தது. அழகான கையெழுத்தில், **'நமது சிறிய சர்ச்சைப் பெரிதாகக் கட்டி, பலர் ஞாயிறு பள்ளிக்கு வருவதற்குச் சேமித்து வருகிறேன்'** என எழுதப்பட்டு இருந்தது.

அதைப் படித்ததும் பாதிரியாருக்குக் கண்ணீர் பொங்கியது.

சில அன்பர்களிடம், 'இந்தச் சிறுமியின் கனவை நாம் நனவாக்க வேண்டும்; அதற்கான நிதியைத் திரட்ட முனைவோம்' என்று கேட்டுக் கொண்டார்.

இந்த விபரம் ஒரு பத்திரிகைக்குத் தெரிய வர, அந்தப் பெண்ணின் கதையை முக்கியச் செய்தியாக வெளியிட்டது.

அதைப் படித்த ஒரு வீட்டு மனை வியாபாரி, தம்மிடம் இருந்த நிலத்தைப் பெரிய சர்ச் கட்டுவதற்காக விற்பதற்கு முன்வந்தார். ஆயிரக்கணக்கான டாலர்கள் மதிப்புள்ள அந்த நிலத்தை அவள் சேர்த்து வைத்த 57 சென்ட்டுகளுக்குக்

கொடுத்தார். இந்தச் செய்தி பரவி, சர்ச் கட்டுவதற்காக ஐந்தே வருடத்தில் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் டாலர் நன்கொடை குவிந்தது. அந்தக் காலத்தில் இது எவ்வளவு பெரிய தொகை! இப்படி உருவானதுதான் அமெரிக்காவில் பிலடெல்பியாவில் உள்ள **'டெம்பிள் பாப்டிஸ்ட் சர்ச்.'**

ஒரே சமயத்தில் 3,300 பேர் அமரும் அளவுக்குப் பிரம்மாண்டமான அந்த சர்ச்சுடன் இணைந்துள்ளது **'டெம்பிள் யுனிவர்சிடி.'**

ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகள் இன்று இதில் படிக்கிறார்கள்; கூடவே இலவச மருத்துவ மனை, நூற்றுக் கணக்கான சிறுவர்கள் படிக்க ஞாயிறு பள்ளி எல்லாம் உண்டு.

இந்தக் கட்டடங்களில் உள்ள ஓர் அறையில், அந்தப் பிரம்மாண்டமான வளாகம் உருவாகக் காரணமான ஹட்டி மே வியாட்டின் படம் உள்ளது. அதை அடுத்து அவள் அடிக்கோலிட்ட பணியை முடித்து வைத்த பாதிரியார் டாக்டர் **ரஸ்ஸல் கான்வெல்**லின் படமும் வைக்கப்பட்டுள்ளது.

ஏழையாய்ப் பிறந்ததற்காக வருத்தப்படாதீர்கள். மனம் இருப்பவர் யாரோ அவரே பணக்காரர்."

'தேவனின் வார்த்தை' இதழில் வெளிவந்த இவ்வரிய உண்மை நிகழ்ச்சியினைத் **'தினமலர்'** நாளிதழ் (21.04.2012) தனது 'ஆன்மிக மல'ரில் மறுவெளியீடு செய்தது குறிப்பிடத் தக்கது. இந்நிகழ்வில் இருந்து, **'அறம் செய விரும்பு'** (ஔவையார்), **'மனம் இருந்தால் மார்க்கம் உண்டு'** (பழமொழி), **'செல்வம் என்பது சிந்தையின் நிறைவே'** (குமரகுருபரர்) என்னும் சான்றோர் வாக்குகள், **வெறும் வார்த்தைகள் அல்ல, அட்சர இலட்சம் பெறத்தக்க அனுபவ உண்மைகள்** என்பது தெள்ளத் தெளிவாகப் புலனாகின்றது.

8

ஔவைத் தமிழாய் வாழ்க்கை இனிக்க...

"கடவுள் அநேக பொக்கிஷங்களைக் கொடுத்திருக்கிறார். ஆனால் அவற்றை ஒருவன் தானே தோண்டித் தேடிப் பெற வேண்டும்."

- ஓஷோ*

அண்மையில் ஒருநாள் காலைப் பொழுதில் நடைப் பயிற்சியின் போது கணீரென்று வெங்கலக் குரலில் இசைத்த ஓர் இறை வணக்கப் பாடலைக் கேட்டேன். குரலுக்குச் சொந்தக்காரர் உலகத் தமிழர்களை எல்லாம் தம் தனித்தன்மை வாய்ந்த குரலால் கட்டிப் போட்ட பெரியவர் **நாகூர் ஹனீபா** அவர்கள். பாடல் 'இறைவனிடம் கையேந்துங்கள் - அவன் இல்லை என்று சொல்லுவதில்லை' எனத் தொடங்கும் அற்புதமான பாடல். பாடல் முழுவதையும் நின்று கேட்டேன். மாணிக்கவாசகர் திருவண்டப் பகுதியில் பாடுகின்ற.

"... ... உள்ளகம் ததும்ப,
வாக்கிறந்து, அமுதம் மயிர்க்கால் தோறும்
தேக்கிடச் செய்தனன்; கொடியேன் ஊன்தழை
குரம்பை தோறும் நாயுடல் அகத்தே
குரம்பைகொண்டு இன்தேன் பாய்த்தி, நிரம்பிய
அற்புத மான அமுத தாரைகள்
எற்புத் துளைதொறும் ஏற்றினன்; உருகுவ(து)
உள்ளங் கொண்டுஓர் உருச்செய் தாங்குஎனக்(கு)
அள்ளூறு ஆக்கை அமைத்தனன்" (169 - 177)

---

* ஓஷோவின் ஞானக் கதைகள், ப.98.

என்ற உணர்வு நிலையினை அனுபவ வடிவில் அப்போது பெற்றேன்; அந்த அனுபவத்தையே உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

மனிதன் **'சின்னாள் பல்பிணிச் சிற்றறிவு'** பெற்றவன்; இறைவனோ தன்வயத்தன் ஆதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவு இல் ஆற்றல் உடைமை, வரம்பு இல் இன்பம் உடைமை என்னும் **எண் குணங்களை** உடையவன். மனிதன் இறைவனின் அளப்பரிய ஆற்றலையும் அரும்பண்புகளையும் உள்ளபடி உணராமல், யார் யாரிடமோ, எது எதற்காகவோ கையேந்தி நிற்கிறான்; அவர்கள் அவனைக் கண்டுகொள்ளாதது மட்டுமன்றி, இல்லை என்று சொல்லி ஒரேயடியாகக் கைவிரித்தும் விடுகின்றனர். உண்மையில் மனிதன் செய்ய வேண்டியது என்ன தெரியுமா? இதோ பாடல் உணர்த்தும் வழிகாட்டுதல்:

> **"இறைவனிடம் கையேந்துங்கள் - அவன்**
> **இல்லை என்று சொல்லுவதில்லை!**
> **பொறுமையுடன் கேட்டுப் பாருங்கள் - அவன்**
> **பொக்கிஷத்தை மூடுவதில்லை!"**

மனிதன் அவசரமோ ஆத்திரமோ கொள்ளாமல், பொறுமை யுடன் கேட்டுப் பார்த்தால் போதும்; இறைவன் ஒரு நாளும் பொக்கிஷத்தை மூடுவதே இல்லை.

இறைவன் 'இல்லை என்று சொல்லும் மனம் இல்லாதவன்; ஈடுஇணை இல்லாத கருணை உள்ளவன்; இன்னல் பட்டு எழும் குரலைக் கேட்கின்றவன்; எண்ணங்களை, இதயங்களைப் பார்க்கின்றவன்!' ஆம்; இறைவன் தன் காது கொடுத்துக் கேட்பதெல்லாம் இன்னல் பட்டு எழும் குரலைத் தான்! அவன் பார்ப்பதெல்லாம் தூய எண்ணங்களையும் எளிய இதயங் களையும் தான்! பதவிகளையோ பட்டங்களையோ, ஆடை அணிகலன்களையோ ஆடம்பரங்களையோ அல்ல!

அல்லல்பட்டு ஆற்றாது அழுது புலம்பித் திரியும் மனிதர் களுக்குப் பாடலின் அடுத்த சரணம் கற்றுத் தரும் வாழ்க்கைப் பாடம் அடிப்படையானது. 'அல்லல் படும் மாந்தர்களே!' என விளித்து, 'அயராதீர்கள்! எல்லாம் வல்ல இறைவனின் பேரருளை

நம்பி நில்லுங்கள்!' என அறிவுறுத்தி, இறைவன் எப்படி எல்லாம் திக்கற்றவர்களுக்குத் துணை நிற்பான் என்பதையும் பாடல் நயமாக உணர்த்துகின்றது.

"ஆசையுடன் கேட்பவர்க்கு அள்ளித் தருபவன்!
அல்லல் துன்பம் துயரங்களைக் கிள்ளி எறிபவன்!
பாசத்தோடு யாவரையும் பார்க்கின்றவன்!
பாவங்களைப் பார்வையினால் மாய்க்கின்றவன்!"

'அள்ளித் தருபவன்' - 'கிள்ளி எறிபவன்' - 'பாசத்தோடு யாவரையும் பார்க்கின்றவன்' - 'பார்வையினாலே பாவங்களை மாய்க்கின்றவன்!' - இறைவனின் பேரருளையும் பேராற்றலையும் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் அழகுத் தொடர்கள் இவை! 'இறைவனிடத்தில் உங்கள் குறையனைத்தும் சொல்லிக் காட்டுங்கள்! அன்பு நோக்குத் தருக என்று அழுது கேளுங்கள்!' என இறைவனிடத்தில் மனிதன் நடந்து கொள்ள வேண்டிய முறையினையும் இரத்தினச் சுருக்கமாக மொழிகின்றது பாடல்.

பாடலின் நிறைவுச் சரணம் முத்தாய்ப்பானது. இறைவன் 'தேடும் நேயர் நெஞ்சங்களில் குடியிருப்பவன்'; 'தேடாத மனிதர்க்கும் உணவளிப்பவன்'; 'வாழும் இதயம் மலர்வதற்கு வழிவகுப்பவன்'; 'வாஞ்சையோடு யாவருக்கும் துணை நிற்பவன்!'

"அலை முழங்கும் கடல் படைத்து அழகு பார்ப்பவன்
அலையின் மீதும் மலையின் மீது ஆட்சி செய்பவன்
தலைவணங்கிக் கேட்பவர்க்குத் தந்து மகிழ்பவன்
தரணி எங்கும் நிறைந்து நிற்கும் மகா வல்லவன்!"

என இறைவனின் அருளாட்சித் திறத்தினையும், தரணி எங்கும் நிறைந்து நிற்கும் தனிப்பெரும் தகைமையினையும் நிரந்தினிது கூறி நிறைவு பெறுகின்றது பாடல்.

நாள்தோறும் புலர்காலைப் பொழுதிலும் இரவின் மடியில் தலைசாய்க்கும் வேளையிலும் இப்பாடலைப் **பொருள் உணர்ந்து, மனம் கலந்து** கேட்டால் போதும்; கேட்பவர் மனத்தில் அமைதியும் ஆறுதலும் இன்பமும் ஈடிலா உணர்வும் ஊக்கமும் எழுச்சியும் ஏற்றமும் ஒருமைப்பாடும் ஒவியமாய்க் கொலுவீற்றிருந்து, **வாழ்க்கை ஔவைத் தமிழாய் இனிக்கும்!**

9

மரணமும் மங்கலமான நிகழ்ச்சியே!

"மரணம் ஓர் அவசியமான முடிவு,
அது வரும்போது, வரும்."

-ஷேக்ஸ்பியர்*

இன்று உலக அளவில் பரவலாகப் பேசப்படுவது 'ஜென்', 'ஜென்' ஒரு கொள்கையோ, கோட்பாடோ அல்ல. அது ஒரு தத்துவமும் அல்ல; வாழ்க்கை முறையும் அல்ல. பின் 'ஜென்' என்றால் என்ன என்கிறீர்களா? 'ஜென்'னாக இருப்பது என்றால் என்ன என்கிறீர்களா? 'ஜென்'னாக இருப்பது என்றால், 'தன்னியல்பில் இருப்பது' என்று பொருள். 'ஜென்' என்பது தியானம்; ஒரு சுய தரிசனம்; தன்னைத்தான் அடையாளம் கண்டு கொள்வது. 'காணாமல் போன தன் மூக்குக் கண்ணாடி, தன் மூக்கின் மேலேயே இருப்பதைக் கண்டுகொள்வது போன்றது ஜென்' என்று அழகாக விளக்குவார் ஓஷோ. இன்னும் சொல்ல வேண்டும் என்றால், 'ஜென்' என்பது ஓர் அழகியல்; அற்புதம்; ஆனந்த தரிசனம்; இயல்பான இயல்பு; சொல்லுக்கு அடங்காத மௌனம்.

'அவனருளாலே அவன் தாள் வணங்கி' என்பது போல், ஒரு ஜென் கதையைக் கொண்டே நாம் 'ஜென்'னைப் பற்றி அறிந்து கொள்ள முயல்வோம்.

ஒரு பெருஞ்செல்வர், செங்காய் என்ற ஜென் ஞானியிடம் தமக்கு ஓர் இறுதி வாசகம் எழுதித் தருமாறு வேண்டுகோள் விடுத்தார்.

அந்தக் காலத்தில் ஜப்பானில் அது ஒரு வழக்கமாக இருந்தது. ஞானிகள், துறவிகள், மகான்கள், பெரியவர்கள் தங்கள்

* மொழிபெயர்த்துத் தொகுத்தவர்: டி.நமச்சிவாயம், ஷேக்ஸ்பியரின் பொன்மொழிகள், ப.15.

மரண வேளையில் சுருக்கமாக எதையாவது சொல்லி விட்டுப் போவார்கள். மக்கள் அந்த மணிவாசகத்தினை ஞானிகளின் வாழ்க்கைச் செய்தியாக, அனுபவ மொழியாகக் கருதிப் பொன்னைப் போல் போற்றி வருவார்கள்.

ஞானம் உள்ளவர்கள் என்றால், சொந்தமாக ஒரு மணிவாசகத்தைச் சொல்லிவிடலாம். மற்றவர்கள் என்ன செய்ய முடியும்? ஞானிகளிடம் இரவலாகக் கேட்டுப் பெறுவார்கள். இந்த முறையில் தான் செல்வர், ஞானி செங்காயிடம் எழுதித் தருமாறு கேட்டார்; ஞானியும் எழுதிக் கொடுத்தார். அதைப் படித்துப் பார்த்த செல்வர் திடுக்கிட்டார்.

"என்ன இது? இப்படி அமங்கலமாக எழுதி விட்டீர்களே?" என்று ஞானியிடம் கேட்டார்.

ஞானி எழுதிக் கொடுத்த வாசகம் இதுதான்.

"தந்தை இறப்பான்

மகன் இறப்பான்

அப்புறம்

பேரன் இறப்பான் - செங்காய்"

செல்வரின் சினத்தைக் கண்ட ஞானி சிரித்தார்.

"இது அமங்கலமான வாசகம் அன்று; மங்கலமான வாசகம்தான். நீங்கள் உயிரோடு இருக்கையில் உங்கள் மகன் இறந்து விட்டால் எப்படி இருக்கும்? உங்கள் பேரன் இறந்து விட்டால் எப்படி இருக்கும்? யோசித்துப் பாருங்கள். அதைவிடத் துயரம் தரக்கூடியது வேறு ஏதாவது உண்டா? அதைவிட அமங்கலமான நிகழ்ச்சி வேறு ஏதேனும் உண்டா? அமங்கலம் என்பது அதுதான். இப்போது நான் எழுதி இருப்பதன் பொருள் என்ன தெரியுமா?

உங்கள் குடும்பம் பாரம்பரியச் சிறப்பு வாய்ந்தது. இதுவரை இருந்து வந்தது போலவே, தந்தை-மகன்-பேரன் என்று வரிசையாக முதுமை அடைந்த பின் மரணம் நிகழ்வது என்பது புனிதமானது அல்லவா? மகிழ்ச்சியானது அல்லவா? அதனால் தான் இப்படி எழுதினேன்" என்று விளக்கினார் ஞானி.

ஒருவருக்கு மரணம் இயல்பாக, அமைதியாக நிகழ்வது

என்பது ஒரு வகையில் பார்த்தால் மங்கலமான நிகழ்ச்சி தானே? உலக வழக்கில் கூட 'நல்ல சாவு' என்று சொல்ல நாம் கேள்விப்பட்டதில்லையா?

இந்த ஜென் கருத்தையே நம் வள்ளுவர் பெருமான் இரண்டு அற்புதமான உவமைகள் வாயிலாக இப்படி விளக்குவார்:

"உறங்குவது போலும் சாக்காடு; உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு." (குறள் 339)

மனித வாழ்வில் மரணம் என்பது ஒருவன் உறங்கச் செல்வது போலவாம்; பிறப்பு என்பது உறக்கத்திற்குப் பின் ஒருவன் கண் விழிப்பது போலவும். அடடா, என்ன அருமை யான கருத்து எளிமையான உவமைகள்! அழகான வெளியீட்டுத் திறம்! 'அட்சர இலட்சம்' பெறத்தக்க அனுபவ மொழி அல்லவா இது?

10

கண்ணதாசனின் கீதோபதேசம்!

"உலகில் இன்பமும் துன்பமும் இணைந்தே இருக்கின்றன. எந்த நேரமும் புன்னகை பூத்துக் கொண்டிருக்கும் அரசனும் இங்கில்லை; எந்த நேரமும் வேதனையில் வாடிக் கொண்டிருக்கும் அடிமையும் இங்கில்லை."

- புத்தர்*

"**ஆ**ம்! ஒரு சினிமாப் பாட்டு என் திசையை மாற்றியது; என் எதிர்காலத்தை நிர்ணயித்தது. நான் தொடர்ந்து போராடுவதற்கான தெம்பையும் தெளிவையும் என்னுள் தோற்றுவித்து, சோர்ந்து போன என் சுவாசப் பையில் பிராண வாயுவை நிரப்பி, எனக்கு உயிர்ப்பிச்சை கொடுத்து என்னைப் புதுமனிதன் ஆக்கியது."

- திரையுலகில் மூன்று தலைமுறை கண்ட கவிஞர் **வாலி** 'நானும் எனது நூற்றாண்டும்' என்ற தலைப்பில் எழுதிய அனுபவத் தொடரில் தந்திருக்கும் ஒப்புதல் வாக்குமூலம் இது. இங்ஙனம் கவிஞர் வாலி வானளாவப் பாராட்டி மகிழும் - மனம் மிகவும் நெகிழும் - சினிமாப் பாட்டு எது என்று கேட்கிறீர்களா?

கவிஞர் **கண்ணதாசன்** எழுதி, **பி.பி.ஸ்ரீனிவாஸ்** பாடி, **'சுமைதாங்கி'** படத்தில் இடம்பெற்று, திரைப்பாடல் வரலாற்றிலேயே தனி முத்திரை பதித்த **'மயக்கமா? கலக்கமா? மனதிலே குழப்பமா?'** என்ற புகழ் பெற்ற பாடல்தான் அது!

எந்தத் துறையிலும் முட்டி மோதி முயன்று பார்த்து, முன்னுக்கு வர முடியாமல் மனம் சோர்ந்து, விரக்தியின் விளிம்பில் நின்று கொண்டிருக்கும் எவரும் அந்தப் பாடலை

---

* ப.ராமஸ்வாமி (தமிழில்), புத்தரின் போதனைகள், ப.43.

ஒரு மந்திரம் போல் மனப்பாடம் செய்யலாம்; வாழ்வில் பின்பற்றி அமைதியும் நிம்மதியும் பெறலாம். அவ்வளவு அருமையான - ஆழமான- அனுபவப் பொருள் பொதிந்த - அதே நேரத்தில் மிக எளிமையான பாடல் அது.

முழுப்பாடலும் இதோ:

"பல்லவி

மயக்கமா? கலக்கமா?
மனதிலே குழப்பமா?
வாழ்க்கையில் நடுக்கமா?

முதல் சரணம்

வாழ்க்கையென்றால் ஆயிரமிருக்கும்;
வாசல்தோறும் வேதனையிருக்கும்;
வந்த துன்பம் எதுவென்றாலும்,
வாடி நின்றால் ஓடுவதில்லை;
எதையும் தாங்கும் இதயம் இருந்தால்
இறுதி வரைக்கும் அமைதி இருக்கும்!

இரண்டாவது சரணம்

ஏழை மனதை மாளிகை யாக்கு;
இரவும் பகலும் காவியம் பாடு;
நாளைப் பொழுதை இறைவனுக் களித்து
நடக்கும் வாழ்வில் அமைதியைத் தேடு;
உனக்கும் கீழே உள்ளவர் கோடி
நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு."

(திரை இசைப் பாடல்கள்: இரண்டாவது தொகுதி, பக்.324-325)

கண்ணதாசன் எழுதிய இந்த அற்புதமான பாடலைப் பொருள் உணர்ந்து, வரி வரியாக உங்கள் மனத்திற்குள் சொல்லிப் பாருங்கள். வாழ்க்கையின் உண்மை படிப்படியாக உங்களுக்குப் புலனாகும்.

வாழ்க்கை என்றால் மயக்கமும் கலக்கமும், மனதிலே

குழப்பமும் நடுக்கமும் இருக்கத்தான் செய்யும்; இவை மட்டு மல்ல. இவை போல் இன்னும் ஆயிரம் இருக்கும். நீங்கள் அடியெடுத்து வைக்கும் வாசல்தோறும் உங்களை வரவேற்க வேதனை தயாராகக் காத்திருக்கும். அப்படியானால், இவற்றிற்கு ஒரு முடிவே இல்லையா? முற்றுப்புள்ளி வைக்கவே முடியாதா? வந்த துன்பம் எதுவென்றாலும், வாடி நின்றால் மட்டும் ஓடி விடாது; எதையும் தாங்கும் இதயம் இருந்தால் இறுதி வரைக்கும் மனத்தில் அமைதி இருக்கும். இதுதான் வாழ்க்கையில் துன்பங்களை - வேதனைகளை- வெற்றி கொள்வதற்கான வழி ஆகும்.

சரி, வறுமையில் வாடி, வதங்கி நிற்கும் ஏழை மனத்தை, எதையும் தாங்கும் இதயமாக மாற்றுவது எப்படி என்று கேட்கிறீர்களா? ஏழை மனத்தை மாளிகை ஆக்குங்கள்; இரவும் பகலும் காவியம் பாடுங்கள்; நாளைய பொழுதை இறைவனுக்கு அளியுங்கள்; நடக்கும் வாழ்வில் அமைதியைத் தேடுங்கள். எங்கிருந்து, எப்படி ஐயா அமைதி கிடைக்கும் என்கிறீர்களா? நண்பரே, நீங்கள் காலுக்குச் செருப்பு இல்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள்; ஆனால் உலகத்தில் பல பேர் கால்களே இல்லாமல் நடமாடிக்கொண்டிருக்கிறார்கள்; கவலையே இல்லாமல் - தங்களுக்குக் கால்கள் இல்லை என்ற எண்ணமும் இல்லாமல் - நம்பிக்கையோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே உங்களுக்கு கால்களைப் படைத்த இறைவனுக்கு நன்றி சொல்லி, நம்பிக்கையோடு உங்களின் ஒவ்வொரு காலடியையும் எடுத்து வையுங்கள்!

“உனக்கும் கீழே உள்ளவர் கோடி
நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு”

கவிஞர் கண்ணதாசனின் இந்தக் கீதோபதேசத்தைப் பின்பற்றி வாழ்ந்து பாருங்கள்! அமைதியும் நிம்மதியும் உங்கள் வாழ்வில் என்றென்றும் கொலுவீற்றிருக்கும்!

11

எது மெய்யான பக்தி?

"'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற இலக்கோடு வாழ்வு நடத்த வேண்டும். அப்போது எம்மை இறைவன் என்றும் தாங்கி நிற்பான்."

- மனோன்மணி சண்முகதாஸ்*

இராமலிங்க அடிகளும் இராமகிருஷ்ண பரமஹம்சரும் சமகாலத்தில் வாழ்ந்த அருளாளர்கள் ஆவர். முன்னவர், தமிழகத்தில் தோன்றியவர்; **'அருட்பெருஞ் சோதி தனிப் பெருங்கருணை'** என்னும் மந்திர மொழிகளுக்குச் சொந்தக் காரர்; **'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்'** என்னும் கூற்று, அவரது அருள் நெஞ்சத்தினை வெளிப் படுத்துவது. பின்னவர், அருட்பா ஏதும் இயற்றவில்லை; பள்ளிப் படிப்பும் பயிலவில்லை. எனினும், **'வினையின் நீங்கி விளங்கிய அறிவு'**டன் அவர் அருளிய உபதேச மொழிகளும் குட்டிக் கதைகளும் பொருள் நிறைந்தவை. மிகவும் அரிய பொருளையும் ஏழை எளிய மக்களுக்கும் சிறுகுழந்தைகளுக்கும் புரியும் படியாகக் கதை வடிவில் கூறும் ஆற்றல் இராமகிருஷ்ண பரமஹம்சரிடம் இருந்தது.

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப" (1434)

என்னும் தொல்காப்பியர் கருத்திற்கு நல்லதோர் இலக்கியமாக இராமகிருஷ்ண பரமஹம்சரின் உபதேச மொழிகளும் குட்டிக் கதைகளும் விளங்குகின்றன. பதச்சோறாக, **'எது மெய்யான பக்தி?** என்பதை விளக்கப் பரமஹம்சர் கூறி அருளிய ஒரு குறுங்கதையினை இங்கே சுட்டிக்காட்டலாம்.

---

* பக்தியின் மொழி தமிழ், ப.55.

"மொகலாயப் பாதுஷா அக்பர் ஆண்டு கொண்டிருந்த காலம் அது. டில்லிக்குப் பக்கத்தில் இருந்த ஒரு காட்டில் ஒரு துறவி வசித்துக் கொண்டிருந்தார். அவரை தரிசிப்பதற்காகக் காட்டில் ஏராளமான கூட்டம் கூடத் தொடங்கியது. அப்படிக் கூடுகிறவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்று அந்தச் சாது விரும்பினார்.

அக்பர் சக்கரவர்த்தி துறவிகளைப் போற்றியவர்; அவரிடம் சென்று, பொருள் பெற்று வரலாம், தம் விருந்தாளிகளுக்குத் தேவையான சௌகரியங்கள் செய்து தரலாம் என்று துறவி நினைத்தார்.

துறவி அரண்மனையை அடைந்த போது அக்பர் தொழுகை புரிந்து கொண்டிருந்தார்; துறவியும் அவருக்குப் பக்கத்தில் அமர்ந்து தொழலானார்.

சக்கரவர்த்தி ஆண்டவனிடம், "என்னுடைய செல்வமும், செல்வாக்கும், நாடும் மேலும் வளர்வதற்கு அருள வேண்டும்" என்று இரந்தார்.

அதைக் கேட்டதும் சாது அங்கிருந்து எழுந்து திரும்பத் தொடங்கினார். அவர் ஒன்றும் கேளாமல் போவதைக் கண்ட அக்பர் அவரை அழைத்து உட்கார வைத்தார்.

"ஐயா, நீங்கள் என்னிடம் வரக் காரணம் என்ன? ஒன்றும் சொல்லாமலேயே திரும்புகிறீர்களே, என்ன விஷயம்?" என்று அக்பர் கேட்டார்.

"ஒன்றுமில்லை; உங்களைத் தொந்தரவு செய்ய வேண்டா என்று முடிவு செய்துவிட்டேன்" என்றார் துறவி.

"எனக்கு என்ன தொந்தரவு? உங்களைப் போன்ற துறவி களுக்குத் தொண்டு செய்யும் பேறு எனக்குக் கிடைக்க வேண்டும். அன்புகூர்ந்து நீங்கள் வந்த காரியத்தைக் கூறுங்கள்" என்று அக்பர் வற்புறுத்தினார்.

"அரசரே, என்னைப் பார்ப்பதற்காகப் பலர் காட்டுக்கு வருகிறார்கள்; அவர்களுக்குப் போதுமான சௌகரியங்கள் செய்து தர வேண்டும்; அதற்காக உங்களிடம் சிறிது பணம் கேட்க எண்ணி வந்தேன்."

“தருகிறேனே; கேளாமலேயே நீங்கள் ஏன் திரும்ப வேண்டும்?”

“நான் துறவி, பிச்சைக்காரன்; உங்களிடம் பிச்சை கேட்க வந்தேன்; நீங்களோ என்னை விடப் பெரிய பிச்சைக்காரராக இருக்கிறீர்கள். பிச்சைக்காரன் பிச்சைக்காரனிடமே பிச்சை கேட்பதா? , அதற்குப் பதிலாக, ஆண்டவனிடமே எனக்குத் தேவையானதைக் கேட்டுக் கொள்ளலாம் என்று எண்ணியே திரும்பினேன் என்றார் துறவி. துறவிக்கு வேந்தனும் துரும்பு அல்லவா?

பாதுஷா வெட்கமுற்றார்.”

(எம்.வி.வெங்கட்ராம், இராமகிருஷ்ண பரமஹம்சர், புக்.63-64)

‘கடவுளை நம்புகிறவர்கள் அற்பமான பொருள்களுக்கு ஆசைப்படக் கூடாது. கடவுளிடம் மெய்யான நம்பிக்கை உடையவர்கள் அவ்வாறு ஆசைப்படவும் மாட்டார்கள்’ என்பதே இந் நிகழ்வின் வாயிலாக இராமகிருஷ்ண பரமஹம்சர் மக்களுக்குச் சொல்ல விரும்பும் செய்தி ஆகும்.

12

கடவுளின் கருணை யாருக்கு?

"இறைவனின் கருணை இடையறாது வீசிக் கொண்டிருக்கிறது. எவன் ஒருவன் தன் மனம் என்ற பாய்மரத்தை விரித்து இறைவனின் கருணை என்ற காற்றைச் சாதகமாகப் பயன்படுத்துகிறானோ அவன் தன் குறிக்கோளை விரைவில் அடைகிறான்."

- இராமகிருஷ்ண பரமஹம்சர்*

யார், என்ன, எப்போது, எங்கே, ஏன், எப்படி? என்ற ஆறு வினாக்களுக்கு விடை கிடைத்தால் அதுதான் செய்தி (NEWS) என்று பத்திரிகைத் துறையில் கூறுவார்கள். அதுபோல் கடவுள் யார், அவரது கருணை எப்போது, எங்கே, எப்படிக் கிடைக்கும், ஏன் இப்படி பக்தர்களுக்குச் சோதனை தருகிறார் அவர், என்ன சொல்லி அவருக்கு நம் நிலையைப் புரிய வைப்பது என்ற வினாக்களுக்கு உரிய விடைகளைக் குறித்தும் கொஞ்சம் சிந்தித்துப் பார்ப்போமா? இவ்வகையில் நமக்குக் கைகொடுக்கும் இரு ஆன்மிகக் கதைகள் இதோ:

தொடர்ந்து பெரும் மழை. அந்தச் சிறிய கிராமத்தை நோக்கி வெள்ளப் பெருக்கு வந்துகொண்டிருந்தது. மக்கள் எச்சரிக்கையோடு அந்த ஊரை விட்டு வெளியேறத் தொடங்கினர்.

ஒரு பக்தன் மட்டும் தன் வீட்டில் அமர்ந்து, "கடவுளே! என்னைக் காப்பாற்றும்!" என்று வேண்டிக் கொண்டிருந்தான்.

ஊருக்குள்ளேயே வெள்ளம் புகுந்துவிட்டது. எஞ்சியிருந்த ஒரு சிலரும் மற்றவர்கள் உதவியுடன் தண்ணீரில் இறங்கிக் கடந்து பாதுகாப்பான இடம் தேடிப் போனார்கள்.

---

* ஸ்ரீ ராமகிருஷ்ணர் வாழ்க்கையும் உபதேசங்களும், பக்.192-193.

பக்தன் போகவில்லை. "நம்பிக்கையோடு இருக்கிறேன். கடவுளே, காப்பாற்றும்!" என்று உருக்கமாக வேண்டினான்.

வீட்டுக்குள் தண்ணீர் புகுந்தது. பக்தன் கூரை மேல் தொத்தினான். மீண்டும் வேண்டினான்.

ஒரு பெரிய மரக்கிளை அவன் பக்கத்தில் வந்தது. அதன் மேல் ஒரு நாயும் அமர்ந்திருந்தது. பக்தன் அந்த மரத்தையும் பற்றிக் கொள்ளவில்லை.

ஒரு பெரிய அலை வந்து அவனை வெள்ளத்தில் அடித்துச் சென்றது. அவன் கத்தினான்: "கடவுளே, உன்னை நம்பி உறுதியாய் இருந்தேன். என்னைக் கைவிட்டு விட்டாயே!"

கடவுள் சொன்னார்: "என் உதவி உனக்கு முன்னெச் சரிக்கையாய், மற்றவர்களின் முயற்சியாய், இயற்கையில் மிதந்து வந்த மரமாய் உன்னிடம் வந்ததே! நீ தான் அதைப் பயன் படுத்திக் கொள்ளவில்லையே?"

விடாமுயற்சியும் உழைப்பும் இல்லாதவனுக்குக் கடவுளின் அருள் எப்படி வந்து சேரும்?

அலை மோதி அந்தக் கப்பல் உடைந்து போய்விட்டது.

நீர் சூழ்ந்த அந்தத் தீவில் அவன் மட்டும் கரை சேர்ந்தான். மீதியுள்ளோர் நீரில் மூழ்கி இறந்து போனார்கள்.

கரை சேர்ந்த அவன் மட்டும் காமா சோமா என்று குடிசை ஒன்றைக் கட்டி அதிலேயே வாழ்ந்து வந்தான்,

மூழ்கிய கப்பலில் இருந்து எப்படியோ முடிந்த வரை எடுத்து வந்த தன் உடைமைகள் சிலவற்றைப் பத்திரமாகப் பாதுகாத்து வந்தான்.

கிடைத்ததை உண்டு, பிரார்த்தனையிலேயே காலத்தைக் கழித்தான்.

"தெய்வமே! ஏதாவது ஒரு கப்பல் இந்தப் பக்கம் வந்து என்னை ஏற்றிக்கொண்டு போய் என் சொந்த நாட்டில் சேர்த்து விட்டால் நன்றாக இருக்கும். இதற்கு நீ அருள மாட்டாயா?" என நெஞ்சுருகி வேண்டி வந்தான்.

உணவுக்காக வேட்டையாடித் திரும்பிய ஒருநாள் அவனது

குடிசை தீக்கு இரையாகி எரிந்து சாம்பல் குவியலாகக் காட்சி தந்தது.

“தெய்வமே! இத்தனை நாளும் உன்னை உருகி உருகிப் பிரார்த்தித்ததற்கு இதுதானா நான் கைமேல் கண்ட பலன்? உனக்கு இரக்கமே இல்லையா?” என்று மிகவும் நொந்து தெய்வ நிந்தனை செய்தான்.

அடுத்த நாள், என்ன ஆச்சரியம்! கப்பல் ஒன்று கரையோரம் வந்தது. கப்பலின் தலைவன் சொன்னான்: “இங்கே ஏதோ புகை கண்ணில் பட்டது. ‘யாரோ உதவி வேண்டித் தவிக்கிறார்கள், காப்பாற்றுவோம் என்று வந்தோம்.’”

கடவுள் தீயாகவும் இருப்பார் என்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மையே **அவர் தீயாகவும் வருவார்** என்பதும்.

“வேண்டத் தக்கது அறிவோய் நீ,
வேண்ட முழுதும் தருவோய் நீ”

(திருவாசகம்: குழைத்த பத்து, பா.6)

என மணிவாசகர் இறைவனைப் பற்றிக் கூறியிருப்பது எவ்வளவு சரியானது பார்த்தீர்களா?

13

யார் ஞானி?

"ஞானிகள் யாதும் உபதேசம் செய்யாவிட்டாலும்
அவர்களை அணுகியிருப்பது நல்லது.
அவர்களுடைய விளையாட்டுப் பேச்சிலும்
மெய்யறிவு பொதிந்திருக்கும்."

- வசிட்டர்*

கனகதாசர் புகழ் பெற்ற ஒரு கன்னடக் கவிஞர்; அனுபவ ஞானி. அவர் இறையுணர்விலே தம்மை முழுவதும் ஈடுபடுத்திக் கொண்டு வாழ்ந்தவர்; இறைவன் புகழ் பாடுவதையே தம் வாழ் நாள் பணியாகக் கொண்டிருந்தவர். அவரது குருநாதர் **வியாசராயர்** என்பவர். அவர் ஒருமுறை எல்லோரும் கூடியிருந்த வேளையில் கனகதாசரைப் பார்த்து, "கனகா, இங்கிருப்பவர்களில் யார் யார் வைகுந்தம் போவார்கள் என்று உன் கடவுளிடம் கேட்டுச் சொல்" என்றார். கனகதாசர் அடுத்த நாள் பதில் தருவதாகக் கூறினார்.

மறுநாள் வியாசராயர் ஒவ்வொருவரையும் சுட்டிக் காட்டி, "இவர் வைகுந்தம் போவாரா?" என்று கேட்டுக் கொண்டே வந்தார். 'இல்லை' என்றே சொல்லிக் கொண்டு வந்தார் கனகதாசர்.

"நான் போவேனா?" என்றார் குருநாதர். 'இல்லை' என்று பதில் வந்தது கனகதாசரிடம் இருந்து. குருநாதருக்கே திகைப்பு. "நீ போவாயா?" என்று வினவினார். "நான் போனால் போவேன்" என்றார் கனகதாசர்.

இது ஆணவத்தின் உச்சம் என்று கூடியிருந்த அனைவரும் நினைத்தார்கள். கனகதாசர் அமைதியாக அவர்களிடம் இப்படி விளக்கினார்:

---

* ஆரார், வசிட்டர் சொன்ன அறிவுரைகள், ப.6.

"'நான் மட்டும் வைகுந்தம் போவேன்' என்ற பொருளில் நான் இப்படிச் சொல்லவில்லை. **நான் என்பது போனால் - ஆணவம் அழிந்தால் - எல்லோருமே வைகுந்தம் போகலாம்."**

கனகதாசரின் கருத்தையே கவிஞர் **தாராபாரதி** வேறு சொற்களில் பின்வருமாறு அழகாகச் சொல்லுவார்:

"நான்மறையைக் கற்றவனா ஞானி - தன்னுள்
'நான்' மறையக் கற்றவனே ஞானியாவான்!"

(தாராபாரதி கவிதைகள், ப.309)

நம் உள்ளத்தில் இருந்து அறவே துடைத்துத் தூக்கி எறிய வேண்டியது இந்த 'நான்' என்னும் உணர்வைத்தான்; 'எனது' என்னும் எண்ணத்தைத் தான். உள்ளத்தில் தூய்மையான அன்பு இருந்தால் மட்டும் போதும், யாரும் வைகுந்தம் போகலாம், கைலாயம் காணலாம், சொர்க்கம் செல்லலாம். ஆன்மிகத் துறையில் இதை ஒரு கதை வடிவில் எளிமையாக விளக்குவார்கள்.

ஒரு முனிவர் தம் சீடர்களைப் பார்த்து, "வைகுந்தம் எங்கே இருக்கிறது? கைலாயம் எங்கே இருக்கிறது?" என்று கேட்டாராம். உடனே சீடர்கள் கணக்குப் போட்டுப் பார்க்கத் தொடங்கினார்களாம். முடிவில், "வைகுண்டம் சூரிய மண்டலத்திற்கு அப்பால், நட்சத்திர மண்டலத்திற்கு அப்பால் இருக்கிறது. கைலாயமோ எதிர்த்திசையில் அதே தூரத்தில் இருக்கிறது" என்று சொன்னார்களாம்.

சீடர்களின் இந்தப் பதிலைக் கேட்டு முனிவர் சிரித்தாராம்.

"நீங்கள் சொல்லுவது தவறு. **வைகுண்டம் கூப்பிடு தூரத்தில்** உள்ளது. **கைலாயமோ கைக்கெட்டிய தூரத்தில்** உள்ளது" என்று சொன்னாராம் முனிவர்.

"எப்படி?" என்று சீடர்கள் கேட்டார்களாம்.

"**கஜேந்திரன்** என்ற யானை, முதலை தன் காலைப் பற்றிக்கொண்டதும் 'ஆதிமூலமே' என்று விஷ்ணுவை நினைத்துக் கூப்பிட்டது. உடனே விஷ்ணு ஓடிவந்து காப்பாற்றினார். அதனால் **வைகுண்டம் கூப்பிடு தூரத்தில் உள்ளது** என்று தெரிகிறது. அதே போல், பாசக் கயிறு கொண்டு பற்றி இழுத்தும் யமனால் **மார்க்கண்டேயனை** ஒன்றும் செய்ய முடியவில்லை.

கைக்கெட்டிய தூரத்தில் இருந்த சிவலிங்கத்தைக் கட்டித்தழுவிக் கொண்டான் மார்க்கண்டேயன். கைலாயத்தில் இருந்த சிவபெருமான் ஓடிவந்து அவனுக்கு அருள் புரிந்தார். எனவே கைலாயம் கைக்கெட்டிய தூரத்தில் உள்ளது என்று தெரிகிறது" என்று விளக்கினார் முனிவர்.

நம் மனங்களில் இருந்து **'நான்'** என்னும் ஆணவத்திற்கு விடை கொடுப்போம்; **'நாம்'** என்னும் கூட்டுணர்வோடு வாழ முற்படுவோம். **வைகுந்தத்தை - கைலாயத்தை - சொர்க்கத்தை இந்த மண்ணுலகத்திலேயே கண்டு களிப்போம்!**

14

சொர்க்கமும் நரகமும் எவை?

"ஆன்மிக உலகில் நிறையப் பேர் இன்னும் குழந்தைகளாகத் தான் இருக்கிறார்கள். அவர்களுக்குப் புண்ணியம் பாவம் சொர்க்கம் நரகம் போன்ற பால பாடங்கள் தேவைதான்"
- வரலொட்டி ரங்கசாமி*

சொர்க்கமும் நரகமும் வெளியே இல்லை; வானில் இல்லை; எங்கோ இல்லை. அவை இங்கேயே இருக்கின்றன; நம் அருகிலேயே இருக்கின்றன; நமக்குள்ளேயே இருக்கின்றன. இன்னமும் சரியாகச் சொல்ல வேண்டும் என்றால், சொர்க்கமும் நரகமும் அவரவர் மனங்களிலேயே உள்ளன.

'சொர்க்கத்திற்குப் பாதை இருக்கிறது, ஆனால் அதில் யாரும் செல்வதில்லை. நரகத்திற்கு வாசலே இல்லை, ஆனால் மனிதர்கள் அதில் ஏறிக் குதிக்கிறார்கள்' என்கிறது சீன நாட்டுப் பழமொழி ஒன்று.

'தங்கக் கட்டி போலே மனைவி உண்டு, சிங்கக் குட்டி போலே மழலை உண்டு; வீட்டுக்கு நடுவே சொர்க்கம் உண்டு' என்பார் கவியரசர் **கண்ணதாசன்**. ஒரு மனிதனுக்கு நல்ல மனைவி, நல்ல பிள்ளை, நல்ல குடும்பம் ஆகிய மூன்றும் வாய்த்தன என்றால், அவன் தன் சின்னஞ்சிறு வீட்டுக்கு நடுவிலேயே சொர்க்கத்தைக் காண்பான் என்பது கண்ணதாசனின் முடிந்த முடிபு.

பத்து மாதம் சுமந்து பெற்று, தாலாட்டிப் பாலூட்டிச் சீராட்டி வளர்க்கும் தாயின் காலடியே ஒருவனுக்குச் சொர்க்கம் போன்றது என்ற கருத்தும் உண்டு. இதே போல், கருத்தொரு மித்த நண்பர்கள் இடையே அளவளாவி மகிழ்வதிலே

---

* ஆனந்தம் இன்று ஆரம்பம், ப.373

கிடைக்கும் இன்பம், சொர்க்கம் தரும் இன்பத்திலும் மேலானது என்போரும் உள்ளனர்.

திருத்தங்கல் சீ.ரா. அரசு மேனிலைப் பள்ளியில் 11-ஆம் வகுப்பு 'அ' பிரிவில் பயிலும் மாணவன் செல்வன் **பி.மணிகண்டன்**. அவன் எழுதிய 'சொர்க்கமும் நரகமும்' என்னும் அழகிய கதை, 'மாணவர் முத்திரைக் கதை' என்ற தலைப்பில் 27.11.1999 நாளிட்ட 'தினமணி சிறுவர் மணி' இதழில் வெளிவந்தது. இங்கே மாணவன் மணிகண்டனின் சொற்களில் அக் கதையினைக் காணலாம்.

"ஒரு ஊரில் ஒரு கருமி வாழ்ந்து வந்தான். அவன் மிகப் பெரிய பணக்காரன். ஆனால் யாருக்கும் உதவ மாட்டான். அவனுக்குச் சொர்க்கத்தையும் நரகத்தையும் காண ஆசை வந்தது. ஒருநாள் அவனது கனவில் ஒரு பெரியவர் தோன்றினார். அவனைச் சொர்க்கத்துக்கும் நரகத்துக்கும் கூட்டிச் செல்வதாகக் கூறினார்.

முதலில் அவனை நரகத்துக்குக் கூட்டிச் சென்றார் பெரியவர். அங்கு உணவு நேரத்தில், பெரிய பெரிய அண்டாக்களில் சாதம், குழம்பு மற்றும் சுவை மிக்க பதார்த்தங்களும் வந்தன. அவரவர்க்குத் தட்டுகள் கொடுக்கப்பட்டு, சுவை மிகு உணவு பரிமாறப்பட்டது. எல்லோருக்கும் நாவில் எச்சில் ஊறியது.

ஆனால்... அந்தோ, பரிதாபம்! அனைவராலும் கையை நீட்டி உணவுப் பொருளை எடுக்க முடிந்ததே தவிர, கையை மடக்கி, வாய்க்கு அந்த உணவைக் கொண்டு செல்ல முடிய வில்லை. எனவே அறுசுவை உணவு எதிரே இருந்தும் அவர்களால் உண்ண முடியவில்லை. அவர்களுக்குப் பசியோடு ஆத்திரமும் சேர்ந்து கொண்டது.

அனைத்து அண்டாக்களையும் கீழே தள்ளிவிட்டு, அவற்றில் உள்ள உணவை வீணாக்கினர். பின் தாங்க முடியாத பசியினால் உட்கார்ந்து அனைவரும் அழுதனர்.

பின்னர் அந்தப் பெரியவர் அவனைச் சொர்க்கத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கும் அதே போல அண்டாக்கள் நிறைய அருமையான சாப்பாடு. அங்கு இருந்தவர்களுக்கும் கையை நீட்ட முடிந்தது; மடக்க முடியவில்லை. அப்போது ஒருவன் தனது நீட்டிய கையினால் இனிப்பு வகைகளை எடுத்து

எதிரே இருப்பவனுக்கு ஊட்டினான். மடக்கத் தானே முடியாது? நீட்டியபடி எதிரே இருப்பவர் வாயில் ஊட்டலாம் அல்லவா?

இப்படியே அனைவரும் ஒருவருக்கு ஒருவர் ஊட்டி மகிழ்ந்தனர்; அனைவரின் வயிறும் நிரம்பின.

கருமி கனவில் இருந்து மீண்டான். **ஒருவருக்கு ஒருவர் உதவி வாழ்வதே சொர்க்கம்** என்பதை அவன் இப்போது புரிந்து கொண்டான்; **தான் மட்டும் சுகமாய் வாழ நினைப்பது நரகம்** என்பதை உணர்ந்தான். அன்றிலிருந்து அவன் அனை வருக்கும் உதவி செய்து வாழ்ந்தான்."

'பரந்த மனத்துடன் ஒருவருக்கு ஒருவர் உதவி வாழ்வதே சொர்க்கம்', 'தன்னலத்தோடு தான் மட்டும் சுகமாய் வாழ நினைப்பதே நரகம்' - சொல்லுங்கள், இதனினும் இரத்தினச் சுருக்க மாகச் சொர்க்கத்திற்கும் நரகத்திற்கும் வேறு யார் இதுவரை விளக்கங்கள் தந்திருக்கிறார்கள்?

15

முத்தியும் சித்தியும் எப்போது வாய்க்கும்?

"மன ஒருமைப்பாடின்றி, பல மணி நேரம் பிரார்த்தனை, தியானம் செய்வதை விட, இரண்டு நிமிடங்கள் முழுமையான, ஒருமைப்பட்ட மனத்துடன் பிரார்த்தனை, தியானம் செய்வது நல்லது."

*- அன்னை சாரதா தேவி**

"மனமென்னும் மாடு அடங்கில் தாண்டவக் கோனே - முத்தி
வாய்த்ததென்று எண்ணேடா தாண்டவக் கோனே!
சினமென்னும் பாம்பு இறந்தால் தாண்டவக் கோனே
- யாவும்
சித்தியென்றே நினையேடா தாண்டவக் கோனே!
ஆசையென்னும் பசு மாளின் தாண்டவக் கோனே - இந்த
அண்டமெல்லாம் கண்டறிவாய் தாண்டக் கோனே!"

- என்பது **இடைக்காட்டுச் சித்தர்** *வாக்கு. இதன் நயத்தையும் நுட்பத்தையும் கொஞ்சம் நாம் அலசிப் பார்ப்போமா?*

ஒருவருக்கு முத்தி எப்போது வாய்க்கும்? மனம் என்னும் மாடு அடங்கினால் வாய்க்கும். மனத்தை அடக்குவது என்பது எளிதான காரியமா? அரிதினும் அரிதான காரியம் அது. எப்படி என்று கேட்கிறீர்களா?

ஓர் இளைஞன் தியானம் செய்ய நிம்மதியான ஓர் இடம் கிடைக்குமா என்று தேடுகிறான். கடைசியில் ஓர் ஓடைக்கு அருகில் உள்ள ஆலமரத்தடியைத் தேர்ந்தெடுக்கிறான்.

---

* *ஸ்ரீ சாரதா தேவி வாழ்க்கையும் உபதேசங்களும், ப.125.*

அன்று காலை 10 மணி இருக்கும். ஓர் அழகான இளம்பெண் அந்தப் பக்கம் வருகிறாள். அவளைக் கண்டதும் இளைஞனின் தியானம் கலைகிறது.

க்ண்கள் திறந்து இருந்ததனால் தானே தியானம் கலைந்தது என்று அடுத்த நாள் ஒரு துணியால் கண்களைக் கட்டிக் கொண்டு தியானம் செய்கிறான் இளைஞன். அப்பொழுது காலை 10 மணி இருக்கும். திரும்பவும் அப் பெண் அந்தப் பக்கம் வருகிறாள். அவளுடைய கால் கொலுசு ஜல்ஜல் என்று ஒலி எழுப்ப, இளைஞனின் தியானம் கலைகிறது.

அடுத்த நாள் காலை காதுகளையும் மூடிக்கொண்டு தியானம் செய்கிறான் இளைஞன். அன்று பத்து மணி அளவிற்கு அந்தப் பெண் அந்தப் பக்கம் வருகிறாள். அவள் தலையில் சூடியிருக்கும் மல்லிகைப் பூவின் வாசனை இளைஞனின் மூக்கைத் துளைக்கிறது. அதன் விளைவாக அன்று அவனது தியானம் கலைகிறது.

அடுத்த நாள், மூக்கையும் மூடிக்கொண்டு தியானம் செய்கிறான் இளைஞன். அன்றும் பத்து மணி அளவிற்கு அந்தப் பெண் அந்தப் பக்கம் வருகிறாள். இளைஞன் அவளைப் பார்க்கவில்லை. அவளுடைய கொலுசின் ஒலியைக் கேட்க வில்லை. அவள் சூடிய மல்லிகைப் பூவின் வாசனையையும் நுகரவில்லை. இருந்தும் இளைஞனின் மனம் நினைக்கிறது, 'அந்தப் பெண் இத்தனை நேரம் இங்கு வந்திருப்பாளே!' என்று. அதன் காரணமாக அவனுடைய தியானம் கலைகிறது.

மனத்தை அடக்குவது எவ்வளவு அரிய முயற்சி என்பதை இந்தக் கதையால் உணர முடிகிறது அல்லவா? ஆனாலும், முறையான பயிற்சியாலும், திட்டமிட்ட முயற்சியாலும் மனத்தை நம் வசத்தில் வைத்துக் கொள்ளலாம்.

அடுத்தது, **சினம்.** 'சினம் என்னும் பாம்பு இறந்தால் யாவும் சித்தி ஆகும்' என்கிறார் இடைக்காட்டுச் சித்தர். இன்று 'AIDS' என்ற கொடிய நோயை, 'உயிர்க்கொல்லி நோய்' என்கிறோம். வள்ளுவரோ, 'சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி' என்கிறார். 'ஆறுவது சினம்' என்று தானே இளமை யில் நாம் படித்த ஆத்திசூடியும் நமக்கு அறிவுறுத்துகின்றது?

மூன்றாவது, **ஆசை**. 'ஆசை என்னும் பசு மாண்டால் இந்த அண்டமெல்லாம் கண்டறிவது எளிதாகும்' என்கிறார் இடைக்காட்டுச் சித்தர். தமிழில் **ஆசை, பற்று** என இரு சொற்கள் உண்டு. மண், பெண், பொன் இவற்றின் மீது ஒருவர் வைப்பது ஆசை. மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என இவற்றைச் சுட்டுவர். நாடு, மொழி, இனம் இவற்றின் மீது ஒருவர் கொள்ளுவது பற்று. நாட்டுப் பற்று, மொழிப் பற்று, இனப் பற்று என இவற்றைக் குறிப்பிடுவர். ஒருவர் மனத்தில் பற்று இருக்கலாம். ஆசை இருக்கக்கூடாது. 'ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்' என்றார் **திருமூலர்**. 'ஆசைக்கோர் அளவில்லை அகிலமே கட்டி ஆண்டாலும்' என்றார் **தாயுமானவரும்**.

முத்தாய்ப்பாக ஒரு சொல்:

ஒருவரால் தம் மனத்தை அடக்கி, சினத்தை வென்று, ஆசையைக் கட்டுப்படுத்த முடிந்தது என்றால், அதுவே **மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கான அடையாளம்** ஆகும்.

16

எது உண்மையான வீரம்?

" 'புலன் ஐந்தும் வென்றான்தன் வீரமே வீரமாம்' என்பது ஒளவையார் அமுத மொழி."

- **ம.ரா.போ.குருசாமி***

"**துறவு வாழ்க்கையில் நீர் கண்டது என்ன?**" என ஒரு முறை நாடாளுகின்ற மன்னன், ஒட்டுப் பற்றற்று உலக வாழ்வை விட்டுத் துறந்த பட்டினத்தாரிடம் கேட்டான். அப்போது பட்டினத்தார், மன்னனுக்குச் சொன்ன முத்தாய்ப்பான மறுமொழி: **"நீர் நிற்க, யாம் இருக்க!"**

மணிமுடியையும் நான்கு வகையான படைகளையும் ஒருசேரப் பெற்று நாடாளும் மன்னனாகவே இருந்தாலும் அவன், ஒரு துறவியின் முன்னே தாழ்ந்து பணிந்து நின்று கொண்டுதான் பேச வேண்டும்; துறவி அதனை இருந்து கேட்பார். துறவியின் பெருமை இதனால் தெற்றென விளங்கும். மேலும் ஒரு துறவியின் மொழி என்பது நிறைமொழி; மறைமொழி; மந்திர மொழி. இன்னமும் கூர்மையாகச் சொல்ல வேண்டும் என்றால், **துறவியின் மொழியை விட, அவரது மௌனம் கூடுதல் வலிமை வாய்ந்தது.** இதனைப் பறைசாற்றும் ஓர் உண்மையான இலக்கிய வரலாற்று நிகழ்ச்சி:

தத்துவராய சுவாமிகள் தமிழ்நாட்டின் இலக்கிய வரலாற்றிலும் சமய சாத்திரங்களின் வரலாற்றிலும் மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றவர்; பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர்; பேராசிரியர் **மு.அருணாசலம்** தமது 'தமிழ் இலக்கிய வரலாறு - 15ஆம் நூற்றாண்டு' நூலில் குறிப்பிடுவது போல், "தமிழ் மொழியில் வேதாந்த மார்க்கத்

---

* உள்ளம் நிறைந்த இறைவன், ப.119.

துக்கு மூலகர்த்தர் இவரே என்று சொல்லலாம். இவரளவு அந்த மார்க்கத்தைப் பரப்பியவர்கள் முன்னரும் இருந்ததில்லை, பின்னரும் இருந்ததில்லை.'' (ப.186).

தத்துவராயர் தமது குருவான **சொரூபானந்தர்** மீது அஞ்ஞவதைப் பரணி, மோகவதைப் பரணி என்ற இரு பரணிப் பிரபந்தங்களை இயற்றினார். முன்னது, தம்மிடம் இருந்த அஞ்ஞானத்தைத் தலைவராகிய சொரூபானந்தர் எங்ஙனம் வதைத்தார் என்பதைப் பாடுவது; பின்னது மோகன் என்பவனைச் சொரூபானந்தர் வதைத்த செய்தியைப் பாடு பொருளாகக் கொண்டது. புலவர் அவை ஒன்றைக் கூட்டி, அதில் தமது பரணிப் பிரபந்தங்களை அரங்கேற்றம் செய்ய ஏற்பாடுகள் செய்தார் தத்துவராயர். புலவர்களோ, "ஐயா! 'போர் முகத்து ஆயிரம் களிற்றினை வென்ற மாவீரனுக்குப் பாடப் பெறுவது' என்பது பரணியின் இலக்கணம். அங்ஙனம் இருக்க, நீர், வீரம் என்பதைக் கனவிலும் கண்டறியாத - கேட்டறியாத - உம் குருவின் மீது பரணிப் பிரபந்தத்தை எப்படிப் பாடினீர்?' எனக் கேட்டுத் தங்கள் எதிர்ப்பினைத் தெரிவித் தார்கள். 'போர்க் களத்தில் ஆயிரம் யானைகளை வென்ற ஒரு மாமன்னனைப் போற்றிப் பாடுவதே பரணிப் பிரபந்தம், போர் முகமே கண்டறியாத ஒரு துறவியின் மீது அதனைப் பாடுவது எவ் வகையிலும் பொருந்தாது' என்பது அவர்கள் தரப்பு வாதம். அவர்களுக்கு மறுமொழியாகத் தத்துவ ராயர், "எம்முடைய குருநாதர் சீடர்களுடைய அகங்காரமாகிய யானைகளைக் கொல்லுதலாற் பரணி பாடினோம்'' என்றார். புலவர்கள் இவ் விளக்கத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. "நீர் சொல்லும் அகங்கார யானை ஒன்றைக் கொல்லுவதற்கே அனேக நாள் செல்லுமே; அங்ஙனம் இருக்க, பல அகங்கார யானைகளை ஏக காலத்தில் 'ஆயிரம் சீடர்களிடத்தில் இவர் கெடுத்தது எப்படி?'' எனக் கேள்விக் கணை தொடுத்தனர். இது அனுபவத்தில் விளங்க வேண்டிய உண்மை என்று கருதி, வேறு ஒன்றும் கூறாமல், புலவர்கள் அனைவரையும் தம் குருவான சொரூபானந்தரிடம் அழைத்துச் சென்று செய்தியைக் கூறினார் தத்துவராயர்.

சொரூபானந்தரின் சன்னிதானத்தில் புலவர்கள் அனைவரும் வந்து அமர்ந்தனர். தம் சீடர் தத்துவராயர் சொன்ன செய்தியைக் கேட்டுக் கொண்ட சொரூபானந்தர் எதுவும் பேசாமல்

மௌனமாகச் சமாதி நிலையில் அமர்ந்து கொண்டார்.

சொரூபானந்தரின் மறுமொழியைக் கேட்க வந்த புலவர்களும் மௌனமாக அமர்ந்திருந்தார்கள். அனைவரும் எதுவும் பேசாமல் மௌனமாக அமர்ந்தபடியே இருந்தார்கள். கேள்வி கேட்க வேண்டும் என்றோ, பேச வேண்டும் என்றோ எந்த ஓர் எண்ணமும் அவர்களுக்குத் தோன்றவில்லை.

இவ்வாறு மூன்று நாட்கள் இரவு பகல் என்னும் உணர்வே இன்றி, பரிபூரண சமாதி நிலையில் சென்றன. நான்காம் நாள், சொரூபானந்தர் சமாதி கலைந்து கண் விழித்தார்; அவையில் கூடி இருந்த புலவர்கள் அனைவரும் தன்னுணர்வு பெற்றவர் களாக நிகழ்ந்ததை அறிந்தனர்; தத்துவராயரை வணங்கி எழுந்து, "அஞ்ஞானத்தால் நாங்கள் இவ்வாறு ஆட்சேபிக்க நேர்ந்தது. தங்கள் சந்நிதானம் ஏக காலத்தில் ஆயிரம் அல்ல, பதினாயிரம் சீடர்களையும் பரிபக்குவப்படுத்த வல்லது. உண்மையில், மதம் பிடித்த எங்கள் அனைவரது மனங்களையும் 'நான்' என்ற அகங்காரத்தையும் அடக்கி வெற்றி கொண்ட இந்த மகாகுருவான சொரூபானந்தரது சக்திக்கு, போர்க்களத்தில் ஆயிரம் யானை களை வெல்லக்கூடிய ஒரு மாவீரனது சக்தி எவ்விதத்திலும் ஈடாக முடியாது. ஆகையால் இந்த மகானின் பெருமையைப் பரணிப் பிரபந்தம் பாடிப் போற்றுவது பொருந்தும்" என்று ஒன்றுபட்ட குரலில் அறுதியிட்டுக் கூறினர். அவர்கள் அனைவரும் தத்துவராயரை வழிபட்டு, அவருக்கு மாணாக்க ராகித் தங்கள் இடம் திரும்பினர்.

இந் நிகழ்ச்சி வாயிலாக நாம் உணர்ந்து கொள்ள வேண்டிய அடிப்படையான வாழ்வியல் உண்மை ஒன்று உண்டு: வீரம் என்பது ஒரு மனிதன் போர்க்களத்திலே காட்டுவது மட்டும் அன்று; ஆயிரக்கணக்கில் யானைகளைக் கொன்று குவிப்பதிலே மட்டும் அவனது வீரம் வெளிப்பட்டுத் தோன்றாது. உண்மையில், ஐம்புலன்களையும் மனத்தையும் அடக்கி, 'யான்', 'எனது' என்னும் அகங்கார, மமகாரங்களையும் வெற்றி கொள்வதிலே தான் - அவற்றைத் 'தீதுஒரீஇ நன்றின் பால் உய்ப்பதிலே' தான் - உண்மையான வீரம் அடங்கியுள்ளது. தொல்காப்பிய வாகைத் திணையையும் அதன் துறைகளையும் ஊன்றிப் பயில்வோர், இவ்வுண்மமையை உணர்தல் கூடும். போர்க்களம் ஒரு மன்னனின் புற வீரத்தை வெளிப்படுத்துவது

போல, பாசறை அவனது அக வீரத்தைப் புலப்படுத்துவது குறிப்பிடத்தகுந்தது. நிலையான வாழ்வியல் உண்மைகளை எடுத்துரைக்கும் **பகவத் கீதை**, பரபரப்பான குருக்ஷேத்ரத்தில் எழுந்த சூழலும் இங்கே கருத்தில் கொள்ளத்தகுந்தது. துறவிகளை 'வீரர்' என்றும், 'மகாவீரர்' என்றும் போற்றிக் கூறும் உலகியல் வழக்கும் இவ்வகையில் மனங்கொளத்தக்கது. "ஒருவன் ஆயிரம் பேர் கொண்ட ஆயிரம் படைகளை வெற்றி கொள்கிறான். மற்றொருவன் தன்னைத் தானே அடக்கி வெல்கிறான். இவர்களுள் தன்னை வென்றவனே வெற்றி வீரருள் முதன்மை யானவன்" என்பது **புத்தர் பெருமானின்** பொன்மொழி.

17

மனித வாழ்க்கை எவ்வளவு காலம்?

" 'இறந்த' காலத்திலும், 'இன்னும் பிறவாத' எதிர் காலத்திலும் நம்மால் செயல் புரிய முடியாது. உயிர்த் துடிப்புடன் கூடிய நிகழ்காலத்தில் மட்டுமே நாம் செயல்பட முடியும்; இதில் தான் வாழ்க்கையில் அனுபவங்களைச் சுவைத்து இன்புற முடியும்."

- சுவாமி சின்மயானந்தர்*

புத்தர் பெருமான் மரத்தடி நிழலில் அமர்ந்திருந்தார்.

சுற்றிலும் சீடர்கள், அவருடைய அறிவுரையை எதிர் நோக்கி ஆவலுடன் காத்திருந்தார்கள்.

புத்தர் தம் சீடர்களை நோக்கி, "மனித வாழ்க்கை எவ்வளவு காலம்?" என்று கேட்டார்.

'எதற்கு அவர் இப்படி ஒரு சாதாரணமான கேள்வியைக் கேட்டார்?' என்பது விளங்காமல் சீடர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

புத்தர் பெருமான் சீடர்களின் பதிலுக்காகக் காத்திருந்தார்.

"எழுபது ஆண்டுகள்" என்றார் ஒரு சீடர்.

"தவறு" என்றார் புத்தர்.

"அறுபது ஆண்டுகள்" என்றார் இன்னொரு சீடர்.

"தவறு, தவறு" என்றார் புத்தர்.

---

* நம்மால் முடியும்..., ப.29.

“ஐம்பது ஆண்டுகள்” என்றார் இன்னொருவர்.

“அதுவும் தவறு” என்றார் புத்தர்.

‘இது என்ன எல்லாவற்றையும் தவறு என்கிறாரே? மனித வாழ்க்கை ஐம்பது ஆண்டுகள் கூட இல்லையா?’ என்று திகைத்தார்கள் சீடர்கள்.

சில வினாடிகள் அமைதியாக இருந்தார் புத்தர். பிறகு அவர் தமது மௌனத்தைக் கலைத்தவாறே முத்தாய்ப்பாக, “மனித வாழ்க்கை என்பது மூச்சிருக்கும் வரை” என்றார்.

“வாழ்க்கை என்பது வெறும் மூச்சு விடும் நேரம்தானா?” என்று விளங்காமல் கேட்டார் ஒரு சீடர்.

“அப்படியல்ல. வாழ்வு ஒரு கணமன்று; ஆனால் ஒவ்வொரு கணமாக வாழ வேண்டும். ஒவ்வொரு கணப்பொழுதும் முழுமையாக வாழ வேண்டும்; முழு ஈடுபாட்டோடு வாழ வேண்டும்” என்று விளக்கினார் புத்தர்.

மனிதருள் சிலர் **நேற்றில்** வாழ்கிறார்கள்; நேற்றைய நினைவுகளில் மூழ்கி இறந்த காலத்தில் வாழ்கிறார்கள். அவர்களுக்கு வாழ்க்கை என்பது எப்போதும் **‘மலரும் நினைவுகள்’** தான்!

இன்னும் சிலர் **அறியப்படாத எதிர்காலத்தில்** - எதிர்காலக் **கனவில்**, எதிர்கால **ஏக்கத்தில்** மூழ்கி - ஒரு தெளிவும் இல்லாமல் வாழ்கிறார்கள். எனவே அவர்கள் நிகழ்காலத்தை இழந்துவிடுகிறார்கள். **“தெளிவும் அறியாது முடிவும் தெரியாது மயங்குது எதிர்காலம்”** (கண்ணதாசன், திரை இசைப் பாடல்கள்: முதல் தொகுதி, ப.344) என்பது போல அவர்கள் ஒருவித மயக்கத்தில் வாழ்கிறார்கள்.

நம் முன்னால் துடித்துக் கொண்டிருப்பது - நம் கைவசம் உள்ளது - நம் ஆளுகைக்கு உட்பட்டது - நம் அதிகாரத்தில் உள்ளது - யதார்த்தமானது - நிகழ்காலம் தான்; நிகழ்காலம் மட்டும்தான். இறந்த காலமோ, எதிர்காலமோ அல்ல.

நடந்தவை பற்றியோ, நடக்கப் போவதைப் பற்றியோ கவலைப்பட்டுக் கொண்டு காலத்தைக் கழிப்பதில் பொருள் இல்லை. நிகழ்காலத்தைப் புரிந்து கொண்டு நடக்க முயல்வதே

உண்மையில் **வாழும் வழி** ஆகும். இன்னமும் எளிமைப்படுத்திச் சொல்ல வேண்டுமா? இதோ, கவிஞர் **வைரமுத்து**வின் மணியான வரிகள்:

> **“நேற்று வரப்போவதில்லை;**
> **நாளை நம் கையில் இல்லை;**
> **இன்று நமதென்று கொண்டால்**
> **இல்லை மனதோடு தொல்லை!”**

இனி ஒரு விதி செய்வோம்; ‘நாளை நமதே’ என்பதை மாற்றி ‘இன்று நமதே’ என்று சொல்லி ஒவ்வொரு நொடியையும் நம் வசப்படுத்திக் கொள்வோம். இனி இளைய தலைமுறையினரைப் பார்த்து “உங்களுக்கு நல்ல எதிர்காலம் உண்டு” என்று வாழ்த்துவதை விடுத்து, **“நிகழ்காலத்தைப் புரிந்து கொண்டு வாழ்வில் உயரப் பாருங்கள்; பாடுபடுங்கள்!”** என்று அவர்களுக்கு உணர்த்துவோம். சரிதானே?

18

உங்கள் வயது என்ன?

"வாழ்க்கை என்ற புத்தகத்திற்கு நாம் மூட்டைப் பூச்சியாக முடிவுரை எழுதப் போகிறோமா, வண்ணத்துப் பூச்சியாக வாழ்த்துரை வழங்கப் போகிறோமா?"

*- பிரதாப்**

கி.மு., கி.பி. என்பது போல மனிதனின் வாழ்க்கையை நாம் **தி.மு., தி.பி.,** என இரண்டாகப் பகுக்கலாம். தி.மு. என்றால் **திருமணத்திற்கு முன்** என்றும், தி.பி. என்றால் **திருமணத் திற்குப் பின்** என்றும் பொருள்படும். திருமணத்திற்கு முன் ஒரு மனிதனின் வாழ்க்கை சுதந்திரமானது; மகிழ்ச்சி நிறைந்தது. திருமணத்திற்குப் பின் மனிதனின் வாழ்க்கையில் உறவுகள் சேருவதால், சுமைகளும் பொறுப்புக்களும் கூடுகின்றன; குழப்பங் களும் நெருக்கடிகளும் மிகுகின்றன; கவலைகளும் கடமைகளும் பெருகுகின்றன. கவியரசர் **கண்ணதாசனும்** 'நிச்சய தாம்பூலம்' என்னும் திரைப்படத்திற்காக எழுதிய பாடல் ஒன்றில் இவ் அனுபவ உண்மையை உணர்ச்சி பொங்கும் நடையில் பதிவு செய்துள்ளார்:

"குரங்காய் இருந்த மனிதன் மனதில்
குழப்பம் ஏதுமில்லை!
குடும்பம் மனைவி அண்ணன் தம்பி
கூட்டம் சிறிதுமில்லை!
ஆசை பாசம் காதலில் விழுந்தான்
அமைதியைக் காணவில்லை!

---

* இது உங்கள் யுகம், ப.81.

அலைந்தான் தவித்தான் துடித்தான் மடிந்தான்
யாருக்கும் லாபமில்லை!...

தன்னந் தனியே பிறந்தவன் நெஞ்சில்
சஞ்சலம் இல்லையடா!
இன்னொரு உயிரைத் தன்னுடன் சேர்த்தால்
என்றும் தொல்லையடா!
இத்தனை சிறிய மனிதனின் தலையில்
எத்தனை சுமைகளடா!
இருபதில் தொடங்கி எழுபது வரைக்கும்
என்றும் மயக்கமடா!..."

(திரை இசைப் பாடல்கள்: மூன்றாவது தொகுதி, பக்.300-301)

மனித வாழ்க்கையின் முற்பகுதி எதிர்பார்ப்பிலும் விருப்பத்திலும் கழிகின்றது; இரண்டாம் பகுதி பொறுப்புக் களைச் சுமப்பதிலும் அவற்றை நிறைவேற்ற அலைந்து திரிவதிலும் கழிகின்றது. வாழ்க்கையின் பிற்பகுதியில் கழுதை பொதி சுமப்பது போல் மனிதன் தன் குடும்பத்திற்காகப் பொறுப்புக் களைச் சுமக்கிறான்; நாடாறு மாதம் காடாறு மாதம் என்பது போல், ஒவ்வொரு மகன் வீடாக மாறி மாறிச் சென்று தங்கி, நாயைப் போல் அலைந்து திரிகிறான். மனிதனுக்கு நாற்பது வயதுக்கு மேல் நாய்க் குணம் என்றும், ஏழரைக் கழுதை வயது என்றும் குறிப்பிடும் வழக்கு நடைமுறையில் உண்டு. கூட்டுக் குடும்ப முறை சிதைந்து, தனிக்குடும்பமாக வாழ்ந்து வரும் இந்நாளில் மனிதன், தன் முதுமைப் பருவத்தில் 'எங்கே நிம்மதி... எங்கே நிம்மதி, அங்கே எனக்கு ஓர் இடம் வேண்டும்' எனத் தேடித் தவித்து, அலைந்து திரிவதை நடைமுறையில் காண்கிறோம். ஓர் இந்தியக் கர்ண பரம்பரக் கதை இவ்வகையில் நினைவுகூரத் தக்கது. மூத்த எழுத்தாளர் **அசோகமித்திர**னின் சொற்களில் அக்கதை வருமாறு:

ஆண்டவன் படைப்பைத் துவக்கி விட்டு யோக நித்திரையில் ஆழ்ந்துவிட்டார். அவர் விழித்தெழும் போது பல நூறு நூற்றாண்டுகள் கழிந்து விட்டன. உலகில் பெரிய நெருக்கடி.

காரணம், கடவுள் உயிரினங்களுக்கு வயதை நிர்ணயிக்கவில்லை. இப்போது செய்தேயாக வேண்டிய நெருக்கடி.

ஒவ்வொரு வகைக்கும் வயது நிர்ணயிக்கப் பல காலம் பிடித்தது. கடவுளுக்கே போதும் போதும் என்றிருந்தது.

எல்லாவற்றையும் முடித்தாகி விட்டது. மூன்றைத் தவிர. அவை மனிதன், கழுதை, நாய். மூன்றின் பிரதிநிதிகளும் கடவுள் முன் நின்றன.

'மனிதன், கழுதை, நாய் இனி ஆளுக்கு நாற்பது ஆண்டுகள்.'

மூன்றும் பதில் பேசவில்லை. அதே நேரத்தில் தீர்ப்பு முடிந்தது என்று திரும்பிப் போகவில்லை.

'என்ன?' என்று கடவுள் கேட்டார். கழுதை பேசியது. "ஆண்டவனே! என் மீது சுமையை நான் நாற்பதாண்டுகள் சகிக்க வேண்டுமா? தயவு செய்து என் வயதை இருபதாக்கி விடுங்கள்."

அப்போது மனிதன் குறுக்கிட்டு, "அந்த இருபதை எனக்குக் கொடுத்து விடுங்கள்" என்றான்.

'சரி' என்றார் ஆண்டவன்.

இப்போது நாய்க்குத் தைரியம் வந்தது. "கடவுளே, என் வயதையும் பாதியாகக் குறைத்து விடுங்கள்."

மனிதன் மீண்டும் குறுக்கிட்டு, 'சாமி...' என்று இழுத்தான்.

'அப்படியே ஆகட்டும்' என்று கூறி கடவுள் மறைந்து விட்டார்.

அன்றிலிருந்து மனிதன் நாற்பது ஆண்டுகள் மனிதனாக வாழ்ந்து, அடுத்த இருபது ஆண்டுகள் கழுதை போல வாழ்ந்து, கடைசி இருபது ஆண்டுகள் நாயாய் அலைய வேண்டியதாயிற்று.

(குமுதம்: இலக்கியச் சிறப்பிதழ், 3.11.2010, ப.96)

நண்பரே, எங்கே மனம் திறந்து சொல்லுங்கள், பார்க்கலாம்: 'இப்போது உங்கள் வயது என்ன?'

19

எங்கே உள்ளான் இறைவன்!

"இன்றைக்குச் செய்ய வேண்டிய செயலை இன்றைக்கே செய்யுங்கள். இப்போதே செய்து முடிக்க வேண்டிய வேலையை இப்போதே செய்து முடியுங்கள்... 'நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம்' என்று ஒத்திப் போட்டுத் 'திருநாளைப் போவாராக' மாறாதீர்கள்."

– *அகிலன்**

மகாராஷ்டிர முன்னாள் ஆளுநர் **சி.சுப்பிரமணியம்** ஒருமுறை தேசியக் கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போது தெரிவித்த ஓர் அரிய யோசனை:

"நாடாளுமன்றம் போன்ற உயர்நிலை அமைப்புக்கள் தலைவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து ஒத்திவைக்கப் படுகின்றன.

தலைவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து, அதிகமாக விடுமுறைகளை அறிவிப்பதற்குப் பதிலாக, அத்தகைய தினங்களில் கூடுதலாக உழைக்கலாம்.

காந்தியடிகள் பிறந்த தினத்தை விடுமுறையாகக் கழிப்பதற்குப் பதிலாக, அன்றைய தினம் கூடுதலாகச் சில மணி நேரம் பணியாற்றி காந்தியடிகளுக்கு மரியாதை செலுத்தலாம். இந்த அம்சங்களை மத்திய மாநில அரசுகள் பரிசீலிக்க வேண்டும்."

இக்கருத்தின் தொடர்ச்சியாகவும் விரிவாகவும் தொழில கங்களின் அனைத்திந்தியத் தலைவர் **விஜய் காளந்திரி** மும்பையில் தெரிவித்துள்ள சில இன்றியமையாத தகவல்கள் இங்கே மனங்கொள்ளத்தக்கவை. அவை வருமாறு:

---

* வெற்றியின் ரகசியங்கள், ப.65.

“அரசு விடுமுறைகளால் இந்த ஆண்டு மட்டும் நாட்டுக்கு ரூ 2,700 கோடி இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

மத்திய அரசு இன்னும் பழைய பாணியிலேயே செயல்படுகிறது. தொழில், வர்த்தகப் பிரிவினருடன் ஆலோசனை கலக்காமல் விடுமுறை அறிவிப்பதால் நாட்டுக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்படுகிறது என்று அது நினைத்துப் பார்ப்பதே இல்லை.

மிகவும் குறைத்து மதிப்பிட்டால் கூட ஒரு விடுமுறை நாளில் அரசுக்கு வரும் வருவாய் ரூ. 100 கோடி இதுவல்லாமல், கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாமலும் ஏற்படுகிற மற்ற இழப்புகளும் உள்ளன.

ஞாயிற்றுக்கிழமைகள், விடுமுறையாகும் சனிக்கிழமைகள் மட்டுமே ஆண்டுக்கு 99 வருகின்றன. இவையல்லாமல் 27 நாட்களை விடுமுறை நாட்களாக அரசு அறிவிக்கிறது.

மத்திய அரசு, மாநில அரசு நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் ஊழியர்களுக்குத் தற்செயல்விடுப்பு. மருத்துவ விடுப்பு, ஈட்டிய விடுப்பு என்று தனி விடுப்புகள் வேறு...

வளர்ந்த நாடுகளில் இடைவிடாமல் தொழிற்சாலைகள் செயல்படுகின்றன. துறைமுகங்கள், விமான நிலையங்கள், ரயில் நிலையங்கள் ஆகியவற்றில் பகல், இரவு பாராமல் மக்கள் சேவை செய்கின்றனர். அங்கு 24 மணி நேரமும் பணியாற்ற அனைத்து வசதிகளையும் அரசும், அமைப்புகளும் செய்து வருகின்றன. இந்தியாவில் வேலை நாட்களும் வேலை நேரமும் குறைவு, உற்பத்தித்திறன் மிகவும் குறைவு...

அனைத்து அரசு ஊழியர்களுக்கும், வங்கி ஊழியர்களுக்கும் 125 விழுக்காடு ஊதியம் உயர்த்தப்பட்டிருக்கிறது. வேலை நேரமோ, வேலை நாட்களோ உயர்த்தப்படவில்லை. கடுமையாக உழைத்து அதிக நேரம் பணியாற்ற வேண்டும் என்ற எண்ணம் நாட்டு மக்கள் அனைவருக்கும் வருவதற்கு அரசின் நடவடிக்கைகள் துணைபுரிய வேண்டும்.”

இந்தியா எதிர்காலத்தில் வல்லரசாக வேண்டும் என்பதிலே யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆனால் அதைவிட முக்கியமானது ஒன்று உண்டு. **‘வளரும் நாடு’ என்ற நிலையில் இருந்து மாறி ‘வளர்ந்த நாடு’ என்ற பெயரை -**

தகுதியை - இந்தியா என்று பெறுகிறதோ அன்றுதான் ஒவ்வோர் இந்தியக் குடிமகனுக்கும் இனிய நாளாக விடியும்; பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க திருநாளாக அமையும்.

நிறைவாக, ஓர் அரிய வாழ்க்கை நிகழ்ச்சிக் குறிப்பு:

மதீனாவில் உள்ள ஒரு பள்ளிவாசலில் இரவும் பகலும் ஒருவர் தொழுது கொண்டிருந்தார். "இவர் யார்? இவரது குடும்பம் எப்படி வாழ்கிறது?" என்று அவரைப் பற்றி நண்பர்களிடம் விசாரித்தார் நபிகள் நாயகம். "அவர் நல்ல பக்திமான். நாள் முழுவதும் தொழுது கொண்டே இருப்பார். அவருக்கு ஒரே சகோதரர் உள்ளார். அவர் விறகு வெட்டி அதை விற்றுக் குடும்பத்தைக் காப்பாற்றுகிறார்" என்று நண்பர்கள் சொன்னார்கள்.

அதைக் கேட்ட நபிகள் நாயகம், "நண்பர்களே! இவரிடம் சொல்லுங்கள், எப்போதும் தொழுது கொண்டிருக்கும் இவரை விட, விறகு வெட்டிப் பிழைக்கும் இவர் சகோதரரே ஆயிரம் மடங்கு சிறந்தவர். குடும்ப வாழ்வுக்காக நியாயமான வழியில் உழைத்துச் சம்பாதிப்பதும் இறைவணக்கம்தான் என்பதையும் இவரிடம் கூறுங்கள்" என்றார்.

'(தேவாதி தேவன்) உள்ளத்தில் உள்ளானடி - அது நீ உணர வேண்டும் அடி!' என்ற **கவிமணி**யின் வாக்கை, இனி நாம் இப்படி மாற்றிக் கூறுவோம்; **(எல்லாம் வல்ல இறைவன்) உழைப்பில் உள்ளானடி - அது நீ உணர வேண்டும் அடி!'**

20

விடை காண முடியாத வினா

"எல்லாக் குணங்களையும் கடந்தவன் என்பதை என்றோ கண்ட தமிழர்கள் அப்பொருளுக்குக் 'கடவுள்' என்று பெயரிட்டனர். இந்தச் சொல்லுக்கு ஈடான வேறு ஒரு சொல்லை எந்த மொழியிலும் காண முடியாது."

*- அ.ச.ஞானசம்பந்தன்**

நல்லவன் வாடுகிறான், கெட்டவன் வாழ்கிறான் -ஏன்?

'திருக்குறள் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட' வள்ளுவர் பெருமானையே விடை சொல்ல முடியாமல் திகைக்க வைத்த வினா இது! காலங்காலமாகச் சமுதாயத்தில் அன்று முதல் இன்று வரை நிலவி வரும் ஒரு கொடுமைதான் இது! இல்லையென்றால் வள்ளுவர் பெருமான் இப்படி ஒரு குறளை இயற்றி இருப்பாரா?

"அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்." (169)

'அழுக்காறாமை' அதிகாரத்தில் இடம்பெறும் ஒன்பதாவது குறட்பா இது. "பொறாமை மனமுள்ளவன் செல்வமுள்ளவனாக இருப்பதும், செம்மையான மனமுள்ளவன் ஏழையாக இருப்பதும் சிந்திக்க வேண்டிய விஷயங்கள் தாம்" என்பது **நாமக்கல் கவிஞர்** இக் குறட்பாவுக்கு எழுதும் எளிய உரை விளக்கம்.

முன்னைப் **பரிமேலழகர்** முதலாகப் பின்னைப் **பாவாணர்** ஈறாக உள்ள உரையாசிரியர்கள் பலரும் இக்குறட்பாவில் இடம் பெற்றுள்ள 'நினைக்கப் படும்' என்னும் தொடருக்குத் தத்தம்

---

* திருவாசகம் - சில சிந்தனைகள்: 1, ப.73.

மனத்திற்குத் தோன்றிய வண்ணம் பற்பல விளக்கங்களைத் தந்துள்ளனர்.

"இம்மைச் செய்தன யானறி நல்வினை
உம்மைப் பயன்கொல் ஒருதனி உழந்துஇந்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது
விருத்த கோபால நீ?" (15: 9194)

எனச் சிலப்பதிகாரத்தில் வரும் மாடலனின் கூற்றை மேற்கோள் காட்டி, 'நினைக்கப்பட்டவாறு அறிக' எனச் சுட்டுவர் பரிமேலழகர்.

பாவாணர் தம் 'திருக்குறள் மரபுரை'யில் 'நினைக்கப் படும்' என்னும் தொடருக்குத் தரும் விளக்கம் வருமாறு: "எக் கரணியம் பற்றி நேர்ந்தனவென்று ஆராயப்படும். இரு நிலைமையும் இயற்கைக்கும் அறநூற் கொள்கைக்கும் மாறாயிருப்பதால், அவற்றிற்குக் கரணியம் **பழவினையே** என்பது ஆராய்ச்சியால் அறியப்படும்." மேலும் அவர்,

"என்செய லாவதி யாதொன்று மில்லை இனித்தெய்வமே
உன்செய லேயென் றுணரப்பெற் றேன்இந்த ஊனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்றும் இல்லை பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோஇங்ங னேவந்து மூண்டதுவே"

என்னும் **பட்டினத்தார்** பாடல் 'இவ்வகையாராய்ச்சியைக் குறிக்கும்' எனக் கூறுகின்றார்.

மூதறிஞர் **வ.சுப.மாணிக்கம்** இக்குறட்பாவுக்கு வரைந் திருக்கும் உரை விளக்கம் இங்கே மனங்கொள்ளத் தக்கதாகும். "பொறாமைப் படுபவன் உண்மையில் வளர்கிறானா? நல்லவன் கெடுகிறானா? எண்ணிப் பார்" என்பது வ.சுப.மா.வின் தெளிவுரை. 'பொறாமைப் படுபவன் வளர்ச்சி உண்மையில் வளர்ச்சி தானா? நல்லவன் கேடு உண்மையில் கேடு தானா?' என்று கேட்டு நம்மைச் சிந்திக்கத் தூண்டுகின்றார் வ.சுப.மா.

கிறித்தவத் திருமறையான **பைபிள்** கூறும் வாழ்வியல் சிந்தனை ஒன்று இங்கே ஒப்புநோக்கி உணரத்தக்கதாகும். பைபிள் படித்தவர்களுக்குச் **சாலமன்** என்ற பெயரில் மிகப் பெரிய ஞானி ஒருவர் இருந்தார் என்பது தெரியும். ஒரு நாள் அவருக்கு ஓர் ஐயப்பாடு தோன்றியது.

"நல்லவன் எப்போதும் வறுமைவாய்ப்பட்டுத் துன்பப் படுகிறானே, ஏன்? கெட்டவன் எல்லா விதமான வசதிகளும் பெற்று மகிழ்ச்சியாக வாழ்கிறானே, எப்படி? செல்வ வளம் படைத்த பலருக்குக் குழந்தைப் பேறு இல்லையே, ஏன்? அவர்கள் விரும்பியும், அதற்காகத் தவமாய்த் தவம் இருந்தும் அவர்களுக்குக் குழந்தை பிறக்காதது ஏன்? அன்றாடம் ஒருவேளைச் சோற்றுக்கே அல்லாடும் ஏழைக்கு மிகுதியாகக் குழந்தை பிறப்பது ஏன்? இது கடவுள் செயலா? அல்லது சாத்தான் வேலையா? கடவுள் செயல் என்றால் அது நியாயம் ஆகுமா? சாத்தானின் வேலை என்றால் கடவுளின் சக்திக்கு மீறியும் இது போன்ற செயல்கள் நடக்க முடியுமா?" - இது தான் ஞானி சாலமனின் ஐயப்பாடு.

பல நாள் இதைப் பற்றிச் சிந்தித்தும் சாலமன் ஞானிக்கு விடை கிடைக்கவில்லை; ஒன்றும் விளங்கவும் இல்லை. கடைசியாக அவர் கடற்கரைக்குச் சென்று காலையில் இருந்து மாலை வரையில் கடல் நீர் தம் காலில் படும்படி நடந்தவாறே சிந்தித்துப் பார்த்தார். ஆனாலும் ஒன்றும் அவருக்குப் பிடிபடவில்லை.

இருப்பினும் சாலமன் ஞானி தம் முயற்சியைக் கைவிடுவதாக இல்லை. நாள்தோறும் காலையில் எழுந்ததும் கடற்கரைக்குச் செல்வதும், இதுபற்றிச் சிந்திப்பதும், மாலையில் வீடு திரும்புவதுமாக இருந்தார். இப்படியே நாட்கள் பல கழிந்தன.

ஒரு நாள் இப்படிக் கடற்கரையில் உலவிக் கொண்டிருந்த போது ஒரு சிறுவன் தன் கையில் சிறிய கொட்டாங்கச்சியை வைத்துக் கொண்டு அதில் கடல் நீரை எடுத்து மணலில் ஊற்றி விளையாடிக் கொண்டிருந்ததைக் கண்டார் சாலமன். எனினும் அவர் அதைப் பொருட்படுத்தாமல் தம் சிந்தனையில் மூழ்கியவாறே நடந்து கொண்டிருந்தார்.

மாலைப் பொழுது மறையவே சாலமன் வீடு திரும்ப லானார். சிறுவனோ தொடர்ந்து விளையாடிக் கொண்டிருந் தான். சாலமன் அந்தச் சிறுவனிடம் சென்று, "தம்பி! பொழுது இருட்டுகிறதே, நீ வீடு திரும்பவில்லையா?" என்று கேட்டார். அதற்குச் சிறுவன், "ஐயா! உங்கள் வேலை முடிந்து விட்டது, நீங்கள் போகிறீர்கள். என் வேலை இன்னும் முடியவில்லை, அது

முடிந்த பிறகு தான் நான் வீடு திரும்புவேன்" என உறுதியான குரலில் மறுமொழி கூறினான்.

"தம்பி! அது என்ன வேலை?" எனக் கேட்டார் சாலமன். அதற்குச் சிறுவன், "கடல் நீரை முழுவதுமாகக் கொட்டாங் கச்சியால் இறைத்துக் கரையில் ஊற்றுகின்ற வேலை" என்றான். ஞானி வியப்போடு சிரித்தார்.

"தம்பி! நீ எவ்வளவு! கடல் நீர் எவ்வளவு! உன் கையில் உள்ள கொட்டாங்கச்சி எவ்வளவு! இதைக் கொண்டு அதை எப்படி இறைத்து ஊற்ற முடியும்?" என்றார்.

சிறுவன் சொன்னான்: "ஐயா! நீங்கள் எவ்வளவு! ஆண்டவன் எவ்வளவு! உங்கள் மூளை எவ்வளவு! இந்த மூளையைக் கொண்டு ஆண்டவனின் செயலை அறிய முடியு மானால் இந்தக் கொட்டாங்கச்சியைக் கொண்டு இக்கடல் நீரை இறைத்து விட முடியாதா? நீங்களும் முயற்சி செய்யுங்கள். நானும் முயற்சி செய்கிறேன்." இப்படிச் சொல்லிவிட்டு மறுபடியும் கடல் நீரை எடுத்து வரச் சிறுவன் ஓடினான்.

சாலமன் ஞானிக்கு இப்போது விடை கிடைத்து விட்டது. 'மனிதன் தன் அறிவைக் கொண்டு ஆண்டவனுடைய செயல்களை அளக்க முயற்சி செய்வது, கொட்டாங்கச்சியைக் கொண்டு கடல் நீரை இறைக்க முயற்சி செய்வது போன்றது' என்பதே. ஞானியின் ஐயம் மறைந்தது; சிறுவனும் மறைந்தான்.

இதுபோல் எவராலும் எளிதில் விடை காண முடியாத வினாக்கள் இன்னமும் எத்தனையோ உள்ளன. அதனால்தான் நக்கீரரும் திருமுருகாற்றுப்படையில்,

> **"நின்னளந்து அறிதல் மன்னுயிர்க்கு அருமையின்**
> **நின்னடி உள்ளி வந்தனென் நின்னொடு**
> **புரையுநர் இல்லாப் புலமையோய்" (279-281)**

என முருகப் பெருமானை விளித்துப் போற்றியுள்ளார் போலும்!

21

எல்லா நேரமும் நல்ல நேரம்தான்!

"நமக்கிருக்கிறது
வெற்றி ராசி
நம்பிக்கை நட்சத்திரம்
முயற்சி லக்னம்
லட்சிய ஜாதகம்" - பா.விஜய்*

சமுதாயத்தில் நான்கு வகையான மனிதர்கள் உண்டு. ஒருசாரார், 'வானமே எல்லை' என எண்ணாமல் தமக்கு 'நேரமே இல்லை' என்று சொல்லிப் பெரிதாக அலட்டிக் கொள்வார்கள். கிட்ட நெருங்கிப் பார்த்தால், 'நேரம் இல்லை!' என்று சொல்வதற்குத்தான் இவர்களுக்கு நிறைய 'நேரம் இருக்கும்!' இன்னொரு சாரார், 'நேரம் போகவில்லை' என்று கூறிச் சும்மாவே இருப்பார்கள். அல்லது தூங்கிக் கழிப்பார்கள் விழித்திருக்கும் போது வீண் வம்பிலும் அரட்டையிலும் ஈடுபட்டுத் தங்கள் நேரத்தைக் கொல்லுவதில் வல்லவர்கள் இவர்கள். பிறிதொரு சாராருக்கோ நேரம் போதாது. இவர்கள் எந்த நேரமும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருப்பார்கள்; பம்பரம் போல் சுழன்று கொண்டே இருப்பார்கள்; நல்ல வழிகளில் திட்டமிட்டு நேரத்தைப் பயன்படுத்திக்கொள்ளத் தெரிந்தவர்கள் இவர்கள். இவர்களது பார்வையில் காலம் பொன் போன்றது மட்டுமன்று; பொன்னினும் மேலானது. சிறியவர் - பெரியவர், ஆடவர் - மகளிர், ஏழை - பணக்காரர், கிராமவாசி - நகரவாசி, தொழிலாளி - முதலாளி என யாராக இருந்தாலும் அனைவருக்கும் ஒருநாள் என்றால் 24 மணி நேரம்தான்! இந்த 24 மணி நேரத்தை எப்படிப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதைப் பொறுத்தே ஒருவரது வாழ்வில் மாற்றமும் ஏற்றமும் அமையும்.

---

* நம்பிக்கையுடன்... (பாகம் 2), ப.70.

இந்த மூன்று சாராரிடம் இருந்து வேறுபட்டு, 'எனக்கு இப்பொழுது நேரம் சரியில்லை!' என்று சொல்லித் திரிவோரும் இன்றைய சமுதாயத்தில் உள்ளனர். இவர்கள் தங்கள் கைகளை நம்பாமல், தங்கள் கைகளில் உள்ள ரேகைகளை நம்புபவர்கள்; தங்கள் சுயமதியை நம்பாமல், தலைவிதியை நம்புபவர்கள்.

அமைதியாக எண்ணிப் பார்த்தால் - ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் - ஓர் அடிப்படையான உண்மை விளங்கும். நாம் வேலை செய்வதற்கு என்று நேரத்தை ஒதுக்கி இருக்கிறோம்; எட்டு மணி நேரம் வேலை செய்கிறோம். நாம் தூங்குவதற்கு என்று நேரத்தை வகுத்திருக்கிறோம்; எட்டு மணி நேரம் தூங்கு கிறோம். ஆனால் வாழ்வதற்கு என்று ஒரு நாளில் எத்தனை மணி நேரம் திட்டமிட்டிருக்கிறோம்? இந்தக் கேள்வியைத் தான் இன்றைய புதுக்கவிஞர் ஒருவர் இப்படிக்கேட்டார்.

"எட்டு மணி நேரம்
வேலை செய்ய வேண்டும்
எட்டு மணி நேரம்
தூங்க வேண்டும்
எத்தனை மணி நேரம்
வாழ வேண்டும்?"

ஒருமுறை முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் தம் உரையின் ஊடே குறிப்பிட்ட ஓர் இன்றியமையாத நிகழ்ச்சி வருமாறு:

"கடிகாரத்தில் மூன்று முட்கள் இருப்பதை நீங்கள் அறிவீர்கள். ஒன்று மணியைக் காட்டுகின்ற முள், இரண்டு மணித்துளியைக் (நிமிடத்தை) காட்டுகின்ற முள், மூன்று வினாடியைக் காட்டு கின்ற முள். இதில் மணியைக் காட்டுகின்ற முள் இந்தியர்களுக் காக ஓடுவதாக எண்ணிக் கொள்வேன். நிமிடத்தைக் காட்டு கின்ற முள் ஆங்கிலேயர்களுக்காக ஓடுவதாக நினைத்துக்கொள் வேன். ஆனால் அந்த மூன்றாவது முள் யாருக்காக ஓடுகிறது என்பது என்க்கு ரொம்ப நாளாகப் புலப்படாமல் இருந்து வந்தது.

சில ஆண்டுகளுக்கு முன்னால் ஜப்பானியக் கப்பல் ஒன்று சென்னைத் துறைமுகத்திற்கு வந்தது. அந்தக் கப்பலின் கேப்டனைச் சந்திக்க வேண்டும் என்று நேரம் கேட்டிருந்தேன்.

வாய்ப்பும் கிட்டியது. கேப்டனைச் சந்தித்து 'ஹலோ' என்று சொல்லி, கையைக் குலுக்கி, என்னுடைய பெயர், ஊர், விவரம் முதலியவற்றைச் சொல்லி முடிப்பதற்கும் அவர்கள் கொடுத் திருந்த நேரம் முடிவதற்கும் சரியாக இருந்தது. நான் அவசர அவசரமாக அந்த அறையிலிருந்து வெளியே வந்து விட்டேன்! அவர்கள் எனக்குக் கொடுத்திருந்த நேரம் எவ்வளவு தெரியுமா? இருபது வினாடிகள் (இருபது நிமிடங்கள் அல்ல. இருபது வினாடிகள்). அப்பொழுதுதான் எனக்குப் புரிந்தது. அந்த மூன்றாவது முள் ஜப்பானியர்களுக்காக ஓடுகின்றது என்பது..."

நேரத்தைப் பற்றி ஜப்பானியர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை இந்த ஒரு நிகழ்ச்சியில் இருந்தே நாம் ஊகித்துக் கொள்ளலாம்!

இனி நாம் ஒரு விதி செய்வோம்: அதை எந்த நாளும் காப்போம்! நேரத்தைச் சரியாகப் பயன்படுத்துவோம். திட்ட மிட்டுப் பணியாற்றுவோம். 'எனக்கு இப்போது நேரம் சரி இல்லை' என்ற பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைப்போம். 'எல்லா நேரமும் நல்ல நேரம்தான் - அதன் அருமையை உணர்ந்து பயன்படுத்த வேண்டிய முறையில் பயன்படுத்தினால்' என்ற முடிவுக்கு வருவோம்!

22

சகுனம் பார்க்கும் வழக்கத்திற்கு முழுக்குப் போடுங்கள்!

"நான் அதிர்ஷ்டத்தில் அசையாத நம்பிக்கை உள்ளவன்; நான் அதிகமாக உழைக்க, உழைக்க எனது அதிர்ஷ்டம் அதிகமாகிக் கொண்டே போகிறது."

*- தாம்ஸ் ஜெபெர்ஸன்**

மதுரையில் சமணர்களோடு வாதிடுவதற்காகத் திருஞான சம்பந்தர் புறப்பட நேர்ந்தது. அந்த நாள் சோதிடப்படி நல்ல நாளாக இல்லை என்று உடன் இருந்தவர் அதைச் சுட்டிக் காட்டித் தடை எழுப்பினார். அப்போது திருஞான சம்பந்தர் "எங்கள் தலைவன் சிவபெருமான் பெண் ஒருபாகமாகக் கொண்டவன், நஞ்சையே உண்டு கண்டம் கறுத்தவன், கங்கையையும் பிறைச் சந்திரனையும் முடியில் அணிந்து என் உள்ளத்தில் குடி புகுந்தவன், அவ்வாறு அவன் என் உள்ளத்தில் இருப்பதால் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய நாள்களும், ராகு, கேது என்பனவும் ஒரு தீமையும் செய்யமாட்டா. அவை எல்லாம் நல்லவைகளே, அடியார் களுக்கு மிக நல்லவைகளே" என்று அஞ்சாமையும் ஊக்கமும் பிறக்குமாறு ஒரு பதிகம் பாடினார்.

"வேயுறு தோளி பங்கன், விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள், கங்கை முடி மேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
சனி பாம்பு இரண்டும் உடனே

---

* *மேற்கோள்: ஆர்.பாலகிருஷ்ணன், சிறக்குக்குள் வானம், ப.82.*

ஆசறு நல்ல நல்ல, அவை நல்ல நல்ல

அடியார் அவர்க்கு மிகவே”

‘குழந்தை ஞானி’ திருஞானசம்பந்தர் தோன்றி, ‘கோளறு பதிகம்’ பாடிய இந்தத்திருநாட்டிடில்தான் இன்று மனிதன் ‘கிளி சோதிடம்’ பார்க்கிறான். ஏன், கம்ப்யூட்டரில் கூட சோதிடம் பார்க்கிறான். பல்லி விழுந்தால் உடனே பஞ்சாங்கத்தில் பலன் பார்க்கிறான். ‘நரி முகத்தில் விழித்தால் நன்மை உண்டாகும்’, ‘கழுதை படத்தை மாட்டி வைத்தால் அதிர்ஷ்டம் அடிக்கும்’, ‘பூனை குறுக்கே போனால் போன காரியம் தடைப்படும்’ என்றெல்லாம் பற்பல மூடநம்பிக்கைகளைக் கொண்டிருக்கிறான். கவிஞர் அறிவுமணி தம் கவிதை ஒன்றில் கேட்பது போல், ‘பூனை எலியைப் பிடிக்கப்போகிறது. நீங்கள் பஸ்ஸைப் பிடிக்கப் போகிறீர்கள். பூனை அதன் வேலையை ஒழுங்காகச் செய்யும் போது நீங்கள் உங்கள் வேலையைக் கருத்தாகச் செய்யக் கூடாதா?’ இன்னும் எத்தனை காலம்தான் இது போலத் தேவையில்லாத சகுனங்களைப் பார்த்துக்கொண்டு வாழ்நாளை வீணாளாகக் கழித்துக் கொண்டிருப்பது?

இதோ, நம் சிந்தனைக்கு விருந்தாகும் ஒரு நாட்டுப் புறக்கதை.

‘அதிகாலையில் இரண்டு காகங்கள் ஒன்றாக ஒரு கிளையில் அமர்ந்திருப்பதைக் காண நேர்ந்தால் அதனால் பெருத்த நன்மை உண்டு’ என்று புகழ் பெற்ற சோதிடர் ஒருவர் அரசனிடம் சொன்னார்.

அன்று முதல் இரண்டு காகங்களை அதிகாலையில் காண வேண்டும் என்ற ஆசை அரசனுக்கு ஏற்பட்டது. நாளுக்கு நாள் அந்த ஆசை அவனுக்குத் தீவிரமாகிக் கொண்டு வந்தது.

ஆகவே, அவன் தன் வேலையாளை நோக்கி, ‘அதிகாலையில் இரண்டு காகங்கள் ஒன்றாக இருப்பதை நீ பார்க்க நேர்ந்தால், தாமதிக்காமல் உடனடியாக வந்து என்னிடம் செல்லு!’ என்று கட்டளை இட்டான்.

மறுநாள் அதிகாலையில் இரண்டு காகங்கள் ஒன்றாக ஒரே கிளையில் அமர்ந்திருப்பதை வேலையாள் கண்டான். ஓடோடியும் அரசனிடம் சென்று இரண்டு காகங்கள் ஒன்றாக இருப்பதைத் தெரிவித்தான்.

காகங்களைப் பார்ப்பதற்காக அரசன் மகிழ்ச்சியுடன் எழுந்து வந்தான். ஆனால் அதற்குள் ஒரு காகம் பறந்து போய் விட்டது. அரசன் வந்து பார்த்தபோது ஒரு காகம் மட்டும்தான் மரத்தின் மீது அமர்ந்திருந்தது.

அரசனுக்கு ஆத்திரம் தாங்கமுடியவில்லை. பொய் சொல்லி விட்டான் என்று குற்றம் சாட்டி வேலையாளை நையப் புடைக்கச் செய்தான்.

'அதிகாலையில் இரு காகங்களைப் பார்ப்பவனுக்கு எனக்கு நேர்ந்த கதி தான் சேரும்' என்று அடிவாங்கிய வேலையாள் அலறினான்.

இதைக் கேட்டதும் அரசன் முகம் நாணத்தால் சுருங்கிப் போய்விட்டது. அன்று முதல் சகுனம் பார்க்கும் வழக்கத்தை அந்த அரசன் விட்டுவிட்டான்.

நீங்களும் இந்த நாட்டுப்புறக் கதையில் வரும் அரசனைப் போல் சகுனம் பார்க்கும் வழக்கத்திற்கு முழுக்குப் போட்டு விடுவது என்ற முடிவுக்கு என்று வரப்போகிறீர்கள்?

23

உழைப்புக்குப் பின் வரும் உறக்கம் தான் சொர்க்கம்!

"தமிழரின் வாழ்வியலை இரண்டே சொற்களில் சுருக்கிச் சொல்வதானால் முயற்சியும் பயிற்சியும் எனலாம்."

- பெரியார்தாசன்*

உழைப்பின் பெருமையை உயர்த்திப் பிடிக்கும் பழமொழி கள் உலகெங்கும் காணப்படுகின்றன.

'மனிதன் உழைக்கிறான், கடவுள் வாழ்த்துகிறார்' என்கிறது **அமெரிக்கப் பழமொழி** ஒன்று.

'வியர்வையைச் சிந்து, நீ நன்கு வாழ்வாய்' என உழைப்புக்கு மகுடம் சூட்டுகின்றது பிறிதோர் **ஆப்பிரிக்கப் பழமொழி**.

'வயலில் முதல் ஆளாகவும், படுக்கைக்குக் கடைசி ஆளாகவும் இரு': இது **சீனப் பழமொழி** காட்டும் வாழ்க்கை நெறி.

'நடந்தால் ஏதாவது கிடைக்கும் - அமர்ந்தால் ஒன்றும் இல்லை': இது **பல்கேரியப் பழமொழி** உணர்த்தும் அனுபவப் பாடம்.

'உழைக்கவே பிறந்த நீ ஓய்வை ஏன் தேடுகிறாய்?' என்பது **லத்தீன் பழமொழி** மனித குலத்திற்குத் தொடுக்கும் கூரிய கேள்விக் கணை.

'அடிமை போல் உழைப்பவன் அரசனைப் போல் உண்கிறான்' என உழைப்பின் உயர்வுக்குக் கட்டியம் கூறுகிறது ஓர் **இந்தியப் பழமொழி**.

---

* வெற்றி நிச்சயம், ப.115.

'உழைப்பில் இருக்கிறது வாழ்க்கை' என்பது ஒரு **ரஷ்யப் பழமொழி** பறைசாற்றும் முடிந்த முடிபு.

தமிழக முதல்வர் **ஜெயலலிதா அம்மையார்** ஒருமுறை கூட்டுறவுத் தொழிலாளர்கள் இடையே உரையாற்றும் பொழுது சொன்ன பொருள் பொதிந்த குட்டிக் கதை:

ஓர் ஊரில் மிகப் பெரிய பணக்காரர் ஒருவர் வசித்து வந்தார். நாட்டிலேயே தாம் ஒருவர் மட்டுமே சுகபோகத்தை ஏராளமாக அனுபவிப்பதாக அந்தப் பணக்காரருக்கு நினைப்பு.

ஒருநாள் அந்தப் பணக்காரரைத் தேடி ஒரு துறவி வந்தார். அந்தத் துறவியை அந்தப் பணக்காரர் வணங்கி உபசரித்தார்.

பின்னர் அந்தத் துறவியைப் பார்த்து, "உலகம் முழுவதும் சுற்றிய அனுபவம் உங்களுக்கு இருக்கிறது. என்னை விட இந்த உலகில் சுகத்தை அனுபவிக்கிறவர்களைத் தாங்கள் பார்த்து இருக்கிறீர்களா?" என்று கேட்டார் அந்தப் பணக்காரர்.

இலேசாகப் புன்னகைத்த துறவி, "உன்னை விடச் சுகமாக வாழ்கிறவரை வேறு எங்கும் தேட வேண்டாம். அவர் உங்கள் நாட்டிலேயே இருக்கிறார்" என்று அந்தப் பணக்காரரைப் பார்த்துக் கூறினார்.

"என் நாட்டிலா, எங்கே?" என்று வியப்புடன் கேட்டார். அந்தப் பணக்காரர்.

"வாருங்கள், நேரிலேயே அவரை நான் காட்டுகிறேன்" என்றார் துறவி.

பின்னர் அந்தப் பணக்காரரை வயல்வெளிக்கு அழைத்துச் சென்றார் துறவி. அப்போது கடுமையான கோடை வெய்யில் சுட்டெரித்துக் கொண்டிருந்தது.

அப்போது அந்த வெயில் பற்றிய கவலையே இல்லாமல், வியர்வைக்கு அஞ்சாது, அறுபது வயது மதிக்கத்தக்க பெரியவர் ஓர் இளைஞனைப் போல் உழவுப் பணியை மேற்கொண்டு இருந்தார்.

அந்தப் பெரியவரைச் சுட்டிக்காட்டி, 'உன்னை விட சுகம் அனுபவிக்கும் சுகபோகி' என்று பணக்காரரிடத்தில் கூறினார் அந்தத் துறவி.

“இந்தக் கிழவன் என்னை விட சுகபோகியா, கேலி வேண்டாம்” என்றார் அந்தப் பணக்காரர், துறவியைப் பார்த்து.

துறவி அந்தப் பணக்காரரைப் பார்த்து மீண்டும் புன்னகைத்தார்.

“செல்வந்தரே, இந்தத் தள்ளாத வயதிலும் அவர் உழைப்பைப் பாருங்கள். கடுமையான உழைப்பு. வெயிலுக்கு அஞ்சாமல் உழைத்துக் கொண்டு இருக்கிறார். இந்த உழைப்பிற்குப் பின்னே அவருக்கு நன்றாகப் பசி எடுக்கும். கூழோ கஞ்சியோ எதுவானாலும் அவருக்கு அமிர்தம் தான். மீண்டும் பகல் முழுவதும் உழைப்பார். அந்த உழைப்பின் களைப்பில் இரவில் நிம்மதியாக உறங்குவார். சுகபோகம் என்பது வெயிலையும் பனியையும், புயலையும் மழையையும் ஆனந்தமாய் எதிர்கொள்ளக் கூடியது. அதை எதிர்கொள்ள, அவர் எப்போதும் தயார். **உழைப்புக்குப் பின்வரும் உறக்கம் தான் சொர்க்கம். உழைக்காமல் வரும் எதுவும் சுகபோகம் ஆகாது.** இப்போது கூறுங்கள், நீங்கள் சுகபோகியா அல்லது அந்த உழைப்பாளி சுகபோகியா என்று?” என்று பணக்காரரைப் பார்த்துக் கேட்டார் அந்தத் துறவி.

உடனே அந்தப் பணக்காரர், துறவியைப் பார்த்து வணங்கினார். “என்னை மன்னித்து விடுங்கள், நான் உழைக்கத் தயாராகி விட்டேன்!” என்று நெகிழ்வுடன் கூறினார்.

இந்தப் பெரியவரின் வழியில் **இனிமேல் நாமும் உழைப்புத் தான் வாழ்க்கை என்று உணர்ந்து வேலை செய்வோம். லத்தீன் பழமொழி** ஒன்று கூறுவது போல், **நம் கால்பட்ட இடமெல்லாம் ரோஜாச் செடிகள் முளைக்கும்!**

24

நில்லா உலகில் நிலைத்த சுகம் பெற...

"மிகவும் சிந்தித்தால் உண்மையான வாழ்க்கை புற வாழ்க்கையன்று; அக மன வாழ்க்கையே. 'மனம் போல் வாழ்வு' - என்பது மிக நுட்பமான, ஆழமான பழமொழி."

- தமிழண்ணல்*

வாழ்வில் நிம்மதியும் மகிழ்ச்சியும் நிலவ வேண்டும் என்றால்- அமைதியும் இன்பமும் களிநடம் புரிய வேண்டும் என்றால் - நாம் விட்டொழிக்க வேண்டிய - முற்றும் துறக்க வேண்டிய - சொற்கள் இரண்டே இரண்டு எனத் 'துறவு' அதிகாரத்தில் இரத்தினச் சுருக்கமாய் எடுத்துரைக்கிறார் **வள்ளுவர்**. அவையாவன: 1. **'நான்'**, 2. **'எனது'**, 'யான்', 'எனது' என்ற பற்றுக்களைத் துறந்தவர்கள் - முற்றிலுமாக விட்டொழித்தவர்கள் - தேவர்களுக்கும் எட்டாத உயர்நிலையை அடைவார்கள் என்பது வள்ளுவர் அமுத மொழி.

"யான்எனது என்னும் செருக்கு அறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்." (346)

இக் கருத்தினை அழகுற உணர்த்தும் **ஜென் கதை:**

ஷின் வம்சத்தைச் சேர்ந்த மன்னன் ஒருவன் இருந்தான். அவன் ஆட்சி சிறப்பாக இருந்தது. ஆயினும் அவன் மனத்தில் சற்றும் நிம்மதி இல்லை; நாளுக்கு நாள் மனச்சுமை அதிகரித்தது. கடைசியில் ஓர் ஊரில் ஜென் குரு ஒருவர் இருப்பதைக் கேள்விப் பட்டு அமைதியை நாடி அவரைத் தரிசிக்கச் சென்றான் மன்னன்.

---

* மனத்துக்கு மனம், ப.7

"அரச காரியங்கள் செவ்வனே நடக்கின்றனவா?"

"ஆம், சுவாமி. ஒரு குறையும் இல்லை."

"மக்கள் துயரின்றி இருக்கிறார்களா?"

"ஆஹா! எந்தக் குறையுமின்றி வாழ்ந்து வருகிறார்கள்."

"அப்படியானால் உனக்கு என்ன குறை?"

"என் மனத்தில் கொஞ்சம் கூட அமைதி இல்லையே!" என்றான் மன்னன் ஏக்கமாக.

"ஒன்று செய். உனது நாட்டை எனக்குக் கொடுத்து விடு!" என்றார் குரு.

ஆச்சரியப்பட்ட மன்னன், "எடுத்துக் கொள்ளுங்கள், சுவாமி!" என்றான்.

"சரி, நாட்டை எனக்குக் கொடுத்து விட்டாய். நீ என்ன செய்வாய்?" என்று அமைதியாகக் கேட்டார் குரு.

"என் வழிச்செலவுக்குக் கொஞ்சம் பொருள் எடுத்துக் கொண்டு எங்காவது சென்று விடுவேன்!" என்றான் மன்னன் சற்றும் தயக்கம் இல்லாமல்.

"நாட்டையே எனக்குத் தந்த பிறகு கஜானா என்னுடையது தானே? அதில் பொருள் எடுக்க உனக்கு ஏது உரிமை?" என்று அவனை மடக்கினார் குரு.

திகைத்த மன்னன், "தாங்கள் சொல்வது சரிதான். நான் இப்படியே புறப்படுகிறேன்!" என்றான் தீர்மானமாய்.

"எங்குப் போவாய்?" குரு மன்னனை விடுவதாய் இல்லை.

"எங்காவது போய் ஏதாவது வேலை செய்து பிழைத்துக் கொள்வேன்." எதற்கும் தயாராக இருந்தான் மன்னன்.

"அந்த வேலையை என்னிடமே நீ செய்யலாமே?" என்ற குரு, "என் பிரதிநிதியாக இந்த நாட்டை நீயே பராமரித்து வா. உன் செலவுக்கு அரண்மனைப் பொக்கிஷத்தில் இருந்து ஊதியம் பெற்றுக்கொள். எனக்கு எப்போது வசதிப்படுமோ அப்போது நான் வந்து கணக்கு வழக்குகளைச் சரிபார்த்துக் கொள்கிறேன்" என்றார்.

'சரி' என்றபடி நாடு திரும்பினான் மன்னன்.

இரண்டு ஆண்டுகள் உருண்டு ஓடின.

திடீரென ஒரு நாள் குரு அரண்மனைக்கு வந்தார். மன்னர் ஓடோடிச் சென்று குருவைப் பணிந்து வரவேற்றான்.

குரு ஆசனத்தில் அமர்ந்தார்.

"என்ன மன்னா, எப்படி இருக்கிறது நாடு?"

"ஆஹா! கணக்கு வழக்குகள் எல்லாம் சரியாய் இருக்கின்றன. நீங்களே சரிபார்த்துக் கொள்ளுங்கள்." எழுந்திருந்தான் மன்னன்.

கணக்குகளைக் கொண்டு வர எழுந்த மன்னனைக் கையமர்த்தித் தடுத்தார் குரு.

"கணக்குகள் இருக்கட்டும். உன் மனநிலை எப்படி இருக்கிறது?"

"நிம்மதியாய் இருக்கிறது" என்றான் மன்னன்.

"ஏன்?"

புரியவில்லை மன்னனுக்கு.

"இதற்கு முன் நீ செய்த ஆட்சிக்கும், இந்த இரண்டு ஆண்டுக் கால ஆட்சிக்கும் ஏதாவது மாறுதல் உண்டா?" குரு நிதானமாய்க் கேட்டார்.

"இல்லை" என்றான் மன்னன் திகைப்புடன்.

"அதே அரண்மனை, அதே அதிகாரிகள், அதே பரிபாலனம்! ஆனால் இப்போது உனக்கு நிம்மதி இருக்கிறது. அப்போது இல்லையே, அது ஏன்?"

மன்னன் விழித்தான். குரு விளக்கினார்.

"அப்போது 'இது உன்னுடையது' என்று நீ இருந்தாய். இப்போது 'இது வேறொருவருடையது; நாம் வெறும் பிரதிநிதி' என்று இருக்கிறாய். 'இது எனது இல்லை' என்ற எண்ணம் ஏற்பட்டதுமே மனத்தின் துயரங்கள் விலகிவிட்டன. உண்மையில் இந்த உலகம் நமதல்ல; படைத்தவன் யாரோ? இந்த

உடல் நமதல்ல; அளித்தவன் யாரோ? ஆகவே 'இது எனதல்ல' என்ற நினைப்புடன் நீயே ஆட்சி புரிந்து வா. அந்தப் **பற்றற்ற மனநிலை** உனக்கு வந்து விட்டால் அரண்மனையோ, கானகமோ, காவலரோ, கள்வரோ எவர் நடுவில் இருந்தாலும் உன் மனதைத் துயரங்கள் அணுகா!" என்று கூறி விடைபெற்றுக் கொண்டார் குரு.

மன்னன் ஞானம் பெற்றான்; ராஜரிஷியாக அரசு நடத்தினான்.

முத்தாய்ப்பாக, 'நில்லா உலகில் நிலைத்த சுகம்' நீண்டு வளர்ந்திட - நிலைத்திட - பாரசீகப் பெருங்கவிஞர் **உமார் கய்யாம்** வலியுறுத்தும் வழிமுறை இதுதான்!

"இல்லாப் பொருளுக்கு ஏங்காமல்
இருக்கும் பொருளும் எண்ணாமல்
எல்லாம் வல்ல எம்பெருமான்
இரங்கி அளக்கும் படிவாங்கி,
நல்லார் அறிஞர் நட்பையும் நீ
நாளும் நாளும் நாடுவையேல்,
நில்லா உலகில் நிலைத்தசுகம்
நீண்டு வளரும் நிச்சயமே!"

(கவிமணி சி.தேசிகவிநாயகம் பிள்ளை, உமார் கய்யாம், பாடல் எண் 113)

25

மரணத்தை மகிழ்வுடன் வரவேற்போம்

"ஒன்று, நாம் மேன்மையுற்றவர்களாக வாழ வேண்டும்; அல்லது அழிய வேண்டும்."

*- மாஜினி**

பண்டைச் சீன மண் தந்த சிறப்பு மிக்க சிந்தனையாளர் **கன்பூசியஸ்** (Confucious). "அவரைத் தத்துவ ஞானி என்பதை விட, மூதறிஞர் (Sage) என்று கூறுவதே சாலவும் பொருந்தும்" (திருக்குறள் நீதி இலக்கியம், ப. 229) என்பார் பேராசிரியர் **க.த. திருநாவுக்கரசு.** ஒருமுறை கன்பூசியஸிடம், "இறப்பு என்பது யாது? மரணத்தின் பின் மனிதனுடைய நிலை யாது?" எனச் சிலர் கேள்விகள் கேட்டனர். உடனே, அவர் சற்றும் தயக்கமின்றி, தம்மிடம் கேள்விகள் கேட்டவர்களைப் பார்த்து, "வாழ்க்கையைப் பற்றியே ஒன்றும் தெரிந்துகொள்ள முடியவில்லை! இந்நிலையில் மரணத்தைப் பற்றி நீங்கள் எவ்வாறு அறிந்து கொள்ள முடியும்?" என்று திருப்பிக் கேட்டார். 'உண்மையில், தம் கைப்பிடிப் பொருளாக (Concrete Object) உள்ள வாழ்க்கையின் உண்மையைப் புரிந்துகொள்ளுவதற்கே ஒருவருக்கு வாழ்நாள் போதவில்லை. இந்நிலையில் அவர் தம் கட்டுப்பாட்டில் இல்லாத -சிந்தைக்கு எட்டாத - மரணத்தைப் பற்றி எண்ணி ஏன் வீணாகக் கவலைப்பட வேண்டும்?' என்னும் கன்பூசியஸின் வினா பொருள் பொதிந்தது; ஆழ்ந்து சிந்திக்கத் தூண்டுவது.

திருக்குறள் 'நிலையாமை' அதிகாரத்தில் வரும் ஒரு குறட்பா இங்கே ஒப்புநோக்கத்தக்கது.

"ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல" (337)

* வெ.சாமிநாத சர்மா (தொகுத்தது), மாஜினியின் மணிமொழிகள், ப.21.

'மறுகணம் இருப்பதை அறிய மாட்டாதவர் கட்டுகின்ற கோட்டைகள் எவ்வளவோ கோடி' (திருக்குறள் தெளிவுரை, ப. 68) என்பது மூதறிஞர் **வ.சுப. மாணிக்கம்** இக் குறட்பாவுக்குத் தரும் உரை விளக்கம் ஆகும். ஒரு நொடி கூட வையத்துள் வாழ்வாங்கு வாழ்வது குறித்து - மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வது எப்படி என்று - சிந்தித்துப் பார்க்க மாட்டார்கள்; ஆனால் அவர்கள் தங்கள் கற்பனையில் கட்டுகின்ற கோட்டைகள் - காணு கின்ற கனவுகள் - எண்ணுகின்ற எண்ணங்கள் - கோடிக்கணக்கில் இருக்கும். உலகில் இத்தகைய மனிதர்களே மலிந்து காணப்படுகின்றனர்.

"உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்
எண்பது கோடி நினைந்து எண்ணுவன"

என்பார் **ஔவையார்.**

'**தேடல்**' என்னும் தலைப்பில் அமைந்த **கலீல் ஜிப்ரானின்** குறுங்கதை ஒன்று:

"ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் லெபனான் நாட்டு மலையோரம் இரண்டு தத்துவ ஞானிகள் சந்தித்துக் கொண்டனர்.

'நீங்கள் எங்கே போகிறீர்கள்?' என்று ஒரு தத்துவ ஞானியை மற்றொரு தத்துவ ஞானி கேட்டார்.

'அதோ அந்த மலைகளுக்கு நடுவில் பொங்கி வழியும் இளமை என்ற நீர் ஊற்றைத் தேடிப் போகிறேன். அந்த நீர் ஊற்றில் பூக்கும் மலர்கள் எல்லாம் சூரியனை நோக்கியே பூக்கு மாம்' என்று பதில் கூறிவிட்டு, 'நீங்கள் எங்கே போகிறீர்கள்?' என்று இரண்டாவது தத்துவ ஞானியைக் கேட்டார் முதல் தத்துவ ஞானி.

'நான் மரணத்தின் ரகசியத்தைத் தேடிச் செல்கிறேன்' என்றார் இரண்டாவது தத்துவ ஞானி.

இரண்டு தத்துவ ஞானிகளும் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சொல்லிக்கொண்டு, அடுத்தவர் ஆன்மிகச் சிந்தனைகளைப் பழித்துக் கொண்டு சண்டை இட்டார்கள்.

அந்த வழியே வந்த எளிமையான கிராமத்து மனிதர் ஒருவர் அவர்களுக்கு அருகில் வந்து, தத்துவ ஞானிகள் பேசியதை ஆர்வமாகக் கவனித்தார்.

சிறிது நேரம் சென்றதும் கிராமத்து மனிதர் இரு தத்துவ ஞானிகளையும் பார்த்து, 'நண்பர்களே! நீங்கள் இருவருமே ஒரே சித்தாந்தத்தைச் சேர்ந்தவர்களாகவே தெரிகிறீர்கள். நீங்கள் இருவரும் ஒன்றைப் பற்றியே விவாதம் செய்கிறீர்கள். ஆனால் வேறு வேறு மொழியில் விவாதிக்கிறீர்கள். உங்களில் ஒருவர், இளமை ஊற்றைத் தேடிச் செல்வதாகச் சொல்கிறீர். அடுத்தவர், மரணத்தின் ரகசியத்தைத் தேடுவதாகக் கூறுகிறீர். உண்மையில் இந்த இரண்டுமே வேறு வேறு அல்ல. இரண்டுமே ஒன்று தான். அந்த இரண்டும் ஒன்றாகவே உங்களுக்குள் வாழ்கின்றன!' என்று கூறிவிட்டு, அவர்களைப் பார்த்துக் கேலியாகப் புன்னகைத்த வாறு அங்கிருந்து சென்றார்.

இரண்டு தத்துவ ஞானிகளும் ஒருவரை ஒருவர் தீர்க்கமாகப் பார்த்தவாறு சிறிது நேரம் அமைதியாக நின்றனர். பிறகு வாய்விட்டுச் சிரித்தனர். அவர்களில் ஒரு தத்துவ ஞானி "நல்லது, நாம் இருவருமே ஒன்றாக இணைந்து ஏன் தேடக்கூடாது?" என்று மற்றவரைப் பார்த்துக் கேட்டார்.

(தமிழில்: துறவி, கலீல் ஜிப்ரானின் குட்டிக் கதைகள், பக்.49-50)

உலகத்துச் சான்றோர்கள் - சிந்தனையாளர்கள் - தத்துவ ஞானிகள் - யாவரும் ஒருமித்துக் காட்டும் வழி இதுதான் : மரணத்தைப் பற்றி எண்ணிக் காலத்தை வீணாகக் கழிக்க வேண்டாம்; அஞ்சவும் வேண்டாம். அது வரும் போது வரட்டும். வாழ்வாங்கு வாழ்வது பற்றிச் சிந்தித்து, மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து காட்டுவோம்! ஒவ்வொரு நொடியை யும் பயனுள்ள முறையில் வாழ்ந்து, ஒவ்வோர் அடியையும் தொலைநோக்குடன் எடுத்து வைத்து வாழ்வில் தடம் பதிப்போம்! இறுதி மூச்சு வரை உள்ளத்தில் இளமை உணர்வுடன் வாழ்ந்து மரணத்தை மகிழ்வுடனும் மனத்திண்மையுடனும் வரவேற்கும் பெருவாழ்வு (Mega Life) வாழ்வோம்!

முத்தாய்ப்பாக, தாகூரின் 'கீதாஞ்சலி'யில் இருந்து ஒரு மணிமொழி:

"மரணம் உன் வாழ்வின் கதவைத் தட்டும். அந்த நாளில் நீ அதற்கு என்ன நல்குவாய்?

ஆ! என் விருந்தாளியாக வந்த மரணத்திற்கு முன் என் வாழ்வு என்னும் நிறைகுடத்தையே வைத்திடுவேன்; வந்த விருந்தாளியை வெறுங்கையுடன் திரும்பிப் போக விட மாட்டேன்." (மு.வரதராசன், கவிஞர் தாகூர், ப.73).

26

வேண்டாமை என்னும் விழுச்செல்வம்

"போதும் என்ற மனத்தை எளிமையில்தான் பெற முடியும். 'போதும் என்ற மனமே பொன்செய்யும் மருந்து' என்ற பழமொழி எவ்வளவு பெரிய உண்மையை விளக்குகிறது!"

- மு.வரதராசன்★

தமிழில் **ஆசை, பற்று** என இரு சொற்கள் உண்டு. ஒரு மனிதன் மண், பொன். பெண் ஆகியவற்றின் மீது கொள்ளுவது ஆசை; மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என இவை முறையே சுட்டப்பெறும். நாடு, மொழி, இறை ஆகியவற்றின் மீது ஒரு மனிதன் வைப்பது பற்று; நாட்டுப் பற்று, மொழிப் பற்று, இறைப் பற்று என இவை முறையே அழைக்கப்படும். **'விழுமியம்'** என்னும் நோக்கில் மதிப்பிடும்போது, ஆசை என்பது சற்றே தாழ்ந்தது; பற்று என்பது அதனினும் உயர்ந்தது. 'ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள், ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்! ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள், ஆசை விடவிட ஆனந்தம் ஆகுமே' என்பது திருமந்திரம். ஆசை இருந்தால் துன்பமும், ஆசை அழிந்தால் இன்பமும் ஏற்படும். எந்தப் பொருள் மீதும் ஆசை கொள்வதை விட்டொழித்தல் வேண்டும் என வலியுறுத்தவே 'ஈசனோடு ஆயினும் ஆசை வேண்டா' என அழுத்தமாகக் கூறினார் **திருமூலர்.**

தெய்வப் புலவர் **திருவள்ளுவரும்** அறத்துப்பாலில் 'அவா அறுத்தல்' என ஓர் அதிகாரமே படைத்துள்ளார்.

'வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை;
யாண்டும் அஃதொப்பது இல்'

---

* நல்வாழ்வு, ப.48.

என்னும் குறட்பா (363) இவ்வகையில் மனங்கொளத் தக்கதாகும். 'ஆசையின்மையே சிறந்த செல்வம்; அது போன்ற செல்வம் எங்கும் இல்லை' என்பது இக்குறட்பாவின் தெளிவுரை.

'ஆசைக்கு ஓர் அளவில்லை'

என்னும் **தாயுமானவர்** வாக்கும் இங்கே நினைவு கூரத்தக்கதாகும்.

'அதிக ஆசை கொண்டால் உள்ளதும் பறிபோகும்' என்னும் கருத்தினை இனிதே உணர்த்தும் ஈசாப் நீதிக் கதை;

"ஒரு காட்டில் ஒரு விறகு வெட்டி ஒரு மரத்தை வெட்டிக் கொண்டிருந்தான். அந்த மரம் ஒரு ஆற்றங்கரையில் இருந்தது. மரத்தை வெட்டும்போது கையில் இருந்த கோடாலி தவறி ஆற்றுக்குள் விழுந்துவிட்டது. ஆறு ரொம்ப ஆழமாய் இருந்த படியால் தண்ணீருக்குள் இறங்கி அவனால் கோடாலியை எடுக்க முடியவில்லை. அதனால் கரையில் உட்கார்ந்து அழ ஆரம்பித்தான். அவனைப் பார்த்து இரக்கங் கொண்ட வன தேவதை அவன் முன்பு தோன்றி, 'ஏன் அப்பா அழுகிறாய்?' என்று கேட்டது

கோடாலி தண்ணீருக்குள் விழுந்து விட்டதாகவும் அது கிடைக்காவிட்டால் தனக்குப் பிழைப்புக்கு வழி இல்லை என்றும் விறகு வெட்டி சொன்னான். வன தேவதை தண்ணீருக்குள் மூழ்கி ஒரு தங்கக் கோடாலியோடு வெளியே வந்தது; அதை விறகு வெட்டியிடம் கொடுத்தது. அவன் அதைப் பார்த்ததும் அது தன் கோடாலி அல்ல என்றும், அது தனக்கு வேண்டாம் என்றும் சொல்லிவிட்டான். வன தேவதை மீண்டும் தண்ணீருக்குள் மூழ்கி ஒரு வெள்ளிக் கோடாலியை எடுத்து வந்து கொடுத்தது. இதுவும் தன்னுடையது அல்ல என்று சொல்லி விறகு வெட்டி மறுத்து விட்டான். வன தேவதை மூன்றாவது தடவையாகத் தண்ணீருக்குள் மூழ்கி விறகு வெட்டியின் கோடாலியை எடுத்து வந்து கொடுத்தது. அதைப் பார்த்ததும் விறகுவெட்டி மிகுந்த மகிழ்ச்சி அடைந்து இரண்டு கைகளாலும் அதை வாங்கிக் கொண்டான்.

விறகு வெட்டியின் நேர்மையைப் பார்த்து வனதேவதை மகிழ்ச்சி கொண்டது. "நீ உண்மையாக நடந்து கொண்ட படியால் உன்னுடைய கோடாலியோடு இந்தத் தங்கக் கோடாலி

யையும் வெள்ளிக் கோடாலியையும் உனக்குப் பரிசாகக் கொடுக்கிறேன், எடுத்துக்கொள்" என்று வனதேவதை சொல்லிற்று.

மூன்று கோடாலிகளோடு விறகு வெட்டி வீடு திரும்பினான். காட்டில் நடந்த அதிசயத்தை அக்கம் பக்கம் உள்ளவர்களிடம் சொன்னான். இதைக் கேட்டவர்களில் ஒருவன் உடனே காட்டுக்கு ஓடினான்; விறகுவெட்டியின் கோடாலி தண்ணீருக்குள் விழுந்த இடத்தில் தனது கோடாலியைப் போட்டான்; கரையில் உட்கார்ந்து அழுதான்.

வன தேவ்தை வந்தது. காரணத்தைக் கேட்டது. தண்ணீரில் மூழ்கி ஒரு தங்கக் கோடாலியை எடுத்து வந்து காட்டியது. அதைப் பார்த்த பேராசைக்காரன், 'ஆமாம், அது தான்' என்று சொல்லிக் கொண்டே அதைக் கைப்பற்றப் போனான். உடனே தேவதை, 'ஓ பேராசைக்காரனே! உன் உள்ளத்தை அறியக் கூடிய உன் தெய்வத்தையா ஏமாற்றப் பார்க்கிறாய்? உன்னுடைய கோடாலியைக் கூட உனக்குக் கொடுக்க முடியாது ஓடிப்போ' என்று விரட்டியது.

பேராசைக்காரன் வெறுங் கையோடு வீடு திரும்பினான்."

(ஈசாப் குட்டிக் கதைகள், பக்.167-168)

நமக்கு வேண்டியதை நாம் இறைவனிடம் வாய்விட்டுக் கேட்க வேண்டும் என்பதில்லை. நமது உள்ளக் குறிப்பை அறிந்து அவனே கொடுப்பான். எனவே, இறைவனிடம் ஆசை வைக்க வேண்டும் என்ற நியதி இல்லை; அவனிடம் வேண்டுகோள் விடுக்க வேண்டும் என்ற தேவையும் இல்லை. நமக்கு வேண்டத்தக்கது எது என்பதை இறைவனே நன்றாக அறிவான்; வேண்ட முழுதும் தருவான் அவன். 'வேண்டத்தக்கது அறிவோய் நீ, வேண்ட முழுதும் தருவோய் நீ' என்பார் **மாணிக்கவாசகர்**. நாம் செய்ய வேண்டியது எல்லாம், வாழ்வில் எப்போதும் நேர்மையைப் பின்பற்றுவது தான்; என்னும் நம் உள்ளத்தைத் தூய்மையாக வைத்திருப்பது தான்.

கிரேக்க நாட்டுச் சிந்தனைச் சிற்பி **சாக்ரடீஸின்** வாழ்வில் இருந்து ஓர் உண்மை நிகழ்ச்சி: சாக்ரடீஸ் மிகவும் எளிமையானவர். ஆனால் நாள்தோறும் கடைக்குச் செல்வார்; எதுவுமே வாங்கி வர மாட்டார்; கடையில் உள்ள

பொருட்களை மட்டும் ஒருமுறை பார்த்துவிட்டுத் திரும்புவார். ஒருநாள் அவருடைய சீடர்கள் அவரிடம் கேட்டார்கள்: "எந்தப் பொருளையும் நீங்கள் வாங்குவதில்லை. ஆனால் நாள்தோறும் கடைக்குச் சென்று வருகிறீர்களே, என்ன காரணம்?"

அதற்கு சாக்ரடீஸ் சொன்ன பதில்: "எத்தனைப் பொருட்கள் இல்லாமல் என்னால் மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்பதைத் தெரிந்து கொள்வதற்காகத் தான் நான் நாள்தோறும் கடைக்குச் சென்று வருகிறேன்."

27

இன்பம் இருக்கும் இடம்!

"மனிதர்களுக்குள் மிருகங்கள் புகுந்து விட்டது தெளிவாகத் தெரிகிறது. அந்த மிருகங்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துக் கொண்டே வருவதும் தெரிகிறது."

- இந்திரா செளந்தர்ராஜன்*

மனித மனத்திற்குப் பொதுவான ஓர் இயல்பு உண்டு; இருப்பதை எண்ணி மகிழ்ச்சி அடைவதை விட்டுவிட்டு, இல்லாததை எண்ணி அது ஏங்கும். 'இருக்கும் இடத்தை விட்டு, இல்லாத இடம் தேடி எங்கெங்கோ அலைகிறார் ஞானத் தங்கமே - அவர் ஏதும் அறியாரடி ஞானத் தங்கமே' என்பார் கவியரசர் கண்ணதாசன்.

'செல்வம் என்பது சிந்தையின் நிறைவே' என்றும், 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்றும், 'உனக்கும் கீழே உள்ளவர் கோடி, நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு' என்றும் நம் முன்னோர்கள் காலங்காலமாக எவ்வளவோ எடுத்துச் சொல்லி இருந்தாலும், மனித இனம் வேண்டும், இன்னும் வேண்டும் என்றே எதிர்பார்க்கும்; ஏங்கும். சில நேரங்களில் இன்னும் ஒரு படி மேலே சென்று, அடுத்தவர் பொருளுக்கும் ஆசைப்படும்; அவர் அறியாமல் அதைக் கவர்ந்து கொள்ளத் துடியாய்த் துடிக்கும்; மறைமுகமாகத் திட்டமும் தீட்டும்.

'மறைந்துள்ள பொக்கிஷம்' என்னும் தலைப்பில் அமைந்த சுவாமி சிவானந்தரின் ஆன்மிகக் கதை, மனித மனத்தின் இயல்பினை அழகாகப் படம்பிடித்துக் காட்டுகின்றது. அக் கதை வருமாறு:

---

* அருள், பொருள், இன்பம், ப.179.

"லால் பகதூர் என்ற பணக்காரப் பயணி ஒருவர் காசிக்குச் சென்று கொண்டிருந்தார். அவர் தம் வசம் 1000 ரூபாய் வைத்திருந்தார். மற்றொரு பயணி ரூப்சந்த் என்ற பெயர் கொண்டவர். அவர் லால் பகதூரை வழியில் சந்தித்துத் தாமும் உடன்வருவதாகத் தம் விருப்பத்தைத் தெரிவித்தார்.

லால் பகதூர் கடவுள் பக்தியுடன் கூடிய ஒரு புத்திசாலி மனிதர். நாள்தோறும் காலை நேரத்தில் அவர், ரூப்சந்த் முன்பு தம்முடைய பணத்தை எண்ணிக் கொண்டிருந்தார். கணிசமான பணத்தைக் கண்டதும் அதை எப்படியேனும் தம்முடையதாக்கிக் கொள்ள வேண்டும் என்று எண்ணினார் ரூப்சந்த். லால் பகதூர் தூங்கிய பின்பு ஒவ்வோர் இரவும் லால் பகதூரின் தலையணைக்குக் கீழும், அவரது சட்டைப் பையையும், மற்ற இடங்களையும் பணத்தைத் திருடும் நோக்கத்துடன் ரூப்சந்த் தேடிப் பார்ப்பார். ஆனால் அதனை அவர் எங்கும் காண முடியவில்லை. மீண்டும் நாள்தோறும் காலையில் லால் பகதூர் பணத்தை வழக்கமாக எண்ணுவதை அவர் கண்டார். இதற்கு இடையில், லால் பகதூர், ரூப்சந்திடம் மிகவும் அன்பாக இருந்து, அவருடைய எல்லாத் தேவைகளையும் நிறைவு செய்தார். ஒரு கட்டத்தில் ரூப்சந்த் பீதியடைந்தார்; லால் பகதூர் ஒருவேளை மந்திரவாதியாக இருப்பாரோ என்று கூட எண்ணினார்.

'நான் அவருடைய பணத்தைத் திருடும் நோக்கத்தை அறிந்திருப்பாரோ?' என்று ரூப்சந்த் அஞ்சினார். எனவே அவர் தம்முடைய இழிந்த நோக்கத்தை ஒப்புக்கொண்டார். லால் பகதூரிடம், "மஹராஜ்! உங்கள் பணத்தை ஒவ்வோர் இரவும் எங்கே மறைத்து வைத்துள்ளீர்கள்? நான் அதனை எங்குத் தேடியும் கிடைக்கவில்லையே?" என்று கேட்டார்.

லால் பகதூர் மனம் விட்டுச் சிரித்தார். "எனது நண்பரே! உமது நடத்தையின் மீது நான் சந்தேகம் கொண்டேன். எனவே நான் பணத்தை மிகவும் பாதுகாப்பான இடத்தில் மறைத்து வைத்தேன்; வழக்கமாக உங்கள் தலையணைக்குக் கீழே தான் அதனை மறைத்து வைத்தேன். நீங்கள் அங்குத் தேட மாட்டீர்கள் என்பதை நான் நன்கு அறிவேன்" என்று கூறினார்.

ரூப்சந்த் நாணமுற்று லால் பகதூரிடம் மன்னிப்புக் கேட்டார்" (குழந்தைகளுக்குச் சிவானந்தரின் அறிவுரைகள், பக். 54-55).

கதையின் முடிவில் சுவாமி சிவானந்தர் கூறுகிறார்:

"இந்தக் கதையின் நீதியை நீங்கள் அறிவீர்களா? அபிலாசைகள் முழுதும் நிரம்பிய நம் மனது ரூப்சந்தைப் போல நடக்கும் படிச் செய்கின்றது. நம்முடைய சந்தோஷம் நமக்குள்ளே இருப்பதை அறியாமல் வெளியுலகப் பொருட்களின் மீது இன்பத்தை நாடி அலைகின்றோம். நாம் தோல்வியைத் தழுவும் பொழுது, நம்முடைய குற்றத்தை நாம் உணர்கின்றோம். கடவுளிடம் மட்டுமே பேரின்பம் இருப்பதை உணருங்கள். எனவே உலக விவகாரங்களில் இன்பம் இருப்பதாக நினைத்துக் கொண்டு முயற்சி செய்யாதீர்கள். எப்பொழுதும் கடவுளை நினைத்துக் கொண்டு இருங்கள்; பிரார்த்தனை செய்யுங்கள். அவர் உங்களை சந்தோஷப்படுத்துவார்."

மனிதன் அல்லும் பகலும் தேடி அலையும் இன்பம் வெளியில் இல்லை; உலக விவகாரங்களிலும் இல்லை. கடவுளிடம் மட்டுமே உண்மையான இன்பம் - பேரின்பம் - இருப்பதை உணர்ந்தால் போதும்; உள்ளன்போடு கடவுளை வேண்டினால் போதும். அவர், 'வேண்டத்தக்கது அறிவார்; வேண்ட முழுதும் தருவார்'.

முத்தாய்ப்பாக, 'தரிசனம்' என்னும் தலைப்பில் ஆத்மா நாம் பாடியுள்ள கவிதை ஒன்று:

"கடவுளைக் கண்டேன்
எதையுமே கேட்கவே தோன்றவில்லை
அவரும் புன்னகைத்துப்
போய்விட்டார்
ஆயினும்
மனதினிலே ஒரு நிம்மதி."

எல்லாவற்றிற்கும் மேலாக, மனிதனுக்கு இந்த மன நிம்மதி தான் முக்கியம்; வள்ளுவர் மொழியில் குறிப்பிட வேண்டும் என்றால், 'ஆகுல நீர பிற!'

28

பால் மனம் கொண்ட பால்காரி

"எந்த சிக்கலான சூழ்நிலையிலும் நம்பிக்கை நம்மிடம் இருந்தால் போதும், மீண்டு வந்து விடலாம்."

- வரலொட்டி ரங்கசாமி*

சரணாகதி என்பது வெறும் உதட்டளவில் இருக்கக் கூடாது. கடவுளிடம் முழுமையான அளவில் ஒருவன் உண்மையிலேயே சரணாகதி அடைய வேண்டும்; அப்போது தான் கடவுளுடைய கருணை அவனுக்குக் கிட்டும். அப்படி இல்லாவிட்டால், அவன் கடவுளின் கருணையைப் பெற முடியாது.

முற்றிலுமாக நாம் நம்மைக் கடவுளிடம் ஒப்படைத்துச் சரணாகதி அடைய வேண்டும். அப்படி அடைந்தால் அன்றிக் கடவுள் நம்மைத் துயரத்தில் இருந்து காப்பாற்ற மாட்டார். உண்மையாகவே நம்மை நாம் கடவுளுடைய திருவடிக்கு ஒப்படைத்து விடவேண்டும். வேறு சொற்களில் குறிப்பிடுவது என்றால், நாம் நம்முடைய ஆணவத்தை அடியோடு துறந்தாக வேண்டும். அப்படித் துறந்தால் அல்லாமல், கடவுள் நம்மைக் காப்பாற்றும் பொறுப்பினைத் தாமாக முன்வந்து ஒருபோதும் ஏற்றுக் கொள்வதில்லை. 'இறைவனிடம் கையேந்துங்கள். அவன் இல்லையென்று சொல்லுவதில்லை, பொறுமையுடன் கேட்டுப் பாருங்கள் - அவன் பொக்கிஷத்தை மூடுவதில்லை' என்பன ஒரு புகழ்பெற்ற பக்திப் பாடலின் தொடக்க வரிகள்.

பாரதியாரின் 'பாஞ்சாலி சபத'த்தில் ஐந்தாவது பகுதி 'சபதச் சருக்கம்'. அதில் துரியோதனன் அவையில் பாஞ்சாலி ஆடை குலைவுற்று நிற்கிறாள்; 'ஆ'வென்று அழுது துடிக்கிறாள். அப்போது கண்ணன் அவளுக்கு உதவி புரியவில்லை மாடு நிகர்த்த துச்சாதனன் பாஞ்சாலியின் மைக்குழல் பற்றி இழுத்த

---

* வெற்றியின் விதைகள், ப.113.

போதும் கண்ணன் உதவ முன்வரவில்லை. பாஞ்சாலி முதலில் தனது கற்புத் திறத்தின் மீது நம்பிக்கை கொண்டிருந்தாள்; அடுத்து, தனது ஐந்து கணவர்களும் தன்னைக் காப்பாற்ற ஓடோடி வருவார்கள் என எதிர்பார்த்தாள்; அதுவும் நடக்க வில்லை. அவையில் கூடி இருந்த சான்றோர்களாவது இக் கொடுமையை எதிர்த்துக் குரல் கொடுப்பார்கள் என எதிர் பார்த்தாள். அவர்களும் அமைதியாக இருந்து விடுகிறார்கள். இந்நிலையில் அன்னை பாஞ்சாலி, 'உட்சோதியில் கலந்தாள்; உலகத்தை மறந்தாள்; ஒருமையுற்றாள்; ஹரி, ஹரி, ஹரி என்றாள்; கண்ணா, அபயம் அபயம் உனக்கு அபயம் என்றாள்; ஐய, நின் பத மலரே சரண் என்றாள்.' கண்ணபிரானின் அருள் இப்போது பாஞ்சாலிக்குக் கிடைத்தது. பாஞ்சாலியைப் போல 'யார் ஒருவன் கடவுளிடம் முற்றிலும் தன்னைச் சரணாகதி செய்கிறானோ, அவனை மட்டுமே கடவுள் காப்பாற்ற முன்வருகிறார்' என்கிறார் இராமகிருஷ்ண பரமஹம்சர். இந்தக் கருத்தை அவர், 'பால் மனம் கொண்ட பால்காரி' என்னும் அழகிய கதையின் வாயிலாக விளக்குகிறார். சிந்தனைத் திறத்தால் படிப்பவர் நெஞ்சை அள்ளும் அக் கதை இதோ:

"ஒரு பால்காரி ஆற்றுக்கு அக்கரையிலே வாழ்ந்து வந்த பிராம்மண குரு ஒருவருக்கு நாள்தோறும் பால் கொண்டு போய்க் கொடுப்பது வழக்கம்.

ஒரு சமயம் படகுப் போக்குவரத்து சரியாக நடைபெற வில்லை. ஆதலால் நாள்தோறும் சரியான நேரத்திற்குப் பால் கொண்டு போய்க் கொடுப்பதில் தடை ஏற்பட்டது. ஒருநாள் அந்தப் பிராம்மண குரு, 'வேளைக்கு ஒழுங்காக ஏன் பால் கொண்டு வந்து தருவதில்லை?' என்று பால்காரியைக் கடுமையாகக் கோபித்துக் கொண்டார்.

எளிய பால்காரி அவருக்கு, 'சுவாமி, நான் என்ன செய்வேன்? தினமும் அதிகாலையில் தான் நான் வீட்டை விட்டுக் கிளம்புகிறேன். ஆனால் நதிக் கரைக்கு வந்ததும் நீண்ட நேரம் ஓடக்காரனுக்காக நான் காத்திருக்க வேண்டியிருக்கிறது' என்று பதில் சொன்னாள்.

அதைக் கேட்டதும் பிராம்மண குரு, 'ஏ பெண்ணே! பகவானுடைய நாமத்தை உச்சரிப்பதால் மக்கள் பிறவியாகிய பெரிய கடலையே தாண்டிக் கடந்து விடுகிறார்கள்! உன்னால் இந்தச் சிறிய ஆற்றைக் கடக்க முடியவில்லையா?' என்று வினவினார்.

கள்ளம் கபடம் இல்லாத அந்தப் பால்காரி, பிராம்மணர் சொன்னதை அப்படியே நம்பினாள். ஆற்றைக் கடப்பதற்கு சரியான ஒரு வழி தெரிந்துவிட்டது என்று பெரிதும் மகிழ்ச்சி கொண்டாள். வஞ்சம் இல்லாத நெஞ்சம் அவளுடையது.

அடுத்த நாள் முதற்கொண்டு குருவுக்கு அதிகாலை யிலேயே உரிய நேரத்தில் பால் கிடைத்து வந்தது. ஒருநாள் அவர் பால்காரியிடம், 'நீ முன்பு போல இப்போதெல்லாம் தாமதமாக வருவதில்லையே? எப்படி உன்னால் உரிய காலத்தில் பால் கொண்டு வர முடிகிறது?' என்று கேட்டார்.

'சுவாமி, தேவரீர் சொல்லிய படியே பகவானின் நாமத்தைச் சொல்லிக் கொண்டே ஆற்றைக் கடந்து வருகிறேன். இப்போதெல்லாம் நான் ஓடக்காரனுக்காகக் காத்திருப்ப தில்லை' என்று பால்காரி பதில் சொன்னாள். பிராம்மணர் இதை எப்படி நம்புவார்? பால்காரியின் வார்த்தையில் நம்பிக்கை இல்லாத அவர், 'நீ எப்படி ஆற்றைத் தாண்டி வருகிறாய் என்பதை எனக்குக் காட்டுவாயா?' என்று கேட்டார்.

பால்காரி சூது வாது தெரியாதவள். அவள் சம்மதித்துப் பிராம்மணரை அழைத்துக் கொண்டு நதிக்கரைக்குப் போனாள். பகவானின் நாமத்தைச் சொல்லிக் கொண்டே ஆற்று நீரின் மேல் சர்வ சாதாரணமாக நடந்து போக ஆரம்பித்தாள்.

அப்படிச் சிறிது தூரம் சென்றதும் பின்னால் திரும்பிப் பார்த்தபோது, குரு நடக்க முடியாமல் சிரமப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டாள். அவரது நிலையைக் கண்டதும் அவள், 'சுவாமி இது என்ன? பகவானின் நாமத்தை வாயால் சொல்கிறீர்கள். ஆனால் அதே சமயம், துணி எங்கே நனைந்து விடப் போகிறதோ என்று கைகளால் அதைத் தூக்கிப் பிடித்துக் கொள்கிறீர்கள்! தங்களுக்குப் பகவானிடத்தில் பரிபூரண நம்பிக்கை இல்லையே?' என்று கேட்டாள்.

(ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொன்ன கதைகள், பக்.90-93)

'பகவானிடத்தில் வைக்கும் தீவிரமான நம்பிக்கையும், பரிபூரண சரணாகதியுமே எல்லா அற்புதச் செயல்களுக்கும் காரணமாக இருக்கின்றன' என இக்கதையின் முடிவில் முத்தாய்ப்பாகக் கூறுகிறார் இராமகிருஷ்ண பரமஹம்சர்.

29

‘கஞ்சி வரதப்பா - எங்கே வருதப்பா?’

“பசியால் வாடும் வயிறுகளுக்குக் காதுகள் கிடையா.”
- உலகப் பொன்மொழி*

“**கீ**ழ்த்திசை நாடுகளின் அவசரத் தேவை மதம் அன்று. தேவையான மதம் அவர்களிடம் உள்ளது. இந்தியாவில் அவதிப் பட்டுக் கொண்டிருக்கும் லட்சக்கணக்கான மக்கள், தொண்டை வற்றக் கூக்குரல் இடுவது உணவுக்காகத்தான். அவர்கள் உணவு கேட்கிறார்கள். நாம் கற்களைக் கொடுக்கிறோம். பசியால் வாடும் மக்களுக்கு மதப் பிரச்சாரம் செய்வது அவர்களை அவமதிப்பதாகும். பசியால் துடிப்பவனுக்குத் தத்துவ போதனை செய்வது அவனை அவமதிப்பதாகும்" - சிகாகோ சொற்பொழிவு ஒன்றில் இடம்பெற்றுள்ள சுவாமி **விவேகானந்தரின்** புரட்சிச் சிந்தனை இது!

“ஏழை மக்களுக்குப் பொருளாதாரமே ஆன்மிகத் தத்துவம் ஆகும். பட்டினி கிடக்கும் கோடிக்கணக்கான மக்களுக்கு நீங்கள் வேறு வேண்டுகோள் எதுவும் விடுக்க முடியாது. அவர்கள் அதற்குச் செவிசாய்க்க மாட்டார்கள். ஆனால் நீங்கள் அவர்களுக்கு உணவு எடுத்துச் செல்லுங்கள். அவர்கள் உங்களை அவர்களுடைய கடவுளாகவே கருதுவார்கள்” - ‘யங் இந்தியா’ இதழில் தேசப் பிதா **காந்தியடிகள்** வெளியிட்டுள்ள அழுத்தமான, ஆணித்தரமான கருத்து இது!

‘உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே’ என்பது மணிமேகலை ஆசிரியர் ***சீத்தலைச் சாத்தனாரின்*** இரத்தினச் சுருக்கமான வாக்கு. அவரது கருத்தில் பசிக்கு உணவு

* வி.பலராமய்யா (தொகுப்பாசிரியர்), பொன்மொழிகள் ஆயிரம், ப.67.

கொடுத்துக் காப்பவர், உயிரையே காப்பாற்றும் அறமுடையவர் ஆவார்.

"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன், பசியினால் இளைத்தே வீடுதோறும் இரந்தும் பசியறாது அயர்ந்த, வெற்றரைக் கண்டு உளம் பதைத்தேன்" எனப் 'பிள்ளைப் பெரு விண்ணப்ப'த்தில் கருணை உள்ளத்தோடு உருகி உருகிப் பாடுவார் **இராமலிங்க சுவாமிகள்**.

"ஒன்றென்றிரு, தெய்வம் உண்டென்றிரு" என்று தெள்ளத் தெளிவாகப் பாடும் **பட்டினத்தார், "பசித்தோர் முகம் பார்"** என்று பசியினால் வாடுகின்ற ஏழை எளியவர்களுக்காகக் குரல் கொடுக்கவும் தவறமாட்டார்.

> **"இனியொரு விதி செய்வோம் - அதை**
> **எந்த நாளும் காப்போம்:**
> **தனியொருவனுக்கு உணவிலை யெனில்**
> **ஜகத்தினை அழித்திடுவோம்!"**

என உணர்ச்சி முழக்கம் இடுவார் கவியரசர் **பாரதியார்**. அவரது பார்வையில் கண்ணன், அடியவர்களின் வாழ்வில் **மழைக்குக் குடை; பசி நேரத்து உணவு.**

"பசி ஐயா, பசி! 'பத்தும் பசி வந்திடப் பறந்து போகும்!' என்று வெகு ஒய்யாரமாக உடம்பில் பிடிக்காமல் பாடுகிறீரே, அங்கு நீர் ஒரு நாள் இருந்தால், உமக்கு அடி வயிற்றிலிருந்து வரும் அதன் அர்த்தம்!" - 'பொன்னகரம்' என்ற சிறுகதையில் **புதுமைப்பித்தன்** எழுதி இருக்கும் அப்பட்டமான - யதார்த்தமான - வரிகள் இவை.

இங்ஙனம் பசியின் கொடுமையைப் பற்றி நம் நாட்டு அருளாளர்களும், எழுத்தாளர்களும், கவிஞர்களும், சிந்தனை யாளர்களும் வெளியிட்டிருக்கும் சீரிய கருத்துக்கள் பலப்பல ஆகும். நாட்டுப்புற மக்களிடம் வழங்கி வரும் பழமொழிக் கதை ஒன்றும் இவ்வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். **'கஞ்சி வரதப்பா, எங்கே வரதப்பா?** என்ற தலைப்பில் அமைந்த அந்தக் கதை வருமாறு:

"காஞ்சிபுரத்தில் ஒரு பிச்சைக்காரன். வீடு வீடாகப் போய்

பிச்சை எடுப்பதுதான் அவனது பிழைப்பு. ஒரு நாள் எந்த வீட்டிலும் பிச்சை போடவில்லை. அவன் ரொம்பச் சோர்ந்து போனான். ஒரு வீட்டுத் திண்ணையில் படுத்தவாறே ஓய்வு எடுத்தான்.

அவன் படுத்திருந்த திண்ணையின் வீட்டுக்காரர் ஒரு வைணவர். அவர் வரதராஜப் பெருமாளை வணங்கிக்கொண்டு 'கஞ்சி வரதப்பா' என்று பிரார்த்தனை செய்தார்.

பசியோடு இருந்த பிச்சைக்காரனின் காதில் 'கஞ்சி வருதப்பா' என்று விழுந்தது. அதனால் மகிழ்ச்சியோடு எழுந்தான். 'எங்க வருதப்பா கஞ்சி?' என்று கேட்டான். ஆவலோடு பார்த்தான்.

இதைக் கண்ட பக்தர் மனம் மாறினார். பிச்சைக்காரனுக்கு வயிறாரச் சாப்பாடு போட்டார். அவனும் திருப்தியாகச் சாப்பிட்டான். வீட்டுக்காரரை மனமார வாழ்த்திப் போனான்.

ஆனால் 'கஞ்சி வரதப்பா' என்பது மறக்க முடியாமல் பரவியது."

(சு.சண்முகசுந்தரம், பழமொழிக் கதைகள், ப.52)

முத்தாய்ப்பாக, **தமிழன்பனி**ன் ஹைகூ கவிதை ஒன்று இதோ:

"ஆகாயமும் அழகு
பூமியும் அழகு - ஆம்
என் கையில் ரொட்டித் துண்டு."

'சும்மாவின் பெருமை சொல்லவும் அரிதே!'

"ஆம். சும்மா சொல்லக் கூடாது! சும்மாவுக்குத் தான் எத்தனை பொருள்கள்... இவற்றைச் சும்மா நாள்தோறும் பயன்படுத்துவோம்."

- இ.சுந்தரமூர்த்தி*

ஆறு கோடித் தமிழர் நாவிலும் வாழ்விலும் நிலையாக இடம்பெற்று, அடிக்கடி நடை பயின்று வரும் ஒரு சொல் 'சும்மா'. அன்றாடப் பேச்சு வழக்கிலும் ஆன்மிக உலகிலும் இச் சொல்லின் ஆட்சியைப் பரவலாகக் காண முடிகின்றது.

சொற்பொருள் விளக்கம்

கழகத் தமிழ் அகராதி 'சும்மா' என்ற சொல்லுக்கு, 'இயல்பாய்; அமைதியாய்; வறிதாக; கருத்தின்றி; தடையின்றி; அடிக்கடி' என்னும் ஆறு பொருள்களைத் தருகின்றது (ப.471). அறிஞர் மு.அருணாசலம் தம் 'சொற் சுவை' என்னும் நூலில் சொற்பிறப்பு, வரலாறு, சமயம், செய்யுள் வழக்கு, உலகியல் வழக்கு, இலக்கணம் என்றாற் போல் பல்வேறு கோணங்களில் 'சும்மா' என்ற சொல்லினைக் குறித்து அலசி ஆராய்ந்துள்ளார்; 'இன்று பேச்சு வழக்கில் சும்மா என்பது சுகமாக, அமைதியாக, இயல்பாக, வீணாக, விளையாட்டாக, இலவசமாக, வேலை யில்லாமல், காரணமின்றி, பயனின்றி, தயையின்றி, உழைப்பின்றி, அடிக்கடி இவை போன்ற பல பொருள்களில் வருகிறது' (ப.74) எனச் 'சும்மா' என்னும் சொல் பன்னிரண்டு பொருள்களில் வழங்கி வருவதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அருளாளர்களின் நோக்கில் 'சும்மா'

'வாக்கிற்கு அருணகிரி' எனச் சிறப்பிக்கப்படும் அருணகிரி நாதர் தம் கந்தரனுபூதி 12-ஆம் பாடலில், 'செயலற்றுச் சும்மா

* சொல்புதிது பொருள் புதிது, ப.137.

இரு' என்று முருகப் பெருமான் தமக்கு உபதேசம் செய்ததாகக் குறிப்பிடுகின்றார். 'சும்மா இரு சொல்லற என்றலுமே, அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே' என்னும் அவரது வாக்கு - அனுபவ மொழி - இவ்வகையில் நினைவுகூரத் தக்கதாகும். அருணகிரிநாதரின் நோக்கில், 'சும்மா' என்பதற்கு, 'மனம், மொழி, மெய் என்னும் மூன்றும் அடங்கிச் செயல் ஒழிந்து நிற்றல்' என்பது பொருள். இந்நிலை எவர்க்கும் எளிதில் கைகூடுவது அன்று; இறைவன் திருவருள் கைவரப் பெற்றவர்களுக்கே இயலுவதாகும். மெய், மொழி என்னும் இரண்டையும் அடக்குபவர்க்கும் மனத்தை அடக்குதல் என்பது எளிதில் இயலாது. எனவே தான், 'சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது' என்றும், 'சொல்லும் பொருளும் அற்றுச் சும்மா இருப்பதற்கு, அல்லும் பகலும் எனக்கு ஆசை பராபரமே' என்றும் பாடுகின்றார் தாயுமானவர். 'சும்மா இருப்பதுவே கட்டற்ற பூரணம்' என்பது அவரது கருத்து. மேலும் அவர், 'ஐயோ, அருணகிரி அப்பா உனைப் போல மெய்யாக ஓர் சொல் இயம்பினர் ஆர்' என்று இச் சொல்லுக்காக அருணகிரி நாதரை நெஞ்சுருகிப் போற்றிப் புகழ்கின்றார். 'இருந்ததனை இருந்த படி இருந்து காட்டிச் சொல்லாமல் சொன்ன தட்சிணா மூர்த்தியின் பரம மோன உபதேசமும் இச் சொல்லற்றுச் சும்மா இருக்கும் நிலையேயாகும்' என்பர் அறிஞர்.

ஜென் கதை

தாயுமானவர் போற்றிப் பாடும் 'சொல்லும் பொருளும் அற்றுச் சும்மா இருக்கும்' உயரிய நிலையைச் சொல்லோவிய மாக்கிக் காட்டும் ஜென் கதை ஒன்று இங்கே மனங்கொளத் தக்கது. கவிஞர் புவியரசுவின் சொற்களில் அக்கதை வருமாறு:

"ஒரு மனிதன் குன்றின் உச்சியின் மேல் நின்று கொண்டிருந்தான்.

அந்தப் பக்கமாகச் சென்று கொண்டிருந்த மூன்று வழிப் போக்கர்கள் அதைக் கண்டார்கள்.

அவர்களில் ஒருவன், 'அவன் வளர்த்த பிராணி எதையோ காணாமல் போக்கிவிட்டான் போலிருக்கிறது. அதை மேலே இருந்து தேடிப் பார்க்கிறான் போல் தோன்றுகிறது' என்றான், தன் தோழர்களிடம்.

'இல்லையில்லை, தன் நண்பனைத் தேடுவது போல் தோன்றுகிறது. ஆம், அப்படித்தான் இருக்க வேண்டும்' என்றான், இரண்டாமவன்.

'அதெல்லாமில்லை. அவன் காற்று வாங்குகிறான். பார்த்தால் தெரியவில்லையா?' என்றான், மூன்றாவது ஆள்.

மூன்று பேரும் தங்கள் தங்கள் யூகத்தைப் பலமாக வற்புறுத்திப் பேசினார்கள்.

கடைசியில் ஒருவன், 'அவனையே கேட்டு விடுவோம். விவாதம் எதற்கு?' என்றான்.

மற்றவர்களும் அதற்கு ஒப்புக் கொண்டார்கள். மூவரும் குன்றின் உச்சிக்குச் சென்றார்கள்.

உச்சியை அடைந்ததும், முதலாமவன் கேட்டான்: 'நீங்கள் வளர்த்து வந்த பிரியமான பிராணியை இழந்து விட்டீர்கள் அல்லவா? அதைத் தானே இங்கிருந்து தேடுகிறீர்கள்?'

'இல்லை, எதுவும் காணாமல் போகவில்லை' என்றான் அவன்.

உடனே இரண்டாமவன் மகிழ்ச்சியுடன், 'உங்கள் நண்பரைத் தானே தேடுகிறீர்கள்?' என்று கேட்டான்.

அதற்கு அவன், 'இல்லை, நான் என் நண்பனைத் தேடிப் பார்க்க இங்கு நிற்கவில்லை' என்றான்.

அதைக் கேட்ட மூன்றாவது ஆளுக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டு விட்டது. 'காற்று வாங்கத் தானே இங்கே நின்று கொண்டிருக்கிறீர்கள்?' என்று உற்சாகமாகக் கேட்டான்.

'இல்லை ஐயா, நான் காற்று வாங்க இங்கே நிற்கவில்லை' என்றான் அவன்.

மூவருக்கும் ஒரே வியப்பு, 'அப்படியானால் எதற்காக இங்கே நிற்கிறீர்கள்?' என்றான் அவன்.

அதற்கு அவன் சொன்னான்:

'சும்மா!'" (ஜென் கதைகள், பக்.62-63)

காலந்தோறும் 'சும்மா'

கால முறைப்படி ஆராய்ந்தால், 'சும்மா' என்ற சொல்லை முதன்முதலாகக் கையாண்டவர் சம்பந்த முனிவர் என்பது புலனாகின்றது. இவரது காலம் கி.பி. 1350-75. 'சிவானந்த மாலை' என்ற தம் அனுபூதி நூலின் கடவுள் வாழ்த்துப் பகுதியில், 'சும்மா இருப்பவர்பால் தோன்றும் சுடரொளியைப் பெ ம்மான் இவன் என்ற பேராளா' எனச் 'சும்மா' என்னும் சொல்லை எடுத்தாண்டுள்ளார் அவர். 'சும்மாவே காணும் சுகம்', 'சும்மா இருக்கை சுகம்', 'சும்மாது இரு' என்றாற் போல் வேறு சில இடங்களிலும் சம்பந்த முனிவர் இச்சொல்லைக் கையாண்டுள் ளார்.

'சும்மாது' என்ற சொல் எதிர்மறை வினையெச்சம். இதன் பகுதி சும்மு. சும்முதல் - மூச்சு விடுதல். சும்மெனாது - மூச்சு விடாமல். இதில் இருந்து வந்ததே 'சும்மாது' என்ற வினை யெச்சம். பின்னர் து விடுதி கெட்டு, சும்மா என்று ஆயிற்று என்றும், 'மூச்சடக்கி' என்ற பொருள் காலப் போக்கில் மறைந்து, 'செயலற்று இருத்தல்' என்ற பொருள் உருவாயிற்று என்றும் கூறுவர் அறிஞர். மேலும், 'சும்மாது' என்பதற்குப் 'பேசாது' என்ற பொருளும் அருளாளர்களால் சொல்லப் படுகிறது.

14-ஆம் நூற்றாண்டில் சம்பந்த முனிவராலும் அவர் மாணாக்கர் காழிக் கண்ணுடைய வள்ளலாலும் வழக்குக்கு வந்த இச் 'சும்மா' என்ற சொல், அக்கால முதல் தமிழ் மொழியில் பெருவழக்காய் நிலைத்துவிட்டது. 15-ஆம் நூற்றாண்டில் காளமேகப் புலவரும் (தனிப்பாடல்), அருணகிரிநாதரும் (கந்தரனுபூதி, கந்தரலங்காரம்), 16-ஆம் நூற்றாண்டில் குருஞானசம்பந்தரும் (சிவபோக சாரம், பாடல் 63, 101), 17-ஆம் நூற்றாண்டில் குமரகுருபரரும் (பண்டார மும்மணிக் கோவை, பாடல் 9), சிற்றம்பல நாடிகளும், 18-ஆம் நூற்றாண்டில் தாயுமானவரும், பரஞ்சோதி முனிவரும், திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகளும் தத்தம் பாடல்களில் இச்சொல்லை எடுத்தாண்டுள் ளனர்.

பாரதியார் முதல் பட்டுக்கோட்டையார் வரை

தொடக்க காலத்தில் சைவ சமய இலக்கியங்களில் பரவலாக ஆட்சி பெற்று வந்த இச்சொல், இன்று சாமானிய மக்கள் நாவிலும் பயில்கிறது; இன்றைய படைப்பாளிகளின்

எழுதுகோலிலும் களிநடம் புரிகிறது. நீதியரசர் எஸ்.மகராஜன் 1948-இல் ‘சும்மா’ என்னும் தலைப்பில் சுவையான சிறுகட்டுரை ஒன்றினை எழுதியுள்ளார். அக்கட்டுரையில் அவர், ‘அந்தக் கட்டுக்கு அடங்காத வார்த்தை, சந்தர்ப்பத்துக்குத் தகுந்தவாறெல் லாம் நிறம் மாறுகிற வார்த்தை, மணிவார்த்தை’ என்றெல்லாம் ‘சும்மா’வுக்குப் புகழாரம் சூட்டியுள்ளார்; “சம்பாஷணையில் வார்த்தைக்குப் பஞ்சம் ஏற்படும் போதெல்லாம் ‘சும்மா’வைத் தயங்காமல் பரிமாறுகிறோம். ஓட்டைப் பலகைக்குச் சக்கை வைத்து அடித்துச் சரிப்படுத்துகிற மாதிரி, கருத்திலோ அல்லது பாஷையிலோ முடக்கம் ஏற்பட்டால் சும்மா என்கிற ஆப்பை அடித்துச் சமாளித்துக் கொள்கிறோம்” (ஒலிச் செல்வம், ப.38) என இன்றைய உரையாடலிலும் மொழிப் பயன்பாட்டிலும் ‘சும்மா’வின் பங்களிப்பை நன்கு சுட்டிக்காட்டியுள்ளார். இக் கருத்திற்குக் கட்டியம் கூறுவது போல் பாட்டுக்கொரு புலவர் பாரதியார் முதல் மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் வரை யாவரும் ‘சும்மா’ என்ற சொல்லைத் தம்தம் பாடல்களில் திறம்படக் கையாண்டிருப்பதை இங்கே நினைவு கூரலாம்.

“சும்மா, சும்மா, சும்மா, சும்மா இருந்து, சும்மா இருந்து தான் ஹிந்து தேசம் பாழாய்க் குட்டிச் சுவராகப் போய் விட்டதே? இன்னம் என்ன சும்மா? எவனைப் பார்த்தாலும் இந்த நாட்டிலும் சும்மாதான் இருக்கிறான்” (பாரதியார் கதைகள், ப.337) என்பது பாரதியாரின் வேடிக்கைக் கதையிலே வரும் வேணு முதலியின் சாடல்’; ‘- எல்லாருக்கும் சும்மா இருப்பது தான் வேலை. சோம்பேறிப் பயல்களுடைய தேசம்’ என்பது நாட்டு மக்களைப் பற்றிய அவரது கூர்மையான விமர்சனம்.

‘சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி’ என்பது நம் நாட்டில் தொன்றுதொட்டு வழங்கி வரும் பழமொழிகளுள் ஒன்று.

‘சும்மா யிருந்தா சோத்துக்கு நஷ்டம்; சோம்பல் வளர்ந்தா ஏற்படும் கஷ்டம்! உண்மையோடு உழைக்கோணும் தானே தன்னன்னா!’ (உடுமலை நாராயண கவியின் பாடல்கள், ப.161) என்பது உடுமலை நாராயண கவியின் கருத்தாழம் மிக்க திரைப்படப் பாடல் ஒன்றின் எடுப்பான தொடக்கம்.

மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ‘நாடோடி மன்னன்’ திரைப்படத்திற்காக எழுதிய ‘காடு

வெளைஞ்சென்ன மச்சான் - நமக்குக், கையுங் காலுந் தானே மிச்சம்?' என்னும் புகழ்பெற்ற பாடல், 'சும்மா கெடந்த நிலத்தைக் கொத்தி, சோம்பலில்லாமல் ஏர் நடத்தி' எனத் தொடங்குவதும் இங்கே சிறப்பாகக் குறிப்பிடத் தக்கதாகும்.

சுருங்கக் கூறின், 'சும்மா'வின் பெருமை 'விரிப்பின் பெருகும்; தொகுப்பின் எஞ்சும்'. 'தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே' என ஔவையார் கூறியது போல், நாமும் அதனைச் சற்றே மாற்றி 'சும்மாவின் பெருமை சொல்லவும் அரிதே' எனலாம். 'இனி, ஒரு விதி செய்வோம்; அதை எந்த நாளும் காப்போம்': வாழ்வில் உதட்டளவில் 'சும்மா' என்ற சொல்லை அடிக்கடி ஆளுவதைத் தவிர்ப்போம்; 'சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம்' கைவர முயல்வோம்; 'சும்மா இருக்கச் சுகம் உதயமாகுமே' என்னும் அருளாளர் வாக்கு, வாழ்க்கை அனுபவமாக மாறப் பாடுபடுவோம்!

31

பழைய கதை புதிய பார்வையில்...

"கைவருந்தி உழைப்பவர் தெய்வம்"

- பாரதியார்*

இன்றைய கணினி யுகத்தில் இளைய தலைமுறைக்காகப் படைப்பாளிகள் ஆற்ற வேண்டிய அரும்பணிகள் இரண்டு. ஒன்று, இளைய தலைமுறையினரின் எழுச்சிக்காகவும் விழிப்புணர்வுக்காகவும் படைப்பாளிகள் தாமே புதிதாகக் கலை, இலக்கியப் படைப்புக்களைப் படைத்தல்; மற்றொன்று, காலங்காலமாக - வாழையடி வாழையாக - வழக்கில் இருந்து வரும் பழைய கலை, இலக்கியப் படைப்புக்களை - ஈசாப் கதைகள், பஞ்ச தந்திரக் கதைகள் போன்ற கதை வடிவங்களை- வித்தியாசமான கோணத்தில் பார்த்து, அவற்றைக் காலத்திற்கு ஏற்ற வகையில் புதிதாகப் படைத்தல். கூர்மையாகச் சொல்வது என்றால், இவ்விரு படைப்புகளுள் பின்னையதே இளைய தலைமுறையை வித்தியாசமாகச் சிந்திக்கத் தூண்டுவது; அவர்களது படைப்புத் திறனை வளர்க்க வல்லது. இவ்வகையில் பேராசிரியர் **கு.வெ.பாலசுப்பிரமணியனின்** 'ஊசிக் கதைகளும் சில உண்மை நிகழ்வுகளும்' (கும்பகோணம்: அனுராதா பப்ளிகேஷன்ஸ், 2008) என்ற நூல் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கதாகும். "இளைஞர்களின் வாழ்க்கையில் இந்த நூல் ஒரு புதிய மாற்றத்தை உண்டாக்கும் என்பது என் உறுதியான நம்பிக்கை. வெறுங்கதை சொல்லிச் சிரிக்க வைத்துப் படிப்போர் பொழுதை வீணடிக்க நான் விரும்பவில்லை" என இந் நூலுக்கு எழுதிய முன்னுரையில் ஆசிரியரே தம் நோக்கத் தினைத் தெளிவு படுத்தியுள்ளார். இனி, 'விறகு வெட்டியும் வன தேவதையும்' என்னும் ஈசாப் குட்டிக் கதையினைப் பேராசிரியர் கு.வெ.பா. எங்ஙனம் வித்தியாசமாக, இளைய தலைமுறையினரின் நெஞ்சில்

---

* பாரதியார் கவிதைகள், ப.21

விழிப்புணர்வை விதைக்கும் விதத்தில் புதிதாகப் படைத்துள்ளார் எனக் காணலாம். பேராசிரியர் கு.வெ.பா.வின் சொற்களில் 'ஆற்றில் விழுந்த கோடரி' என்னும் தலைப்பில் அமைந்த அக்கதை வருமாறு:

"அவன் ஒரு கோடரிக்காரன். காட்டில் விறகைப் பிளந்து தலையில் சுமந்து வந்து ஊரில் விற்றுப் பிழைப்பவன். அவன் ஒரு நாள் காட்டில் ஒரு மரத்தை வெட்டித் துண்டாக்கி விறகாகப் பிளந்து கொண்டிருந்தான். கை நழுவிக் கோடரி திடீரென்று காட்டாற்றில் விழுந்துவிட்டது. வேலைக்கிடையில் இப்படியோர் இடையூறு ஏற்பட்டதற்கு வருந்தினான்....

அப்போது அவன் எதிரே வன தேவதை வந்து நின்று புன்னகைத்தது. பளபளவென்றிருந்த அதன் உடலில் பட்டும் அணிகளும் மின்னின. 'விறகு வெட்டுபவரே! ஆற்றில் கோடரி விழுந்து விட்டதா?' பரிவோடு கேட்டது வன தேவதை.

'ஆம் அம்மா!' அவன் இயல்பாகக் கூறினான்.

'கவலைப் பட வேண்டாம்! நான் இந்த ஆற்றில் மூழ்கி உன் கோடரியை எடுத்துத் தருகிறேன்' என்றது வன தேவதை.

'அம்மா! நான் நீந்தத் தெரிந்தவன். நான் கை தவற விட்ட கோடரியை நானே எடுத்துக் கொள்வேன்' என்றான் கோடரிக்காரன்.

'ஐயா! கோடரிக்காரரே! நான் வன தேவதை. அலுங்காமல் குலுங்காமல் நான் கோடரியை ஆற்றிலிருந்து எடுத்துக் கொடுக்க முடியும். மேலும் அதில் வேறு ஒரு செய்தியும் இருக்கிறது' என்றது வன தேவதை.

'தெரியும்! நீ ஆற்றில் முழுகி ஒரு தங்கக் கோடரியை எடுத்து வந்து, 'இதுதானே உன்னுடைய கோடரி?' என்று கேட்பாய். நான் 'இல்லை' என்பேன். பிறகு ஒரு வெள்ளிக் கோடரியை எடுத்து வந்து 'இதுவா?' என்று கேட்பாய். நான் 'இல்லை' என்பேன். பின் இறுதியாக என்னுடைய கோடரியை எடுத்து வந்து 'இதுவா பார்' என்பாய். நான் 'ஆமாம்' என்பேன். என்னுடைய ஆசையற்ற மனப்பாங்கைக் கண்டு மகிழ்ந்து என்னிடம் மூன்று கோடரிகளையும் கொடுத்து விடுவாய். நான் மகிழ்ச்சியோடு அவற்றை எடுத்துக் கொண்டு வீட்டுக்குப்

போவேன் என்று நினைக்கிறாய் இல்லையா?' என்றான் விறகு வெட்டி.

'அதெப்படி உனக்குத் தெரியும்?' தேவதை கேட்டது.

'காலங்காலமாக இப்படித் தானே கதை சொல்லி வருகின்றனர்? ஆனால் என் கதை வேறு. கோடரி என்றால் அது விறகு பிளக்க வேண்டும். தங்கத்தால் செய்த கோடரி வீட்டின் தரித்திரத்தை மாற்றலாம். ஆனால் உழைப்பை மறக்கடிக்கும். வெள்ளிக் கோடரியை அழகிய தட்டாக்கி உணவு உண்ணலாம். ஆனால் நான் குடிக்கும் கூழுக்கு அது மிகை. ஆகவே என் உழைப்பு மூலதனத்திற்கு ஏற்ற துணைக்கருவி இரும்புக் கோடரி தான். அதை ஆற்றில் மூழ்கி நானே எடுத்துக்கொள்வேன். வேலை செய்யும் நேரம் உன்னோடு பேசி வீணாகி விட்டது. உன் பட்டாடை கசங்காமல் அணிகலன்கள் பறிபோகாமல் பத்திரமாகப் போய் வா' என்றான் விறகு வெட்டி.

'மனிதர்களில் இப்படியும் சிலர்' என்று சொல்லி நகர்ந்தது வன தேவதை.

(ஊசிக் கதைகளும் சில உண்மை நிகழ்வுகளும், பக். 6-8)

'அதிக ஆசை கொண்டால் உள்ளதும் பறிபோகும்' என்பது பழைய ஈசாப் கதை உணர்த்தும் நீதி. 'குருட்டு அதிர்ஷ்டம் அன்று, கடின உழைப்பு ஒன்றே என்றென்றும் வாழ்வில் உயர ஒருவருக்குத் தேவைப்படும் மூலதனம்' என்பது பேராசிரியர் கு.வெ.பா.வின் ஊசிக் கதை உணர்த்தும் வாழ்க்கைப் பாடம்.

32

நம்மை அறிய நமக்கொரு திறவுகோல்!

"ஒவ்வொரு கணமும் இனிமை. ஒவ்வொரு மாற்றமும் விளையாட்டு. எதிலும் சிக்கி உழலாத மனம். வாழ்க்கை நன்றாகவே இருக்கிறது - இது போதும்."

- திருலோக சீதாராம்*

ஜென் குரு ஒருவர். எப்போதும் அமைதியாகவும் நிறைவாகவும் வாழ்ந்து கொண்டிருந்தவர். அவர், ஒரு கவலை என்று கதறியதும் கிடையாது; மகிழ்ச்சியாகத் துள்ளிக் குதித்ததும் கிடையாது. வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்தையும் இனிமை யாக அனுபவித்துக் கொண்டிருந்தவர் அவர்.

சில சீடர்கள் அவரைக் கேட்டார்கள். "உங்களுடைய நிம்மதியான வாழ்க்கையின் ரகசியம் என்ன?"

குருநாதர் சிரித்தார். "பெரிதாக ஒன்றுமில்லை. மிக எளிமையான விஷயங்கள் தான். சொல்கிறேன், கேளுங்கள்."

1. காலை தூங்கி எழுந்தவுடன் முதல் வேலையாக, நறுமணம் உள்ள ஓர் இடத்தில் அமர்ந்து தியானம் செய்யுங்கள்.
2. வயிறு முட்டச் சாப்பிடாதீர்கள். எப்போதும் வயிற்றில் கொஞ்சம் காலி இடம் இருக்கட்டும்.
3. கண்ட நேரத்தில் தூக்கம் வேண்டாம். தினமும் ஒரே நேரத்துக்கு உறங்கச் செல்லுங்கள்.
4. பெரும் கூட்டத்திலும் தனிமை பழகுங்கள். தனிமையில், கூட்டத்துக்கு நடுவே இருக்கிற உணர்வை அனுபவிக்கத் தெரிந்து கொள்ளுங்கள்.

---

* இலக்கியப் படகு, ப.205.

5. நன்றாகத் தெளிவாகப் பேசுங்கள். அதன்படி நடந்து கொள்ளுங்கள். வார்த்தை ஒன்று, செயல் ஒன்று என இருக்காதீர்கள்.
6. ஒவ்வொரு வாய்ப்பையும், ஒரு முறைக்குப் பலமுறை யோசித்த பிறகே பயன்படுத்திக் கொள்ளுங்கள்.
7. முடிந்து போன விஷயங்களை எண்ணி வருந்தாதீர்கள்.
8. போர் வீரர்களைப் போல் தைரியம் பழகுங்கள். அதே சமயம், சிறு குழந்தைகளைப் போல் வாழ்க்கையை நேசியுங்கள்.

(வி.பத்மா, ஜென் வழி,பக்.266-267)

ஜென் என்பது வெறும் தத்துவம் அல்ல; வெற்றுத் தத்துவமும் அல்ல. மண்ணில் நல்ல வண்ணம் வாழ - மனமது செம்மையாக - ஒரு வழிகாட்டி ஜென். நம்மை அறிய நமக்கொரு திறவுகோலாகப் பயன்படுவன ஜென் கதைகள். ஜென் குருமார்களின் வாழ்வும் வாக்கும் நாம் வையத்துள் வாழ்வாங்கு வாழ உற்றுழி உதவும் அனுபவப் பொருளை - உண்மை ஒளியை- தன்னகத்தே கொண்டவை. நெஞ்சை அள்ளும் ஜென் கதை ஒன்று இதோ:

“அந்த ஜென் குரு எளிமையாக வாழ்ந்து வந்தவர்.

ஒரு மலையடிவாரத்தில் குடிசை அமைத்துக் கொண்டு இயற்கையோடு ஒன்றிப் போய் வாழ்ந்து வந்தார்.

ஒருநாள் மாலைப் பொழுதில் திருடன் ஒருவன் அவரது குடிசைக்குள் அங்குமிங்கும் தேடிப் பார்த்தான். அவனுக்கு ஒன்றுமே கிடைக்கவில்லை.

அவன் வெறுங்கையோடு வெளியேறும் வேளையில் குரு உள்ளே வந்துவிட்டார். அவனை இறுகப் பிடித்துக் கொண்டார். திருடன் ‘திருதிரு’வென்று விழித்தான்.

‘பாவம்! நீ எவ்வளவு தூரத்திலிருந்து இங்கே வந்திருக்கிறாய். வெறுங்கையோடு போகலாமா?’ என்று கூறிச் சரசரவென்று தம் ஆடைகளைக் கழற்ற ஆரம்பித்தார்.

திருடனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. திகைப்போடு பார்த்துக் கொண்டிருந்தான்.

அவர் தம் ஆடைகளைக் கழற்றிச் சுருட்டி அவன் கையில் கொடுத்து, 'போய் வா. என்னிடம் இருப்பது இவ்வளவு தான்' என்று அனுப்பி வைத்தார்.

திருடன் போன பிறகு நிர்வாணமாக அமர்ந்தபடி சாளரத்தின் வழியாக வெளியே பார்த்தார்.

ஒளிமயமான வட்ட நிலா வானத்தில் காய்ந்து கொண்டிருந்தது.

'பாவம்! நல்லதாகக் கொடுக்க நம்மிடம் ஒன்றுமில்லாமல் போய்விட்டது. இந்த நிலவையாவது கொடுத்து அனுப்பி யிருக்கலாம்' என்று சொல்லிக் கொண்டார் அந்த ஞானி!"

(புவியரசு, மீண்டும் ஜென் கதைகள், பக்.69-70)

ஜென் கதைகளைக் கசடறக் கற்று - பொருள் உணர்ந்து பயின்று - அவற்றின் வழி வாழ்ந்து வந்தால் போதும், நம் வாழ்க்கை வசப்படும், மனம் செம்மையாகும், உள்ளொளி பெருகும்.

33

அன்பு நெறியே தமிழருடைய தனிப்பெரு நெறி

"பீரங்கிக் குண்டுகளுக்கு முன்பு ஒருகால் மனிதன் அசையாமல் நிற்கவும் கூடும்; ஆனால் அன்பு கனிந்த சொற்களின் முன்பு அவன் பின்னடையத்தான் வேண்டியிருக்கிறது."

- வி.ஸ.காண்டேகர்*

"... ... யாஅம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருள்இணர்க் கடம்பின் ஒலிதா ரோயே!" (பரிபாடல்,5)

என்பது சங்கச் சான்றோர் கடுவன் இளவெயினனாரின் புகழ் பெற்ற வாக்கு.

உலகியலில் வேண்டுமானால் பொன், பொருள், போகம் ஆகியவற்றிற்கு மிகுந்த செல்வாக்கு இருக்கலாம்; ஆயின், உண்மையில் அன்பு, அருள், அறம் ஆகிய மூன்றே என்றும் மாறாத- நிலைத்த - விழுமியங்கள் (Eternal Values); உலகப் பொதுவான விழுமியங்கள் (Universal Values). இவற்றுள் அன்பு என்ற மூன்று எழுத்துக்கு உள்ள ஆற்றலே தனி. இரத்தினச் சுருக்கமான மொழியில் குறிப்பிட வேண்டும் என்றால், அன்பு நெறியே தமிழர் நெறி ஆகும். 'அன்பு இருந்தால், புளிய மரத்தின் இலையில் இருவர் படுக்கலாம்' (ப.ராமஸ்வாமி, உலகப் பழமொழிகள், ப.161) என்கிறது ஓர் இந்தியப் பழமொழி.

---

* தமிழாக்கம்: கா.ஸ்ரீ.ஸ்ரீ., வி.ஸ.காண்டேகர், சிந்தனைச் செல்வம், ப.74

ஓர் உயிர் இறைவனைக் காண்பதற்கு உரிய நெறிகள் இரண்டு. ஒன்று, அறிவு நெறி; இன்னொன்று, அன்பு நெறி. வட நூலார் இவற்றை முறையே 'ஞான மார்க்கம்' என்றும், 'பக்தி மார்க்கம்' என்றும் சுட்டுவர். கல்வியறிவு மிகுந்த அறிஞர்கள் பின்பற்றுவது அறிவு நெறி; கற்றார்க்கும் கல்லாதவர்க்கும் ஒருங்கே வசப்படுவது அன்பு நெறி. முன்னது அரியது; பின்னது எளியது. கூர்த்த அறிவு முன்னைய நெறியின் அடிப்படை; கனிந்த அன்பு பின்னைய நெறியின் உயிர்நிலை. "எல்லா ஆற்றலும் உடைய கடவுள், தம் உண்மை அன்பால் வேண்டுவார்க்கு, வேண்டும் வடிவுடன் எதிரே வந்து காட்சியளித்து, வேண்டுவன தந்து உலகில் புகழுடன் வாழச் செய்து, வாழ்க்கை முடிவில் வீடு 'பேறும் அருளவல்லது என்ற முழு நம்பிக்கையுடன் அன்பராயினார் மேற்கொள்ளும் நெறியே அன்பு நெறியாம்" (அன்பு நெறியே தமிழர் நெறி, ப.21) என அன்புநெறியின் அடிப்படைப் பண்பை விளக்குவர் பேராசிரியர் **மொ.அ.துரை யரங்கனார்**.

தத்துவ நிலையில் அறிவு நெறி அன்பு நெறி ஆகிய இரண்டிற்கும் தரப்படும் விளக்கங்கள் சுவையானவை. அவை வருமாறு: குரங்குக் குட்டி ஒன்று, தன் தாயின் உடலைத் தன் கைகளாலும் கால்களாலும் சேர்த்தணைத்து இறுகப் பற்றிக் கொண்டு, அது தாவிச் செல்லும் இடங்களுக்கெல்லாம் தானும் உடன் செல்வதைப் போன்றது **அறிவு நெறி**; பூனைக்குட்டி ஒன்று, கிடந்த இடத்தில் கிடந்தவாறே, தன் தாயை நினைந்து குரல் எழுப்ப, அதன் தாய் அது இருக்கும் இடத்தைத் தானே நாடி வந்து, அதனைத் தன் வாயால் கவ்வித் தூக்கி நிறுத்திப் பாலூட்டிக் காப்பது போன்றது **அன்பு நெறி**.

ஒல்காப் பெரும்புகழ்த் **தொல்காப்பியர்** சிறப்பாகப் போற்றிய நெறி அன்பு நெறியே ஆகும். 'அன்பொடு புணர்ந்த ஐந்திணை' (1038) என்பது தொல்காப்பியம்.

தமிழ் மொழியின் **முதல் அருளியல் புலவர்** (Mystic Poet) எனப் போற்றப் பெறுபவர் **நக்கீரர்**. அவரது திருமுருகாற்றுப் படை ஆற்றுப்படை நூல்களுள் தனித்தன்மை வாய்ந்தது. அது முருகப் பெருமானை உண்மையான அன்பர்களிடத்து ஆற்றுப்படுத்துவது.

"சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரிக் கொள்கைப் புலம்பிரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை ஆயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்நசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே" (62-66)

என்னும் அடிகள் இவ்வகையில் மனங்கொளத்தக்கன. பேராசிரியர் மொ.அ.துரை அரங்கனார் **'அன்பு நெறியே தமிழர் நெறி'** என்னும் தலைப்பில் திருமுருகாற்றுப்படை குறித்து ஆழமான ஒரு தனி நூலே எழுதியுள்ளார்.

உலகின் பிற சமயத்தார் கடவுளை அன்பின் வடிவாய்க் காண்பர்; 'God is Love' என்பது அவர்கள் கருத்து. நம் **திருமூலரோ 'அன்பே சிவம்'** (திருமந்திரம், 437) என்பார்; 'Love is God' என்பது தமிழர் பக்தி நெறி. 'அன்போடு உருகி அகம் குழைவார்க்கு அன்றி, என்போன் மணியினை எய்த ஒண்ணாதே' (திருமந்திரம், 439) - 'அன்போடு உருகி மனம் குழைவார் அல்லாமல் மற்றவர்கள் கடவுளை அடைய முடியாது' - என்பது அவரது முடிந்த முடிவு.

தெய்வப் புலவர் **திருவள்ளுவர்** 'அன்புடைமை' என ஓர் அதிகாரமே படைத்துள்ளார். அவரது நோக்கில் அன்புடைய வாழ்வே உயிருடைய மக்கள் உடம்பு. அன்பிலார் உடம்புகள் எல்லாம் எலும்புத் தோல்களே; அவை உயிரற்ற பிணத்திற்குச் சமம்.

"அன்பின் வழியது உயிர்நிலை அஃதுஇலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு" (80)

என்பது வள்ளுவர் வாய்மொழி.

முதல் ஆழ்வார் மூவருள் ஒருவர் **பூதத்தாழ்வார்**. அவர் தம் வழிபாட்டுக்கு என ஒரு ஞான விளக்கு ஏற்றுகிறார். அன்பே அந்த விளக்கின் தகளி - அகல். ஆர்வமே அதற்கு நெய். பக்தியால் உருகும் மனமே அதன் திரி. 'அன்பே தகளியா, ஆர்வமே நெய்யாக, இன்புருகு சிந்தை இடுதிரியா - நன்புருகி, ஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன்' (நாலாயிர திவ்யப் பிரபந்தம், 2182) என்பது பூதத்தாழ்வார் மொழியும் ஞானத் தமிழ்.

தூய அன்புக்கு மகுடம் சூட்டும் பக்திப் பனுவல் திருவாசகம். 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்பது பழமொழி. 'உற்றாரை யான் வேண்டேன், ஊர் வேண்டேன், பேர் வேண்டேன், கற்றாரை யான் வேண்டேன், கற்பனவும் இனியமையும்' (திருவாசகம், 556) என மறுதலித்துப் பாடும் **மாணிக்கவாசகர்** இறைவனிடம் வேண்டுவது ஒன்று உண்டு; அது இடையறா அன்பு ஆகும்;

"இடையறா அன்புஉனக்குஎன்
ஊடகத்தே நின்றுருகத்
தந்தருள்எம் உடையானே." (திருவாசகம், 15)

அன்பு நெறிக்கு ஓர் உயிருள்ள உதாரணமாகப் பக்தி உலகில் விளங்குபவர் **கண்ணப்பர்**. மாணிக்கவாசகர் திருவாசகத்தில் இரு இடங்களில் கண்ணப்பரின் அன்பினைக் குறித்துப் போற்றிப் பாடுவார். 'கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்ட பின், என்னப்பன் என்னொப்பில் என்னையும்ஆட் கொண்டுஅருளி' (திருக்கோத்தும்பி, பா.4) என்பது அவரது வாக்கு.

" 'அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்புஎன்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமைஅறியும் அறிவுஎன்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வாம்என்றும்
அவனுடைய நிலைஇவ்வா றறிநீ' என்று அருள்செய்வார்"
(கண்ணப்ப நாயனார் புராணம், பா.157)

என்னும் தெய்வப் புலவர் சேக்கிழார் கூற்றும் கண்ணப்பரின் அன்பே வடிவான பக்தி நெறியினைப் படம்பிடித்துக் காட்டுவதாகும்.

அருளாளர்கள் **'அன்பு எனும் பிடியுள் அகப்படும் மலை'**யாக எல்லாம் வல்ல இறைவனைப் போற்றிப் பரவினர். 'கூர்த்த அறிவு அத்தனையும் கொள்ளை கொடுத்து உன்அருளைப் பார்த்தவன் நான்' (பராபரக்கண்ணி, 31) என்பது **தாயுமானவர்** வாக்கு. 'நெஞ்சகமே கோயில், நினைவே சுகந்தம் (நறுமணப் பொருள்), அன்பே மஞ்சன நீர், பூசை கொள்ள வாராய் பராபரமே' (பராபரக் கண்ணி, 151) என இறைவனுக்கு அழைப்பு விடுப்பார் அவர்.

'அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை' என்னும் மந்திர மொழிக்குச் சொந்தக்காரரர் **இராமலிங்க அடிகள்**. அன்புக்கு எளிதாக் ஆட்படும் இறைவனின் தன்மையை அடிகள் தமது திருவருட்பாவின் ஆறாம் திருமுறையுள் புலப்படுத்தியுள்ள திறம் பயில்வார் நெஞ்சை அள்ளுவதாகும்:

"அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிரொளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்தபே ரொளியே
அன்புரு வாம்பர சிவமே" **(திருவருட்பா, 3269)**

பாட்டுக்கொரு புலவர் **பாரதியாரின்** கருத்தியலில் அன்பு என்பது தவத்திற்கும் மேலானது. 'வையகத்தில், அன்பிற் சிறந்த தவம் இல்லை; அன்புடையார் இன்புற்று வாழ்தல் இயல்பு' (பாரதியார் கவிதைகள், ப.14) என 'விநாயகர் நான்மணி மாலை'யில் அவர் அன்பின் உயர்வை விதந்து பேசுவார்.

'தூய அன்பிற்கு முன்னால் உலகில் எதுவும் நிற்க முடியாது' என்பதைப் பறைசாற்றும் ஓர் உருக்கமான வாழ்க்கை நிகழ்ச்சிக் குறிப்பு:

"செருப்புத் தைக்கும் தொழிலாளி ஒருவர் இருந்தார். அவர் **புத்தர்** மீது பேரன்பு கொண்டவர். திடீரென்று இரண்டு நாட்களாக அவருக்கு வேலை எதுவும் கிடைக்கவில்லை. அவர் குடும்பம் பட்டினி கிடந்தது. என்ன செய்வது என்று அவருக்குத் தெரியவில்லை. அவரை நம்பிக் கடன் கொடுப்பவர்களும் யாரும் இல்லை. மன வருத்தத்துடனும், சிந்தனையுடனும் அவர் நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது அருகில் இருந்த ஒரு குளத்தில் ஒரு தாமரை மலர்ந்திருப்பது அவர் பார்வையில் பட்டது. அந்த மலர், வழக்கமான தாமரை மலராக இல்லை. அபூர்வமான அழகுடன் இருந்தது. அடர் சிவப்பு நிறத்தில் சூரிய ஒளியில் தகதகவென்று மின்னிப் பிரகாசித்தது.

தொழிலாளி குளத்தில் இறங்கி அந்த மலரைப் பறித்தெடுத்தார். அந்த அபூர்வ மலரை யாருக்காவது விற்றால் ஏதாவது பணம் கிடைக்கும் என்று நினைத்தார் அவர். அந்த வழியாக வந்த வியாபாரி ஒருவர், தொழிலாளியின் கையில் மிக அழகான மலர் இருப்பதைப் பார்த்தார். அவர் கேட்டார்: 'அந்த மலரை என்னிடம் விற்றுவிடுகிறாயா? நான் அதற்கு நூறு போய் தருகிறேன்.' சற்று நேரம் கழித்து அந்த வழியாகச் செல்வந்தர் ஒருவர் தந்தார். அவரும் கேட்டார்: 'இந்த மலரை என்னிடம் விற்று விடுகிறாயா? நான் இதற்கு இருநூறு ரூபாய் தருகிறேன்.'

இவ்வளவு அதிகமான விலைக்கு இந்த மலரைக் கேட்கிறார்களே என்று தொழிலாளிக்கு மிகவும் வியப்பாக இருந்தது. சற்று நேரத்திற்குப் பிறகு அதே வழியில் அந்த நாட்டு ராஜா வந்தார். தாமரை மலரைப் பார்த்து மகிழ்ந்து அவரும் கேட்டார்: 'இந்த மலரை என்னிடம் கொடுத்து விடுகிறாயா? இதற்கு நான் என்ன விலை வேண்டுமானாலும் தருகிறேன்!'

தொழிலாளி, ராஜாவிடம் பணிவுடன் கேட்டார்: 'வணக்கத்திற்குரிய ராஜாவே! அப்படி இந்த மலரில் என்னதான் இருக்கிறது? ஏன் இதற்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தரத் தயாராக இருக்கிறீர்கள்?'

ராஜா சொன்னார்: 'இந்த மலர் பார்ப்பதற்கு மிகவும் அழகாகவும் அபூர்வமாகவும் இருக்கிறது. இந்த நகரத்திற்குப் புத்தர் வந்திருக்கிறார். அவர் காலில் வைத்து வணங்குவதற்காகத் தான் இதைக் கேட்கிறேன்!' புத்தரைக் காண வேண்டும் என்று வெகுகாலமாக ஏங்கிக் கொண்டிருந்த தொழிலாளி சொன்னார்:

'அப்படியென்றால் ராஜாவே, என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்! இந்த மலரை நானே அவர் பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.'

அந்தத் தொழிலாளி ஓடிச் சென்றார். அரிய தாமரை மலரைப் புத்தரின் காலடியில் வைத்து வணங்கி நின்றார்.

அப்போது புத்தர் கனிவாக அவரிடம் கேட்டார்: 'சகோதரா, இந்த மலரை நீ ராஜாவிற்கு விற்றிருந்தாயானால் நீ மட்டுமன்றி உன் பல தலைமுறைகளும் வளமாக வாழ்வதற்கான செல்வம் உனக்குக் கிடைத்திருக்குமே! நீ ஏன் அப்படிச் செய்யவில்லை?'

தொழிலாளி கண் கலங்கிச் சொன்னார்: 'ஐயா... உலகின் ஞானியே! நான் இந்த மலரைப் பறித்த போது இது ஒரு தாமரை மலராக மட்டுமாகத்தான் இருந்தது. ஆனால், நீங்கள் இங்கே வந்திருக்கிறீர்கள் என்று தெரிந்த போது, இந்த மலர் என் இதயத்தின் அன்பாக மாறிவிட்டது. என் இதயத்தைச் சமர்ப்பிப் பதற்கு ஏற்ற இடம் உங்கள் காலடிகளைத் தவிர வேறு இல்லையே!'

புத்தர் எழுந்து அவரைத் தம் நெஞ்சோடு அணைத்துக் கொண்டு சொன்னார்: 'இனிய சகோதரா... வறுமையில் இருந்தாலும் இந்த உலகத்தின் அரசன் நீதான். நிம்மதியாகப் போ! உன் வாழ்க்கை வளமாகும்!'

தூய அன்பிற்கு முன்னால் பணத்திற்கு எந்த மதிப்பும் இல்லை. **இந்த உலகில் விலை மதிப்பிட முடியாத ஒரே ஒரு விஷயம் அன்பு மட்டும் தான்."**

(தினமணி: சிறுவர் மணி, 30.10.2010, ப.16)

தூய அன்பிற்கு முன்னால் பட்டம், பணம், பதவி ஆகியவற்றிற்கு எந்த மதிப்பும் இல்லை; உண்மையில் இந்த உலகில் எவராலும் விலை மதிப்பிட முடியாத ஒரு பொருள் உண்டு என்றால், அது அன்பு மட்டும் தான்.

34

‘கன்னித் தமிழ் தந்ததொரு திருவாசகம்’

“திருவாசகப் பாடல்கள் மாணிக்க வாசக அடிகளுடைய சிவானுபவ நிறைவில் பொங்கித் ததும்பி வெளிப்பட்ட அமுத வெள்ளமெனின் மிகையாகாது.”

- பண்டிதமணி*

பண் சுமந்த பாடல்களைத் தன்னகத்தே கொண்ட சைவத் திருமுறைகள் பன்னிரண்டு ஆகும். இவற்றுள் எட்டாம் திருமுறையாகத் திகழ்வது திருவாசகம். சாத்திர நூல்களுள் சிறப்பானது சிவஞான போதம் என்றால், தோத்திர நூல்களுள் தலையாயது திருவாசகம் ஆகும். ‘திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்’ என்பது தமிழ் கூறு நல்லுலகில் தொன்றுதொட்டு வழங்கி வரும் பழமொழி. இதனை வழிமொழிவது போல் கவியரசர் கண்ணதாசனும் ‘கன்னித் தமிழ் தந்ததொரு திருவாசகம்’ எனப் புகழாரம் சூட்டுவார்.

“திருவா சகம்இங்கு ஒருகால் ஓதில்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் கரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப்பு எய்தி
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகில் மற்றையர் இலரே”

என்னும் சிவப்பிரகாச சுவாமிகளின் வாக்கு பயில்வார் நெஞ்சத்தை உருக்குவதில் திருவாசகத்திற்கு உள்ள தனிப்பெருந் திறத்தினைப் புலப்படுத்த வல்லதாகும்.

‘அருட்பெருஞ் சோதி தனிப்பெருங் கருணை’

---

* உரைநடைக் கோவை: இரண்டாம் பகுதி, ப.68.

என்னும் தாரக மந்திரத்திற்குச் சொந்தக்காரரான இராமலிங்க சுவாமிகள் தம் பாடல் ஒன்றில் திருவாசகத்தை ஓர் அடியவர் - இறையன்பர் - எங்ஙனம் பயில வேண்டும் என எடுத்துரைப்பார்:

"வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே"

இப் பாடலில் இடம்பெற்றுள்ள 'நான் கலந்து பாடுங்கால்' என்னும் தொடர் உயிரானது; பொருள் பொதிந்தது. 'நான் கலந்து' பாடும் போது தான் - 'சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து' உள்ளம் ஒன்றிப் பாடும்போது தான் - திருவாசகம் இனிக்கும்; நற்கருப்பஞ் சாற்றினிலே, தேன் கலந்து, பால் கலந்து, செழுங்கனித் தீஞ்சுவை கலந்து, ஊன் கலந்து, உயிர் கலந்து, உவட்டாமல் இனிக்கும்; இனிப்பதோடு மட்டுமன்றி, உள்ளத்தை உருக்கவும் செய்யும். அதனால் தான் தம் சமயப் பணிக்காகத் தமிழகம் வந்து, திருவாசகத்தைப் படித்த- 'நான் கலந்து' படித்த - ஜி.யு.போப் 'எலும்பை உருக்கும் பக்திப் பாடல்கள்' (Bone-melting Hymns) எனப் போற்றிப் புகழ்ந்தார்; 'தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி' என்னும் திருவாசக வரிகளைப் படித்துக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கினார்.

'உலகம் ஒரு நாடக மேடை. நாம் எல்லோரும் அதில் நடிகர்கள்' என்பார் ஷேக்ஸ்பியர். எப்படியேனும் கள்ளச் சீட்டைப் (Black Ticket) பெற்றாவது முதல் நாள் முதல் காட்சியில் தனக்கு மிகவும் பிடித்தமான நடிகரின் திரைப்படத்தினைப் ப்ார்த்து விட வேண்டும் எனத் துடிக்கின்ற ஒரு ரசிகனைப் போல், தேர்ந்த ஒரு நாடக நடிகரைப் போல் நாம் இறையடியராக நடித்து, நடுவில் எப்படியேனும் வீடகத்தே புகுந்து விட வேண்டும் என்று மிகப் பெரிதும் விரைகின்றோம். இந்த நடிப்பும் துடிப்பும் விரைவும் வேகமும் தேவை இல்லை என்கிறார் மாணிக்கவாசகர். பின் அவர் இறைவனிடம் வேண்டுவது யாது? இறைவன் மீது இடையறா - இடையீடு இல்லாத - அன்பு ஒன்றே ஆகும். வள்ளுவர் மொழியில் கூறவேண்டும் என்றால், 'ஆகுல நீர பிற.' மணிவாசகரின் மணிவார்த்தைகளைத் தன்னகத்தே கொண்ட பாடல் இதோ:

"நாடகத்தால் உன் அடியார்
போல் நடித்து நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான்
மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே
இடையறா அன்புஉனக்குஎன்
ஊடகத்தே நின்றுஉருகத்
தந்துஅருள் எம்உடையானே!"

'இடையறா அன்பு உனக்கு என் ஊடகத்தே நின்று உருகத் தந்து அருள்' என இறைவனிடமே வேண்டுகிறார் மணிவாசகர். இறைவன்பால் இடையறா அன்பு கொள்ள வேண்டியது உயிரின் பொறுப்பு; என்றாலும், அந்த அன்பையும் உயிருக்குத் தந்து அருளுகின்ற தாய் மனம் கொண்டவனாக இறைவன் விளங்கு கிறான். 'அவனருளாலே அவன்தாள் வணங்கி' என மணிவாசகர் கூறுவதும் இங்கே மனங்கொளத்தக்கதாகும்.

இறையருள் கிடைத்தால் போதும், வேறு எதுவும் வேண்டாம். உற்றார் வேண்டாம்; ஊர் வேண்டாம்; பேர் வேண்டாம்; கற்றார் வேண்டாம்; கற்பனவும் இனி வேண்டிய தில்லை. பின் எது தான் வேண்டும் என்கிறார் மணிவாசகர்? அவரது 'திருப்புலம்பல்' இதோ:

"உற்றாரை யான்வேண்டேன், ஊர்வேண்டேன்,
பேர் வேண்டேன்;
கற்றாரை யான் வேண்டேன், கற்பனவும் இனி அமையும்;
குற்றாலத்து அமர்ந்துஉறையும் கூத்தா, உன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே."

இறைவனின் திருவடியை நினைந்து கசிந்து உருகும் நெஞ்சம் - இதுவே மணிவாசகர் முடிந்த முடிபாக வேண்டுவது. 'தன் கன்றினிடத்து தாய்ப் பசு வைத்துள்ள பற்றுதலைப் போன்று நான் உன்னிடத்துப் பற்று வைக்க வேண்டும்' என விரும்பு கின்றார் மணிவாசகர்.

இறைவனிடம் இது வேண்டும், அது வேண்டும் என்று விண்ணப்பம் போடுவதோ, அதற்காக இறைவனிடமே பேரம்

பேசுவதோ உண்மையான பக்தி அன்று. 'யான், எனது' என்னும் குறுகிய வட்டத்தில் நின்று காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்குவது மட்டுமே பக்தி அன்று. நமக்கு எது வேண்டும் என்று இறைவனுக்கு நன்றாகவே தெரியும்; அதை எப்போது தர வேண்டும் என்பதும் அவனுக்குத் தெரியும். கூடுதல் குறைவு இல்லாமல் நமக்கு வேண்டியதை முழுவதுமாகத் தந்து பேணும் பெருமனமும் இறைவனுக்கு உண்டு. திருவாசகத்தின் 'குழைத்த பத்'தில் இடம்பெற்றுள்ள ஒரு பாடல் வருமாறு:

"வேண்டத் தக்கது அறிவோய்நீ
வேண்ட முழுதும் தருவோய்நீ...
வேண்டி நீயாது அருள்செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசுஒன்று உண்டுஎன்னில்
அதுவும் உன்தன் விருப்பன்றே."

'வேண்டுதல் வேண்டாமை இலான்' ஆகிய இறைவனிடம் மணிவாசகர் வேண்டுவது ஒன்றே ஒன்று தான்: அது உண்மையான, இடையறாத, ஆற்றல் மிக்க அன்பு தான். 'அழுது அடி அடைந்த அன்பர்' அல்லவா மணிவாசகர்? 'அன்பே சிவம்' என்னும் தெய்வத் தமிழ் வழி வந்தவர் அல்லவா அவர்?

மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார் தம் பயணத்தின்போது எடுத்துச் செல்லும் பெட்டியில் மூன்று தமிழ் நூல்களை எப்போதும் வைத்திருப்பாராம். அவை: 1.தொல்காப்பியம் - தமிழுக்கு 2.திருக்குறள் - வாழ்வுக்கு 3.திருவாசகம் - உயிருக்கு. நாமும் கன்னித் தமிழ் தந்த திருவாசகத்தை மனம் கலந்து - பொருள் உணர்ந்து - பயில்வோம்; மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோம்.

35

கணினி யுகத்திற்கு அருணகிரிநாதர்

"ஆன்மிகம் உங்களைத் தட்டி எழுப்பும் அழைப்பு ஒலி."

- சுவாமி சுகபோதானந்தர்*

பன்னிரு ஆழ்வார்கள் நாயன்மார்களுக்குப் பின்னர்த் தமிழில் பக்தி இலக்கிய மரபில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க வராக விளங்கியவர் அருணகிரிநாதர் ஆவார். பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட அவர் பாடிய திருப்புகழ்ப் பாடல்கள் சந்த நலமும் ஒருசேரப் பெற்றவையாகும். அதனாலேயே 'வாக்கிற்கு அருணகிரி' என அவர் ஆன்றோர்களால் பாராட்டப் பெற்றார்.

"ஐயா அருணகிரி அப்பா உனைப் போல
மெய்யாக ஓர் சொல் விளம்பினர் யார்?"

என்னும் தாயுமானவர் வாக்கும்,

"அருணகிரி நாதர் அனுபவம் நாயேற்குக்
கருணைமொழி போரூரா காட்டு"

என்னும் திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் வேண்டுகோளும் அருணகிரியாரின் அனுபவ முதிர்வையும் பக்திப் பெருமையையும் நமக்குப் பறைசாற்றி நிற்கின்றன. "சந்த விருத்தப் பெருங்கடலாகிய திருப்புகழ் பதினாயிரம் பாடிய அருணகிரி நாதர்" என அவரைச் சிறப்பித்துக் கூறுவர் பேராசிரியர் கா.சுப்பிரமணிய பிள்ளை (இலக்கிய வரலாறு: இரண்டாம் பாகம், ப.370). அவர் வாழ்ந்த காலம் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டு என்பர்.

---

* வார்த்தையில்லாத ஞானம், ப.10.

அருணகிரிநாதர் இயற்றிய நூல்கள், திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, கந்தரந்தாதி, திருவகுப்பு, வேல் மயில் சேவல் விருத்தங்கள், திருவெழுகூற்றிருக்கை ஆகியன வாகும். இவற்றுள், திருப்புகழ் பல்வேறு தலங்களில் எழுந்தருளி யுள்ள முருகப் பெருமானைப் புகழ்ந்து அருணகிரியார் பாடிய சந்தப் பாக்களின் தொகுப்பாகும். இத்தொகுப்பு 16 ஆயிரம் பாடல்கள் கொண்டது என்று கூறப்பட்டாலும் தணிகைமணி வ.சு.செங்கல்வராய பிள்ளையின் பதிப்பில் 1304 பாடல்களே உள்ளன. பின்னர் வெளிவந்த பதிப்புகளில் முறையே 1311, 1361 பாடல்கள் காணப்படுகின்றன. முருகப் பெருமான் மீது தாம் பாடிய பாடல்களை அருணகிரியாரே 'படிக்கும் திருப்புகழ்' (கந்தரலங்காரம், 50) எனக் குறிப்பிடுவது மனங்கொளத் தக்கதாகும். மேலும்,

"சீராந் திருப்புகழைச் செவ்வேள்மேல் அன்பாக
ஆராய்ந்து உரைத்தான் அருணகிரி - நேராக
அந்தப் புகழை அனுதினமும் ஓதாமல்
எந்தப் புகழ்ஓது வீர்?"

எனத் திருப்புகழ்ச் சிறப்புப் பாயிரம் அடியவர்களை வினவுவதும் ஈண்டு நினைவுகூரத்தக்கதாகும். அருணகிரிநாதர் குமரக் கடவுளின் திருவருளைப் பெற்றவர் என்பதைத் தாயுமானவர், 'கந்தரனுபூதி பெற்று கந்தரனுபூதி சொன்ன எந்தை அருணகிரி' என்றமையால் அறியலாம்.

கந்தரலங்காரம், கந்தரனுபூதி, கந்தரந்தாதி, திருவகுப்பு, திருவிருத்தங்கள் ஆகியன கந்தவேள் மீது அருணகிரியார் கொண்டிருந்த நிலத்தினும் பெரிய - வானினும் உயர்ந்த - கடலினும் ஆழம் மிக்க பக்தி உணர்வினைப் புலப்படுத்துவன ஆகும். 'தமிழ் பக்தியின் மொழி' என்பது பன்மொழி அறிஞர் தனிநாயக அடிகளாரின் முடிந்த முடிபு. பக்தி உணர்வில் ஆழங்கால் பட்டவர் அருணகிரியார் என்பதும் யாவரும் முழுமையாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓர் உண்மையே. சரி, இன்றைய கணினி யுகத்திற்கு, அறிவார்ந்த சமுதாயத்திற்கு - அருணகிரியார் தம் வாழ்வின் மூலமாக - வாக்கின் வாயிலாக - வழங்கும் செய்தி யாது? அதனை எடுத்துக்காட்டுவதே இக் கட்டுரையின் தலையாய நோக்கம் ஆகும்.

'கந்தரலங்கார'த்தில் இடம்பெற்ற ஒரு பாடல். அதில் அருணகிரியார் மனித சமுதாயத்திற்கு நான்கு மணியான கட்டளைகளைப் பின்பற்றத் தக்க வாழ்வியல் நெறிகளாக முன்வைக்கின்றார். அவை வருமாறு:

1. 'தடுங்கோள் மனத்தை!'

2. 'விடுங்கோள் வெகுளியை!'

3. 'தானம் என்றும் இடுங்கோள்!'

4. 'இருந்தபடி இருங்கோள்!"

இனி, 'தேர்ந்து மனிதன் வாழும் வகை'க்கு அருணகிரியார் வகுத்துத் தந்துள்ள இந்நான்கு கட்டளைகளைக் குறித்து முறையே சுருங்கக் காண்போம்.

முதலில், மனிதன் மனத்தை அதன் போக்கில் அலைய விடாமல் - தீய நெறியில் செல்லாமல் - தடுத்து நிறுத்தல் வேண்டும். வள்ளுவர் மொழிவது போல், அதனைத் 'தீது ஒரீஇ நன்றின்பால் உய்த்தல்' வேண்டும். இதுவே மனிதன் நிம்மதி யாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வதற்குச் செய்ய வேண்டிய முதன்முதலான காரியம் ஆகும்.

அடுத்து, மனிதன் விட்டொழிக்க வேண்டியது வெகுளியை. 'சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி' என்பார் வள்ளுவர். 'ஆறுவது சினம்' என்பது தமிழ் மூதாட்டி ஔவையின் வாக்கு. 'சினங்கொள்வார் தமைத்தாமே தீயாற் சுட்டுச், செத்திடுவார் ஒப்பாவார்: சினங்கொள்வார் தாம், மனங்கொண்டு தங்கழுத் தைத் தாமே வெய்ய, வாள்கொண்டு கிழித்திடுவார் மானுவாராம்' எனச் சினத்தின் கேட்டினை எடுத்துரைப்பார் கவியரசர் பாரதியார்.

மூன்றாவதாக, மனிதன் கருத்திலே கொள்ள வேண்டியது தானம் செய்தலை. 'செல்வத்துப் பயனே ஈதல், துய்ப்பேம் எனினே தப்புந பலவே' என்னும் சங்கச் சான்றோரின் வாக்கு, உலகில் மனிதராகப் பிறந்த யாவரும் பின்பற்ற வேண்டிய அடிப்படையான வாழ்வியல் பாடம் ஆகும். ஈதல் என்பது பொருளை மட்டும் தருதலைக் குறிப்பதன்று. இரத்த தானம், கண் தானம், உடல் உறுப்புக்கள் தானம், அன்ன தானம் என்றாற் போல் ஒல்லும் வகையெல்லாம் ஒருவர் தானம் செய்யலாம்.

நில்லா உலகில் நிலைத்து நிற்பது நாம் மற்றவர்க்கும் செய்யும் தானம் மட்டுமே; 'ஆகுல நீர பிற!'

முத்தாய்ப்பாக, அருணகிரிநாதர் வலியுறுத்தும் நான்காவது கட்டளை: 'இருந்த படி இருங்கோள்!' 'நாம் அழுது கொண்டே பிறக்கிறோம், குறை சொல்லிக் கொண்டே வாழ்கிறோம், ஏமாற்றம் அடைந்து இறக்கிறோம்' என்பது இங்கிலாந்துப் பழமொழி. எந்த விதமான எதிர்பார்ப்பும் ஏக்கமும் இல்லாமல் - கவலையும் சஞ்சலமும் கொள்ளாமல் - 'உறுவது உறும்' என்ற நம்பிக்கையோடு மனிதன் 'இருந்தபடி இருந்தான்' என்றால், வாழ்வில் அவனை எந்தத் துன்பமும் தீண்டாது: எந்தச் சிக்கலும் சேராது. 'இன்பமே எந்நாளும்' அவன் வாழ்வில் களிநடம் புரியும்.

இப்போது முழுப்பாடலையும் பார்ப்போமா? இதோ அப்பாடல்:

"தடுங்கோள் மனத்தை; விடுங்கோள்
வெகுளியை(த்); தானம் என்றும்
இடுங்கோள்; இருந்தபடி இருங்கோள்; எழுபாரும் உய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றந், திறக்கத்
தொளைக்கவை வேல்
விடுங்கோன் அருள்வந்து தானே உமக்கு வெளிப்படுமே"

(கந்தரலங்காரம், 16)

மனிதன் தன் மனத்தைத் தீய வழியில் செல்லாமல் தடுத்து நிறுத்தி, கோபத்தை விட்டொழித்து, இயன்ற போதெல்லாம் தான தருமங்கள் செய்து, அறிவையும் உணர்வையும் சமனிலையில் வைத்து நிலை மாறாமல் இருந்தபடி இருந்தான் என்றால், முருகப் பெருமானின் அருள் வந்து தானே வெளிப்பட்டு உதவும். இதுவே இன்றைய கணினி யுகத்திற்கு அருணகிரியார் வழங்கும் அடிப்படையான நற்செய்தி ஆகும்.

அடுத்து, மனிதன் விட்டொழிக்க வேண்டியது அச்சத்தை-மரண பயத்தை. இதனால் தான் 'அச்சம் தவிர்' எனத் தம் புதிய ஆத்திசூடியைத் தொடங்கினார் பாட்டுக்கொரு புலவர் பாரதியார். 'உச்சி மீது வான் இடிந்து வீழுகின்ற போதிலும், அச்சம் இல்லை அச்சம் இல்லை அச்சம் என்பது இல்லையே'

என ஒரு மனிதன் முழங்க வேண்டுமானால் அவன் செய்ய வேண்டியது ஒன்றுதான்; கந்த வேளை நெஞ்சார நினைத்தாலே போதும். 'யாமிருக்கப் பயம் ஏன்?' என அவனுக்கு முன்னே வந்து தோன்றுவான் முருகப் பெருமான். இக் கருத்தினைத் தன்னகத்தே கொண்ட கந்தரலங்காரப் பாடல் இதோ:

"நாள் என் செயும்; வினை தான் என் செயும்; எனை நாடிவந்த
கோள்என் செயும்; கொடுங் கூற்றுஎன் செயும்; கும ரேசர்இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்னேவந்து தோன்றிடினே"

(கந்தலரங்காரம், 38)

'குமரக் கடவுளின் இரண்டு திருவடிகளும், அத் திருவடி களில் விளங்கும் சிலம்பும், சதங்கையும், தண்டையும், அவரது ஆறு திருமுகங்களும், பன்னிரு தோளும், கடம்ப மாலையும் எனக்கு முன்னே வந்து காட்சி கொடுக்குமானால், கெட்ட நாள், தீவினை, கெட்ட கிரகம், கொடிய கூற்று - இவை ஒன்றும் எனக்குக் கெடுதல் செய்ய முடியாது" என அழுத்தம் திருத்தமாக முருகப் பெருமானின் பெருமையையும் கருணைத் திறத்தையும் எடுத்துரைக்கின்றார் அருணகிரியார்.

"ஒரு காரியம் தொடங்கு முன்னும், பயணத்துக்கு முன்னும் இப்பாடல் ஓதித் தியானிக்கத்தக்கது. ஆபத்து வேளையிற் பெரிதும் உதவும் பெருமை வாய்ந்த பாடல் இது. சம்பந்தர் தேவாரத்தில் உள்ள 'வேயுறு தோளி பங்கன்' எனத்துவங்கும் பதிகம் போல ஆற்றல் உடையது" (கந்தரலங்கார உரை, ப.39) என இப்பாடலுக்கு எழுதிய உரை விளக்கத்தில் குறிப்பிடுகிறார். தணிகை மணி வ.சு.செங்கல்வராய பிள்ளை. "எங்கள் பரமன் உளமே புகுந்த அதனாற், கொதியுறு காலனங்கி நமனோடு தூதர் கொடு நோய்களான பலவும், அதிகுணம் நல்ல நல்ல, அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே" என்னும் திருஞான சம்பந்தரின் தேவாரப் பாடல் இங்கே ஒப்புநோக்கத் தக்கதாகும்.

முதலில் மனிதன் தன்னை நம்பி, பிறகு இறைவனை நம்பி, முழுமையாக அவனிடம் சரணடைந்தால் போதும்; வாழ்வில் எந்த இடரும் அவனை எதுவும் செய்ய முடியாது. இதுவே 21-ஆம் நூற்றாண்டு மனிதனுக்கு அருணகிரிநாதர் அறிவுறுத்தும் இரண்டாவது செய்தி.

மூன்றாவதாகவும் முத்தாய்ப்பாகவும் அருணகிரிநாதர் இன்றைய உலகுக்குச் செய்யும் உபதேசம் இது:

"விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள்; மெய்ம்மை குன்றா
மொழிக்குத் துணைமுரு கா எனுநாமங்கள்; முன்பு செய்த
பழிக்குத் துணை அவன் பன்னிரு தோளும்; பயந்ததனி
வழிக்குத் துணை வடிவேலும் செங் கோடன் மயூரமுமே."

(70)

'முருகவேளின் அழகிய மென்மை வாய்ந்த திருவடிகள், எனது கண்களுக்குத் துணை; முருகா, குமரா, குகா முதலான அவனது திருநாமங்கள், நான் உண்மை மொழியே பேசுவதற்கு உற்ற துணையாக நிற்கும்; முருக வேளின் பன்னிரு தோள்களும், நான் முன்பு செய்த பழிக்கு இடமான செயல்களால் வந்த பாவத்தைப் போக்குவதற்கு - என் பழவினையை அறுப்பதற்கு - துணை புரியும்; கூரிய வேலாயுதமும், திருச்செங்கோட்டு வேலனது மயிலும் நான் பயந்து செல்ல வேண்டிய தனிவழிகளில் எல்லாம் உற்றுழி உதவி செய்யும்' என்பது இப்பாடலின் தெளிவுரை. திருவடித் தியானம், முருக நாம செபம், திருவுருத் தியானம், வேலும் மயிலும் துணை எனும் செபம் - இவைகளின் சிறப்பை உணர்த்தும் அற்புதமான உபதேசப் பாடல் இது.

விழிக்குத் துணையாக - மொழிக்குத் துணையாக - பழிக்குத் துணையாக - தனி வழிக்குத் துணையாக முருகப் பெருமானை நாளும் தூய அன்போடு உருகி அகம் குழைந்து நாடினால் அவனது அருள் நமக்கு முழுமையாகக் கிட்டும்; வையத்துள் வாழ்வாங்கு வாழலாம்; அருளாளர்கள் வலியுறுத்தும் 'அமரத் தன்மை' - 'தெய்வ வாழ்வு' - நமக்கு வசப்படும்.

தாழ்ச்சி சொல்வோரே வாழ்வில் உயர்ச்சி அடைவர்!

"பணியுமாம் என்றும் பெருமை!"

- திருவள்ளுவர்*

பதினேழாம் நூற்றாண்டு கண்ட பெரும்புலவர்கள் இருவர். ஒருவர், பழுத்த தமிழ்ப் புலமை படைத்த **குமரகுருபரர்:** இன்னொருவர், 'கற்பனைக் களஞ்சியம்' எனத் தமிழ் கூறு நல்லுலகால் பாராட்டப் பெற்ற **சிவப்பிரகாசர்.** மனங்கொள்ள வேண்டிய மற்றொரு சிறப்புக் குறிப்பும் உண்டு : வாழையடி வாழையென வரும் தமிழ்ப் புலவர் வரிசையில் வடக்கே காசி வரை சென்று பெருமை படைத்தவர்கள் இருவர். ஒருவர், குமரகுருபரர்; காசி வரை சென்று, முகலாய மன்னனிடம் அவரது இந்துஸ்தானி மொழியிலேயே பேசி, உதவியைப் பெற்று, அங்கே ஒரு மடத்தை நிறுவிச் சாதனை புரிந்தவர் அவர். மற்றொருவர், கவியரசர் **பாரதியார்:** 'நான் நானான இடம் காசி' என்னும் அவரது ஒப்புதல் வாக்குமூலம் இவ்வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

மதுரையில் அரசாண்டு வந்த திருமலை நாயக்கரின் வேண்டுகோளின்படி குமரகுருபரர் பாடியது **'நீதிநெறி விளக்கம்'.** அது 101 வெண்பாக்களால் ஆகியது; நெஞ்சை அள்ளும் அழகிய உவமைகள் நிறைந்தது.

'நீதிநெறி விளக்க'த்தில் இடம்பெற்றுள்ள ஓர் அற்புதமான பாடல். அது இன்றைய கணினி யுகத்தினரும் கற்க வேண்டுவது; கற்ற பின் நிற்கத் தகுவது. அப்பாடலில் மக்களாகப் பிறந்த அனைவருக்கும் பயன்படக்கூடிய - வாழ்வில் யாவரும் பின்பற்ற

* திருக்குறள், 978

வேண்டிய - ஓர் அறிவுரையினை வழங்கியுள்ளார் குமரகுருபரர். மற்றவர்களால் பெரிதும் மதிக்கப் பெற வேண்டும் என விரும்பு கின்றவர்கள் எவ்விடத்தும் - எக்காலத்தும் - மறவாமல் செய்ய வேண்டிய காரியங்கள் சில உண்டு. அவற்றை **'நோற்றல்'** என்ற ஆழ்ந்த பொருள் தருகின்ற சொல்லால் சுட்டுகின்றார் குமர குருபரர். 'உளங்கொண்டு அயர்வின்றிச் செய்யத் தகுவதாத லாலும், விளையும் பயன் பெரிதாதலாலும் இச்செயலை நோற்றல் என்றார்' என்பது 'பதிப்பு வேந்தர்' **உ.வே. சாமி நாதையர்** இச்சொல்லுக்கு வரையும் அரிய உரை விளக்கம். இனி, மற்றவர்களால் எக்காலத்தும் மதிக்கப் பெறவேண்டும் என எண்ணுகின்றவர்கள் என்ன என்ன காரியங்களை ஆற்ற வேண்டும் எனக் குமரகுருபரர் கூறுகிறார் எனக் காண்போம்.

முதலாவது, மற்றவர்களிடம் காணப்படும் நல்லியல்புகளை எல்லாம் பலரும் அறியச் சொல்ல வேண்டும். அடுத்தது, மற்றவர் களிடம் காணப்படும் சிறுமைகளை அறிந்திருந்தாலும் அவற்றை வெளியிடாமல் தம் மனத்திற்குள்ளேயே அடக்கி வைத்துக் கொள்ள வேண்டும். மூன்றாவதாக - முத்தாய்ப்பாக - எல்லோரிடமும், எப்போதும் வணக்கத்தைப் புலப்படுத்தும் பணிவான சொற்களையே பேச வேண்டும். இம்மூன்று காரியங்களையும் ஒரு நோன்பு போலத் தம் வாழ்வில் யார் விடாமல் தொடர்ந்து கடைப்பிடிக்கிறார்களோ, அவர்களே உலகத்தாரால் மிகவும் மதிக்கப் பெறுவர்; அவர்களின் உள்ளங்களிலே என்றென்றும் கொலு வீற்றிருப்பர். சீரிய இக்கருத்துக்களைத் தன்னகத்தே கொண்ட 'நீதிநெறி விளக்கப்' பாடல் இதோ:

"பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பது ஒன்று உண்டு - பிறர்பிறர்
சீரெல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்கும் தாழ்ச்சி சொலல்".

(நீதிநெறி விளக்கம், பா.19)

நடைமுறை வாழ்வில் பார்த்தால் பெரும்பாலும் நாம் மற்றவர்களின் நிறைகளைக் கண்டுகொள்ளவே மாட்டோம்; தப்பித்தவறி ஒருவேளை கண்டுகொண்டாலும், அவற்றை எவரிடமும் மனமாரப் பாராட்டிப் பேச மாட்டோம். மாறாக, மற்றவர்களின் குற்றங்குறைகளைக் கண் காது மூக்கு வைத்து,

ஒன்றுக்குப் பத்தாகப் பெரிதுபடுத்திப் பேசுவோம்; அப்படிப் பேசுவதிலே தனி மகிழ்ச்சியையும் காண்போம்; யாருடன் பேசினாலும் எப்போதும் 'யான்' (அகங்காரம்), 'எனது' (மமகாரம்) என்ற முனைப்புடனேயே பேசுவோம். இம்மூன்றும் நம் ஆளுமையில் இருந்து அகழ்ந்து எடுக்கப்பட வேண்டிய தீய பண்புகள் என வலியுறுத்துகின்றார் குமரகுருபரர்.

இராமானுசரின் வாழ்வில் நடந்த ஓர் உண்மை நிகழ்ச்சி இங்கே நினைவுகூரத்தக்கது;

இராமானுசர் மனித குல வரலாற்றில் வியப்பூட்டும் ஒரு தத்துவ மேதையாக விளங்கியவர்; ஒரு சமூகப் புரட்சியாளராக வாழ்ந்து காட்டியவர்; விழுமிய மனிதப் பண்புகளுக்கு ஒரு களஞ்சியமாகத் திகழ்ந்தவர். அவர் ஒருமுறை தமது சீடன் அனந்தாழ்வானின் வேண்டுகோளை ஏற்றுத் திருப்பதி ஆலயத்தைத் தரிசனம் செய்யப் புறப்பட்டார்; ஆயினும், ஆழ்வார்கள் கால் பதித்த மலை என்பதால், தம் காலடி பதிக்காமல் தவழ்ந்தே சென்றார் என்று **குரு பரம்பரை** கூறுகின்றது. இராமானுசர் திருமலை திருப்பதியின் ஆலயத்தை நெருங்குவதற்கு முன்பே அவரது மாமா திருமலை நம்பி தீர்த்தப் பிரசாதத்துடன் இறங்கி வந்து அவரை வரவேற்றார். பெரியவரின் வரவால் திகைப்புற்ற இராமானுசர், "இவ்வளவு தூரம் தாங்கள் வரவேண்டுமா? சிறியவர் எவரையேனும் அனுப்பி இருக்கலாகாதா?" என்று கேட்டார். அப்போது திருமலை நம்பி சொன்னது:

"நான்கு திருவீதிகளிலும் ஆராய்ந்து தேடினேன். எங்கும் என்னைக் காட்டிலும் சிறியவர்களைக் காண முடியவில்லை. அதனால் நானே வந்தேன்."

பெரியவரின் இம் மறுமொழியைக் கேட்டு நெஞ்சம் நெகிழ்ந்தார் இராமானுசர்.

உண்மையில், குமரகுருபரர் கூறும் 'யார்யார்க்கும் தாழ்ச்சி சொலல்' என்பது இதுதான்; **'வணங்கிய வாயினர்'** என வான்புகழ் **வள்ளுவர்** போற்றுவதும் இப்பண்பினைத் தான். இங்ஙனம் யார்யார்க்கும் - எவ்விடத்தும் - எக்காலத்தும் - தாழ்ச்சி சொல்வோரே உலக மக்களின் உள்ளங்களிலே உயர்ந்த இடத்தினைப் பிடிக்க முடியும்.

37

இராமகிருஷ்ண பரமஹம்சர் என்னும் ஆன்மிகப் பேரொளி

"அவருடைய (இராமகிருஷ்ண பரமஹம்சருடைய) திருவாக்கோ மிகமிகத் தெளிவானது - அநுபவத்தைப் பெற்றவராகையால் மிகவும் நுட்பமான பொருள்களைக் கூடத் தெளிவாக எடுத்துச் சொல்லும் ஆற்றல் அவரிடம் இருந்தது."

- கி. வா. ஜகந்நாதன்*

"இந்தியா உலகப் புகழ் பெறுவதற்குக் காரணம் **தாஜ்மஹால்** போன்ற சிறந்த கட்டடங்கள் மட்டும் அல்ல; **இமய மலையும் கங்கையாறும் சென்னைக் கடற்கரையும்** போன்ற இயற்கைப் பெருமைகள் மட்டும் அல்ல; பல நூற்றாண்டுகளாக இந்த மண்ணில் பிறந்து வளர்ந்து புகழொளி பரப்பி வரும் **பெருமக்களே** பெரிய காரணம் ஆவார்கள். உண்மையை ஆராய்ந்தால், இயற்கைப் பெருமைகளும் செயற்கைச் சிறப்புகளுமான மலை, கட்டடம் முதலியவற்றை விட, அழியாப் புகழைத் தேடித் தருகின்றவர்கள் இப் பெருமக்களே ஆவார்கள்" (கவிஞர் தாகூர், ப.3) என மொழிவர் பேராசிரியர் **மு.வரதராசனார்**. இப் பொன்மொழிக்கு ஏற்ப, பாரத மணித்திரு நாட்டிற்குப் பீடும் பெருமையும், புகழும் பெருமிதமும் சேர்த்த பெருமக்களுள் - அருளாளர்களுள் - ஒருவரே **இராமகிருஷ்ண பரமஹம்சர்**. 'கதாதரர்' என்ற இயற் பெயரினைக் கொண்ட அவர், வங்கம் தந்த ஓர் உயரிய ஆன்மிகப் பேரொளி; அவர் இம் மண்ணுலகில் வாழ்ந்தது 50 ஆண்டுகள் 5 மாதங்கள் 27 நாட்கள் (18.02.1886 - 16.08.1936). இராமகிருஷ்ண பரமஹம்சர் அன்னை சாரதா தேவியாரின் அருமந்த வாழ்க்கைத் துணைவர்; வீரத் துறவி விவேகானந்தரின் குரு தேவர்.

---

* சான்றோர் வாக்கு, ப.63.

"என்னுடைய ஆசானும், எனது குருநாதரும், எனது தலைவரும், எனது இலட்சியப் புருஷரும், என் வாழ்க்கையை உய்விக்க வந்த தெய்வமுமாகிய ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவர்" (நான் கண்ட குருதேவர், ப.24) எனத் தம் குருதேவருக்குப் புகழாரம் சூட்டிப் பெருமிதம் கொள்வார் சுவாமி **விவேகானந்தர்**. "ராமகிருஷ்ண பரமஹம்சருடைய உபதேசங்கள் உபநிஷத்துக்குச் சமானம் என்றால் மிகையாகாது. பழைய காலத்து ரிஷிகளைப் போன்ற தபோதனர் ஒருவர் நம்முடைய காலத்தில் அவதரித்தார். அவரே ராமகிருஷ்ண பரமஹம்சர்" (பகவான் ராமகிருஷ்ணரின் ஞானமொழி, ப.1) என்னும் மூதறிஞர் **ராஜாஜி**யின் கூற்றும் இங்கே மனங்கொளத்தக்கதாகும்.

இராமகிருஷ்ண பரமஹம்சரின் வாழ்க்கை மிகவும் எளிமையானது; பக்தி நெறியும் வைராக்கியமும் ஒன்று சேர்ந்தது. அவருடைய அமுத மொழியோ மிகமிகத் தெளிவானது; 'நிறைமொழி மாந்தர் ஆணையின் கிளந்த, மறைமொழி தானே மந்திரம் என்ப' (1434) என்னும் தொல்காப்பிய நெறிக்கு ஏற்ப அமைந்தது. ஆழ்ந்த அனுபவ அறிவோடு உண்மை அறிவும் வாய்க்கப் பெற்றவர் ஆகையால் பரமஹம்சரின் வாக்கில் அருமையும் எளிமையும், அழகும் ஆற்றலும் களிநடம் புரிந்து நின்றன. மிகவும் நுட்பமான பொருள்களைக் கூட எளிய மக்களும் புரிந்துகொள்ளும் வகையில் தெள்ளத் தெளிவாக எடுத்துச்சொல்லும் ஆற்றல் அவரிடம் இருந்தது. நெஞ்சை அள்ளும் உவமைகளும் கதைகளும் அவருக்கு இவ்வகையில் உற்றுழி உதவின. பதச் சோறாக, 'எம்மதமும் சம்மதம்' என்ற கருத்தைப் பரமஹம்சர் எங்ஙனம் ஓர் எளிய உதாரணத்தின் வாயிலாக விளக்குகிறார் எனக் காணலாம்.

ஐந்தாறு மொழிகளைப் பேசுகிற மக்கள் ஓர் இடத்தில் ஒன்றுகூடி இருந்தார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் அப்போது தமக்கு அருகில் உள்ளவரைப் பார்த்து ஏதோ வேண்டும் என்று கேட்டனர். ஒவ்வொருவரும் தம் நண்பரிடம் தம் மொழியிலேயே சொன்னார்கள். 'பானி லாவோ' என்றார் ஒருவர். 'Bring Water' என்றார் இன்னொருவர். 'தண்ணீர் கொண்டு வா' என்றார் மற்றொருவர். இப்படியே அவரவர்கள் பேசிய வார்த்தைகள் வேறுவேறு மொழியாக இருந்தமையால் வெவ்வேறு ஒலிகளுடன் இருந்தன. பானி, வாட்டர், தண்ணீர், நீள்ளு என்பன காதில் விழும்போது வெவ்வேறு ஒலிகளாகத்

தானே இருக்கும்? அவர்கள் பேசிய மொழிகளைத் தெரியாத ஒருவர் அங்கே இருந்தார். அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு வார்த்தைகளைப் பேசி ஒவ்வொருவரையும் அனுப்பியதைப் பார்த்தார்; ஒவ்வொருவரும் வெவ்வேறு பொருள்களைக் கொண்டு வரச் சொல்லுகிறார்கள் போலும் என்று எண்ணிக் கொண்டார். சிறிது நேரம் கழித்து யாவரும் தண்ணீரைக் கொண்டு வந்தார்கள். "அட, ஒரே பொருளைத் தான் இவ்வளவு பேரும் கேட்டார்களா? வெவ்வேறு வார்த்தைகளில் வெவ்வேறு விதமாகக் கேட்டார்களே!" என்று ஆச்சரியப்பட்டார்.

தண்ணீரின் பெயரை வெவ்வேறு மொழியில் சொல்லும் போது வெவ்வேறாகக் காதில் படுகிறது. ஆனால் அந்தப் பெயருக்கு உரிய பொருளைக் காணும்போது எல்லாம் ஒன்றுதான் என்று தெரியவருகிறது. 'ஏகம் ஸத்; விப்ரா பஹுதா வதந்தி' என்பது மறைமொழி. 'உள்ள பொருள் ஒன்றே; அறிந்தவர்கள் பலபடியாகச் சொல்கிறார்கள்' என்பது அதன் பொருள். கடவுளிடம் ஈடுபட ஈடுபட, **'எல்லாக் கடவுளரும் ஒன்றே'** என்ற உண்மை அனுபவத்தில் விளங்கும். **'ஒரே கடவுளைப் பலரும் பல வகைகளில் வழிபடுகிறார்கள்'** என்ற உயரிய சமரசக் கொள்கையை இங்கே ஓர் எளிய உதாரணத்தின் மூலம் போகிற போக்கில் தெள்ளத் தெளிவாக உணர்த்தியுள்ளார் பரமஹம்சர்.

சாதாரண மக்கள் செய்ய முடியாத காரியங்களைச் செய்யும் வல்லமை **'சித்தி'** எனப்படும். 'இத்தகைய சித்தி களிலும், அவற்றைக் கொண்டு மக்களை வியக்கும்படியாகச் செய்வதிலும் பரமஹம்சருக்குச் சற்றும் உடன்பாடு இல்லை. **'சித்திகள் பெறுவதனால் ஆணவம் வளரும், அதனால் பக்திக்குத் தடையே ஒழிய அது இறைவனை அடைய உதவும் கருவி ஆகாது'** என்பது பரமஹம்சரின் கருத்து. இதனை உணர்த்த ஒருமுறை அவர் சொன்ன கதை:

ஒரு யோகி தன் குருவிடம் சென்று, "நான் பதினான்கு வருடங்கள் காட்டில் தனியாக இருந்து தவம் செய்து நீரின் மேல் நடக்கும் சித்தியை அடைந்திருக்கிறேன்" என்றானாம். அதைக் கேட்ட குருவானவர் அவனைப் பார்த்து, "மகனே! ஏன் இவ்வளவு வருத்தப்பட்டாய்? பதினான்கு வருடங்களையும் வீணாக்கி விட்டாயே! ஒன்றரையணா கொடுத்தால் ஓடக்காரன்

உன்னை நீரின் மேல் கொண்டு போய் அக்கரை சேர்ப்பானே? நீ அடைந்த சித்தி ஒன்றரையணா மதிப்புத் தான்'' என்றார்.

''சித்தி அடையும் ஆசையைக் கொண்டு யாரும் காசை வீணாக்க வேண்டா. இறைவன் திருவடியை அடைய வேண்டும் என்ற நோக்குடன் உண்மையான பக்தி செய்யுங்கள். அற்புதங்களைக் காட்டி மக்களைக் கவர நினைக்கும் யோகிகளிடம் செல்ல வேண்டாம்'' என்பது இராமகிருஷ்ண பரமஹம்சரின் ஞானமொழி; உபதேசம்.

'பல சாஸ்திரங்களைத் தெரிந்துகொள்வதால் என்ன பயன்? இந்த வாழ்க்கை நதியைக் கடக்கத் தெரிவதுதான் அவசியம்' என்பதை உணர்த்தும் இராமகிருஷ்ண பரமஹம்சரின் சுவையான குறுங்கதை:

சிலர் படகில் கங்கையைக் கடந்து கொண்டிருந்தனர். ஒரு பண்டிதர் தம்முடைய கல்வியறிவைத் தம்பட்டம் அடித்துக் கொண்டார்: 'வேதம், வேதாந்தம், ஆறு தரிசனங்கள் என்று சாஸ்திரங்கள் எல்லாம் படித்திருக்கிறேன்' என்றார். 'என்ன, உனக்கு வேதாந்தம் தெரியுமா?' என்று ஒருவனிடம் கேட்டார். அதற்கு அவன், 'இல்லை ஐயா' என்றான். பிறகு, 'சாங்கியம், பாதஞ்ஜலம் தெரியுமா?' என்றார். அதற்கும் அவன், 'இல்லை, ஐயா, எனக்குத் தெரியாது' என்றான். 'தரிசனம் - கிரிசனம் ஏதாவது படித்திருக் கிறாயா?' என்று கேட்ட போது அதற்கும் அவன், 'இல்லை' என்றே பதிலளித்தான். பண்டிதர் இப்படி அளந்துகொண்டே வந்தார். அந்த மனிதன் மௌனமாக இருந்தான்.

அந்த நேரத்தில் பலத்த புயல் வீசத் தொடங்கியது. படகு நிலைகுலைந்து ஆடியது. அப்போது அந்த மனிதன் பண்டிதரிடம், 'ஐயா பண்டிதரே, உமக்கு நீந்தத் தெரியுமா?' என்று கேட்டான். அதற்குப் பண்டிதர், 'தெரியாது' என்று பதிலளித்தார். 'எனக்கு சாங்கியம், பாதஞ்ஜலம் எதுவும் தெரியாது. ஆனால் நன்றாக நீந்தத் தெரியும்' என்றான் அந்த மனிதன்.

இராமகிருஷ்ண பரமஹம்சரின் இத்தகைய மந்திர மொழிகளையும் கதைகளையும் மனம் கலந்து - பொருள் உணர்ந்து - பயில்வோம்; அவற்றின் வழி வையத்துள் வாழ் வாங்கு - நல்ல வண்ணம் - வாழ்வோம். இம்மண்ணுலகிலேயே மகாகவி **பாரதியார்** சுட்டும் **'அமர நிலை'**யினை அடைவோம்.

38

சுவாமி விவேகானந்தர் காட்டும் பெருவாழ்வு

"இந்திய நாட்டுத் துறவியருள் குன்றின் மேலிட்ட விளக்காய் ஒளிர்பவர் சுவாமி விவேகானந்தர்... 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்பதை உணர்ந்து மக்கள் தொண்டு செய்வதே அவரது தலையாய பணியாக இருந்து வந்தது."

- சு.ந.சொக்கலிங்கம்★

"நாம் அழுதுகொண்டே பிறக்கிறோம். குறை சொல்லிக் கொண்டே வாழ்கிறோம். ஏமாற்றம் அடைந்து இறக்கிறோம்" (ப.ராமஸ்வாமி, உலகப் பழமொழிகள், ப.48) என்கிறது இங்கிலாந்துப் பழமொழி ஒன்று. வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டும் - மண்ணில் நல்ல வண்ணம் வாழ வேண்டும் - என எண்ணுவோர், இப்பழமொழியைப் பொய்யாக்கிக் காட்ட வேண்டும். அழுதுகொண்டே பிறக்கும் நாம், வாழ்வின் இறுதி மூச்சு வரை சிரித்துக்கொண்டே வாழ வேண்டும்; வாழ்வில் நம்மைத் துன்பம் வந்து தாக்கும்போது கூட, அதனைத் துணிவோடு எதிர்கொள்ளுகின்ற ஆளுமைப் பண்பினை வளர்த்துக் கொள்ள வேண்டும்; துன்பத்திற்கே துன்பம் தரும் அளவிற்கு வாழ்வில் உயர வேண்டும்.

அடுத்தவர் மீது எப்போதும் குறை சொல்லிக்கொண்டே வாழாமல், குறை காண்பதிலேயே பொழுதைக் கழிக்காமல், உலகில் மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரிடமும் உள்ள நிறையைக் காணக் கற்றுக்கொள்ள வேண்டும்; அதனை நம் வாழ்விலும் பின்பற்ற முன்வர வேண்டும். அது மட்டும் அன்று; இன்னும் ஒரு படி மேலே சென்று, உள்முகமாகச் சிந்தித்துப் பார்த்து, நம்மிடம் உள்ள குறைகளைக் களையும் மனப் பக்குவத்தையும் நாம் பெற முயல வேண்டும்.

---

* விவேகானந்தர் வாழ்வும் வாக்கும், ப.19.

எதிர்பார்ப்பு என ஒன்று இருந்தால் தானே வாழ்வில் ஏமாற்றத்தைச் சந்திக்க நேரும்? எதையும் எதிர்பார்க்காமல் நடப்பதுதான் நடக்கும் - நல்லதே நடக்கும் - நடப்பதெல்லாம் நன்மைக்கே என்ற மனப்பான்மையை வளர்த்துக் கொண்டால் போதும், வாழ்வில் ஏமாற்றத்திற்கே இடம் இல்லாமல் போகும்; ஏமாற்றம், ஏமாற்றம் அடைந்து நம்மைவிட்டு விலகிச் சென்றுவிடும்.

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே!' என்பார் தொல்காப்பியர். ஆனால், 'வாழ்க்கை' என்ற ஒரு சொல்லுள் ஓரைந்து சொற்கள் பொதிந்து கிடப்பது சிறப்பு. "நொந்தாரையும், நொந்து நொந்து வெந்தாரையும் பார்த்து... வாழ்க்கையின் முதல் எழுத்து அழைக்கின்றது. 'வா' என்று; முதல் எழுத்தும் இரண்டாம் எழுத்தும் சேர்ந்து 'வாழ்' என்கிறது. எதை நம்பி என்னும் கேள்விக்கு நான்காம் எழுத்து நவில்கின்றது விடை 'கை' என்று. அது மட்டும் அல்ல, கை கொண்டு உழைத்தாலும் காக்க வேண்டியது ஒன்று உண்டு என்று சொல்கிறது. முதல் எழுத்தும், மூன்றாம் எழுத்தும், நான்காம் எழுத்தும் சேர்ந்து 'வாக்கை' என்று. மேற்சொன்ன கருத்தை உள்வாங்கி உழைத்தால் நீ பெறுவது என்னவென்று முதல் எழுத்தும் நான்காம் எழுத்தும் சேர்ந்து சொல்கிறது 'வாகை' என்று!

'வா'; 'வாழ்'; 'கை'; 'வாக்கை'; 'வாகை' என்னும் அய்ந்து சொற்களைத் தன்னுள் சூல் கொண்டு நிற்கும் ஒரே சொல் 'வாழ்க்கை!'" (நினைவு நாடாக்கள், ப.12) என 'வாழ்க்கை' என்னும் சொல்லை அக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்துத் திட்பமும் நுட்பமும் ஒட்பமும் விளங்கப் பொருள் உரைப்பார் கவிஞர் **வாலி**.

இது வீரத் துறவி **விவேகானந்தர்** பிறந்த 150-ஆம் ஆண்டு. இந்திய நாட்டின் பெருமையை உலக அரங்கில் உயர்த்திய அருளாளர் அவர். கடவுளிடம் கொடுக்குமாறு அவர் வேண்டியன வருமாறு:

"வலிமை கொடுங்கள் எனக் கேட்டேன் -
அவர் கொடுத்ததோ நெருக்கடியான சூழ்நிலைகள்.

அறிவு கொடுங்கள் எனக் கேட்டேன் -
அவர் கொடுத்ததோ வாழ்வின் புதிர்கள்.

மகிழ்ச்சி கொடுங்கள் எனக் கேட்டேன் -

மகிழ்ச்சியற்ற மனிதர்களை அறிமுகப்படுத்தினார்.

செல்வம் கொடுங்கள் எனக் கேட்டேன் -

உழைக்கக் கற்றுக் கொடுத்தார்.

சலுகைகள் கேட்டேன் -

வாய்ப்புகள் கொடுத்தார்.

மன நிம்மதி கேட்டேன் -

மற்றவர்களுக்கு உதவச் சொன்னார்.

நான் விரும்பியது எதையும் கடவுள் கொடுக்கவில்லை; ஆனால் -

எனக்குத் தேவையானவை எல்லாவற்றையும் அவர் கொடுத்தார்."

சுவாமி விவேகானந்தரின் கருத்தியலில், வாழ்வில் அவ்வப்போது நேரும் நெருக்கடியான சூழ்நிலைகளை எதிர் கொண்டு அவற்றை வெற்றி கொள்வதற்குத் தேவைப்படுவது மன வலிமையே; மனித வாழ்வின் புதிர்களை விளங்கிக் கொள்வதே உண்மையான அறிவு என்பது; 'நமக்கும் கீழே உள்ளவர் கோடி, நினைத்துப் பார்த்து நிம்மதி நாடுவதே' மகிழ்ச்சியான வாழ்க்கையின் அடிப்படை நெறி; செல்வம் என்பது உழைத்து வாழ்வதே; சலுகைகளைப் பெற்று வாழ்வதைவிட, வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்வதிலேயே வாழ்வின் வெற்றி அடங்கியுள்ளது. பயன் கருதாமல் மற்றவர் களுக்கு உதவுவதிலேயே மன நிம்மதியும், மகிழ்ச்சியும் கிடைக்கும். நாம் விரும்பிய எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் கடவுள் கொடுப்பதில்லை; ஆனால், நமக்குத் தேவையான எல்லா வற்றையும் - தேவைப்படுகின்ற நேரத்தில் - கொடுப்பவரே கடவுள். சுவாமி விவேகானந்தரின் இவ்வாக்கு, வெறும் வார்த்தை யாக இல்லாமல் - வாழ்க்கையானால் போதும் - மனிதன், மாமனிதனாக (Superman) வாழ்வில் உயர்வான்; அவனது வாழ்வு வேடிக்கை வாழ்வாக- வாடிக்கை வாழ்வாக - கேளிக்கை வா்ழ்வாக - கோரிக்கை வாழ்வாக இல்லாமல், பெருவாழ்வாக (Mega life) விளங்கும்.

39

பாரதியார் போற்றும் ஆன்மிக விழுமியங்கள்

"ஆன்மிகம் என்றால் என்ன? மனித மனத்தைச் செம்மைப் படுத்தி ஆண்டவனின் அருளைப் பெற ஆற்றுப்படுத்தும் கருவி."

- இரத்தின. தியாகராசன்*

'நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோராது இருத்தல்' என்னும் கொள்கை முழக்கத்துடன் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை உலகில் பீடு நடை பயின்றவர் பாரதியார். 'தீயே நிகர்த்து ஒளி வீசும் தமிழ்க் கவி'யின் நாயகர் அவர். மூதறிஞர் **மா.ரா.போ. குருசாமி** குறிப்பிடுவது போல, 'உலகியலை அவமதிக்காத ஆன்மிகம், ஆன்மிகத்தை மறவாத உலகியல் - இதுவே பாரதியாரில் இணைந்து பிணைந்த ஆளுமையாகும்' (முன்னுரை, பாரதி பாடல்கள்: ஆய்வுப் பதிப்பு, pp.xxvi). பாரதியார் கடவுளரிடம் வேண்டும் வரங்கள் இவ்வகையில் நோக்கத் தக்கவை. 'எனக்கு வேண்டும் வரங்கள் இசைப்பேன் கேளாய் கணபதி' என விநாயகப் பெருமானிடம் வேண்டும் போதும், 'நின்னைச் சில. வரங்கள் கேட்பேன்- அவை நேரே இன்று எனக்குத் தருவாய்' எனக் காளியிடம் நேரடியாகக் கேட்கும் போதும், 'இவை அருள்வதில் உனக்கு எதுந் தடையுளதோ?' எனப் பராசக்தியிடம் மிக இயல்பான முறையில் வினவும் போதும் பாரதியாரின் வாக்கில் **சுந்தரரின் தோழமை நெறி** சுடர் விட்டு நிற்கக் காண்கின்றோம்; உலகியலும் ஆன்மிகமும் ஒட்டி உறவாடப் பார்க்கின்றோம்.

---

* மானுடம் பயனுற, ப.8.

பாரதியார் விநாயகப் பெருமானிடம் வேண்டும் வரங்கள்

பாரதியார் போற்றும் ஆன்மிக நெறி அமரத் தன்மை எய்துவதை நோக்கமாகக் கொண்டது; மனத்தில் சலனம் இல்லாத - மதியில் இருளே தோன்றாத - உயரிய மவுன நிலை அது. அவர் விநாயகப் பெருமானிடம் வேண்டுவது இந்நிலையையே:

"எனக்கு வேண்டும் வரங்களை
இசைப்பேன் கேளாய் கணபதி,
மனத்தில் சலனம் இல்லாமல்,
மதியில் இருளே தோன்றாமல்,
நினைக்கும் பொழுது நின்மவுன
நிலைவந்திட நீ செயல் வேண்டும்,
கனக்கும் செல்வம், நூறுவயது
இவையும் தரநீ கடவாயே."

'நினைக்கும் பொழுது நின் மவுன நிலை வந்திட நீ செயல் வேண்டும்' எனக் கேட்கும் பாரதியார் கூடவே, 'கனக்கும் செல்வம், நூறு வயது இவையும் தர நீ கடவாயே' என விநாயகப் பெருமானிடம் வேண்டுவது நோக்கத்தக்கது. 'மவுன நிலை' என்பது ஆன்மிக நெறி; நிறைந்த செல்வமும் நீண்ட வாழ்நாளும் உலகியலைக் கருத்தில் கொண்டவை. இதுவே பாரதியாரின் தனிப்பெரும் ஆளுமைப் பண்பு ஆகும்.

பாரதியார் பராசக்தியிடம் கேட்கும் வரங்கள்

'யோக சித்தி : வரங்கேட்டல்' என்பது பாரதியாரின் புகழ் பெற்ற தோத்திரப் பாடல். 'அடி, உன்னைக் கோடி முறை தொழுதேன் - இனி, வையத் தலைமை எனக்கு அருள்வாய்!' என்று வையத் தலைமையை அருளுமாறு பராசக்தியிடம் வேண்டும் பாரதியார், 'நின்னைச் சில வரங்கள் கேட்பேன் - அவை, நேரே இன்று எனக்குத் தருவாய்' என உரிமையோடு கேட்பன வருமாறு:

" . . .   .   என்றன்
முன்னைத் தீய வினைப் பயன்கள் - இன்னும்
மூளாது அழிந்திடுதல் வேண்டும் - இனி

என்னைப் புதிய உயிராக்கி - எனக்கு
ஏதுங் கவலை யறச் செய்து - மதி
தன்னை மிகத் தெளிவு செய்து - என்றும்
சந்தோஷம் கொண்டிருக்கச் செய்வாய்."

இங்கே 'முன்னைத் தீய வினைப் பயன்கள் இன்னும் மூளாது அழிந்திடுதல்' என்பது ஆன்மிக நெறி. மேலும், 'தவ மேன்மை கொடுத்து அருளல் வேண்டும்' என்றும், 'புதிய உயிராக்கல் வேண்டும்' என்றும் பராசக்தியிடம் கேட்கும் பாரதியார் இவற்றுடன் நில்லாது, 'தொழில் பண்ணப் பெருநிதியம் வேண்டும்' என்றும், கூடவே 'கவலையற்றிருக்கும் மனம், தெளிவு கொண்ட மதி, அரிவாளைக் கொண்டு பிளந்தாலும் - கட்டு மாறா உடல் உறுதி' ஆகியவற்றையும் அருளு மாறு வேண்டுவது மனங்கொளத் தக்கது. வேறு சொற்களில் குறிப்பிடுவது என்றால், **'உள்ளம் வேண்டிய படி செல்லும் உடல், நசையறு மனம், நித்தம் நவம் எனச் சுடர் தரும் உயிர், அசைவறு மதி'** - இவை நான்குமே பாரதியார் போற்றும் ஆன்மிக நெறியின் அடிப்படைத் தேவைகள் ஆகும்.

பாரதியார் போற்றும் பதினைந்து ஆன்மிக விழுமியங்கள்

'வேண்டும்' என்னும் தலைப்பில் பாடிய தோத்திரப் பாடலில் பாரதியார் பதினைந்து ஆன்மிக விழுமியங்களைப் பட்டியல் இட்டுள்ளார். மனித குலம் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு - வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு - இன்னும் குறிப்பாகவும் கூர்மையாகவும் சொல்ல வேண்டும் என்றால்- மானுடம் வான் உறையும் தெய்வ நிலை எய்துவதற்கு - இன்றி யமையாது வேண்டிய வாழ்வியல் நெறிகள் அவை. அவற்றைப் பாரதியாரின் சொற்களிலேயே சுட்டுவது பொருத்தமாக இருக்கும்:

1. மனதில் உறுதி வேண்டும்
2. வாக்கினிலே இனிமை வேண்டும்
3. நினைவு நல்லது வேண்டும்
4. நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்
5. கனவு மெய்ப்பட வேண்டும்
6. கைவசமாவது விரைவில் வேண்டும்.

7. தனமும் இன்பமும் வேண்டும்

8. தரணியிலே பெருமை வேண்டும்

9. கண் திறந்திட வேண்டும்

10. காரியத்தில் உறுதி வேண்டும்

11. பெண் விடுதலை வேண்டும்

12. பெரிய கடவுள் காக்க வேண்டும்

13. மண் பயனுற வேண்டும்

14. வானகம் இங்குத் தென்பட வேண்டும்

15. உண்மை நின்றிட வேண்டும்

இவ் விழுமியங்களை வாழ்வியல் நோக்கில் சற்றே அலசிப் பார்க்கலாம்.

1. மனிதனை மாமனிதனாக உயர்த்துவதும், மினிதனாகத் தாழ்த்துவதும் அவனது எண்ணம் - சொல் - செயல் ஆகிய மூன்றே. **மனதில் உறுதி - வாக்கினிலே இனிமை - நல்ல நினைவு;** இம் மூன்று ஆளுமைப் பண்புகள் கொண்டோரே வாழ்வில் உயர முடியும்; சாதனை புரிய இயலும்.

2. உலகியல் வாழ்வில் பாரதியார் வலியுறுத்தும் அடிப்படை நெறி : கனவும் காண வேண்டும், காரியமும் ஆற்ற வேண்டும். **கனவு மெய்ப்படல் - நெருங்கின பொருள் கைப் படல் - விரைவில் கைவசமாதல்:** இவை மூன்றும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை; காரண - காரிய முறையில் அமைபவை.

3. பாரதியாரின் கருத்தியலில் உலகியல் வாழ்வில் வெற்றி பெற வேண்டும் என்றால், **தனமும் இன்பமும்** வேண்டும்; 'நிலத்திற்குச் சுமை' என வாழாமல், **தரணியிலே பெருமை** பெற வேண்டும்; அதற்குக் **கண் திறந்திட** வேண்டும்; கூடவே, **காரியத்தில் உறுதியும்** வேண்டும்.

4. பாரதியார் பெரிதும் போற்றிய விடுதலைகள் **பெண் விடுதலையும் மண் விடுதலையும்;** மிகவும் வலியுறுத்திய உணர்வுகள் **தெய்வ பக்தியும் தேச பக்தியும்.** 'பெண் விடுதலை வேண்டும்', 'மண் பயனுற வேண்டும்', 'பெரிய கடவுள் காக்க

வேண்டும்', 'வானகம் இங்கு தென்பட வேண்டும்' என்னும் விழுமியங்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவை.

5. பாரதியாரின் வாழ்வும் வாக்கும் உணர்த்தும் அடிப் படையான செய்தி **'உண்மை நின்றிட வேண்டும்'** என்பதே.

இரத்தினச் சுருக்கமான மொழியில் குறிப்பிடுவது என்றால் **'இன்று புதிதாய்ப் பிறந்தோம்' என்ற எண்ணத் தோடு இன்புற்று வாழ்வது, மண்ணிலே விண்ணைக் காண்பது** என்னும் இரண்டுமே பாரதியார் போற்றும் ஆன்மிக வாழ்வின் அடிப்படையான இரு நெறிகள் ஆகும்.

40

ஆண்டவன் கட்டளை ஆறு

"மனச் செல்வமே நமது செல்வம். மற்றெல்லாம் பிறர் செல்வம்."

-சுவாமி பிரம்மானந்த சரஸ்வதி★

'**தே**ர்ந்து மனிதன் வாழும் வகைக்குத் தெய்வத்தின் கட்டளை ஆறு' என்கிறார் கவிஞர் **கண்ணதாசன்.** 'ஆண்டவன் கட்டளை' என்ற திரைப்படத்திற்காக எழுதிய தத்துவப் பாடல் ஒன்றில் அவர் அக்கட்டளைகளை அழகுற விளக்கிப் பாடியுள்ளார். இங்கே அக்கட்டளைகளைக் குறித்து முறையே காண்போம்.

1. 'ஒன்றே சொல்வார் ஒன்றே செய்வார்
உள்ளத்தில் உள்ளது அமைதி'

என்பது ஆண்டவனின் முதல் கட்டளை. ஒன்றே சொல்லி, சொன்னதையே செய்து யார் வாழ்கிறார்களோ அவர்களது உள்ளத்தில் என்றென்றும் அமைதி குடியிருக்கும். மனிதன் தனது சொல்லுக்கும் செயலுக்கும் இடையே எந்தவிதமான இடைவெளியும் இல்லாமல் - வார்த்தைக்கும் வாழ்க்கைக்கும் இடையே யாதொரு முரண்பாடும் இல்லாமல் - 'சொன்னதைச் செய்வேன்; செய்வதைச் சொல்வேன்' என்ற விழுமிய குறிக்கோளுடன் வாழ்ந்து வர வேண்டும். 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்' என்ற **வள்ளலாரின்** வாக்கும் இந்த அடிப்படையில் எழுந்த ஒன்றே ஆகும்.

---

* வாழ்வே தவம்,ப.80.

2. 'இன்பத்தில் துன்பம் துன்பத்தில் இன்பம்
இறைவன் வகுத்த நியதி'

மேலோட்டமாகப் பார்த்தால் இன்பமும், துன்பமும் முற்றிலும் வேறுபட்ட இரு உணர்ச்சிகளைப் போல் தோன்றும்; ஆயின், ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் இன்பத்தில் துன்பமும், துன்பத்தில் இன்பமும் ஊடாடி நிற்பது புலனாகும். எண் வகை மெய்ப்பாடுகளை நிரல்படுத்திக் கூறும் **தொல்காப்பியர்** நகையையும் அழுகையையும் அடுத்தடுத்துக் கூறியிருப்பதும் இங்கே நினைவுகூரத் தக்கதாகும். இவ்வளவு ஏன்? நன்றாக, வாய்விட்டு, மனமாரச் சிரித்துக் கொண்டே இருங்கள்; சில நொடிகளில் உங்கள் கண்களில் கண்ணீர்த் துளிகள் தானாக அரும்பி நிற்கும். அதே போல், நிறுத்தாமல், நன்றாக அழுது பாருங்கள். முடிவில் உங்களிடம் இருந்து ஒருவிதச் சிரிப்பு தோன்றவே செய்யும். இன்பத்தில் துன்பத்தின் தாக்கம் விரவி இருக்கும்; துன்பத்தில் இன்பத்தில் சாயல் படிந்து இருக்கும். இது இறைவன் வகுத்த நியதி ஆகும்.

'சொல்லுக்குச் செய்கை பொன்னாகும் - வரும்
துன்பத்தில் இன்பம் பட்டாகும் - இந்த
இரண்டு கட்டளை அறிந்த மனதில்
எல்லா நன்மையும் உண்டாகும்'

என ஆண்டவனின் முதல் இரு கட்டளைகளையும் விளக்கிப் பாடுகிறார் கண்ணதாசன்.

3. 'உண்மையைச் சொல்லி நன்மையைச் செய்தால்
உலகம் உன்னிடம் மயங்கும்'

என்பது ஆண்டவனின் மூன்றாவது கட்டளை. எப்போதும் உண்மையே பேசி, இயன்ற வரை பிறருக்கு நன்மையே செய்து வாழ்ந்தால், உலகம் உங்களிடம் மயங்கி நிற்கும்; நீங்கள் சொல்வதைக் கேட்டு நடக்கும்.

4. 'நிலை உயரும் போது பணிவு கொண்டால்
உயிர்கள் உன்னை வணங்கும்'

என்பது ஆண்டவனின் நான்காவது கட்டளை. வாழ்க்கையில் நமது நிலை உயர உயர, உள்ளத்தில் அகந்தை - ஆணவம் -

செருக்கு ஓங்கி வளர்ந்துவிடக் கூடாது; பணிவு நம்மை விட்டு ஒருபோதும் அகன்றுவிடக் கூடாது. நிலை உயர்ந்து விட்ட போதிலும் ஒருவன் பணிவு கொண்டு வாழ்ந்தால், மனிதர்கள் மட்டுமல்ல - இந்த உலகத்து உயிர்கள் அனைத்தும் - அவனை வணங்கி நிற்கும்.

'அகந்தைக் கிழங்கை அகழ்ந்து எடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்கு ஏற்றும் விளக்கே' என்று **குமரகுருபரர்** மீனாட்சி அம்மையை வழிபட்டு நிற்கும் அடியவரின் மன இயல்பைப் பற்றி எவ்வளவு அழுத்தமாகப் பாடியிருக்கிறார் பாருங்கள்; **'அகந்தைக் கிழங்கு'** - என்ன அற்புதமான உருவகம்! அதனை 'அகழ்ந்து (தோண்டி) எடுக்கும்' அடியவர்கள் - எவ்வளவு ஆழமான சொல்லாட்சி!

'உண்மை என்பது அன்பாகும் - பெரும்
பணிவு என்பது பண்பாகும் :
இந்த நான்கு கட்டளை அறிந்த மனதில்
எல்லா நன்மையும் உண்டாகும்'

என ஆண்டவனின் அடுத்த இரு கட்டளைகளையும் விளக்கிக் கூறுகிறார் கண்ணதாசன்.

5. 'ஆசை, கோபம், களவு கொள்பவன்
பேசத் தெரிந்த மிருகம்'

என்பது ஆண்டவனின் ஐந்தாவது கட்டளை. உள்ளத்தில் ஆசை, கோபம், களவு என்னும் மூன்று குணங்களும் கொண்ட ஒருவன் ஆறறிவு படைத்த மனிதனாக இருக்கலாம்; அவனுக்குப் பேசத் தெரிந்தும் இருக்கலாம். என்றாலும், அவன் **பேசத் தெரிந்த ஒரு மிருகம்தான்; ஒருபோதும் அவன் மனிதனாகக் கருதப்பட மாட்டான்.**

6. 'அன்பு, நன்றி, கருணை கொண்டவன்
மனித வடிவில் தெய்வம்'

என்பது ஆண்டவனின் ஆறாவது கட்டளை. அன்பு, நன்றி, கருணை என்னும் மூன்று உயர் குணங்களும் கொண்ட ஒருவன் **வடிவத்தில் மனிதனாக இருக்கலாம்; ஆனால் பண்பிலே அவன் தெய்வமாக மதிக்கத் தகுந்தவன் ஆவான்.** எனவே

'மனித வடிவில் தெய்வம்' என அவன் சிறப்பித்துச் சொல்லப்படுகிறான்.

'மிருகம் என்பது கள்ளமனம் - உயர்
தெய்வம் என்பது பிள்ளை மனம் - இந்த
ஆறு கட்டளை அறிந்த மனது
ஆண்டவன் வாழும் வெள்ளை மனம்'

(திரை இசைப் பாடல்கள்: முதல் தொகுதி, பக்.311-312)

என முத்தாய்ப்பாக ஆண்டவனின் ஆறு கட்டளைகளையும் பற்றிப் பாடி முடிக்கிறார் கண்ணதாசன்.

நண்பர்களே, விலங்குப் பண்புகள் கொண்ட **கள்ள மனத்தை** ஒழித்துக் கட்டுங்கள்! உயர்குணங்கள் கொண்ட **பிள்ளை மனமாக** - ஆண்டவன் வாழும் **வெள்ளை மனமாக** - உங்கள் மனத்தை ஆக்கிக் கொள்ளுங்கள்! ஆண்டவனின் இந்த ஆறு கட்டளைகளையும் பொன்னே போல் போற்றி வாழும் உங்கள் வாழ்க்கையில் எல்லா நன்மைகளும் உண்டாகும். இது உறுதி.

வானதி பதிப்பகம்
வெளியிட்டுள்ள
பேராசிரியர் இரா.மோகனின் நூல்கள்

தோரண வாயில்
I.பேராசிரியர் இரா.மோகன்

1. பேராசிரியர் இரா.மோகனின் படைப்புலகம்

● இன்றைய இளம்தலைமுறைக்கு உதவும் அரிய பல செய்திகளை உள்ளடக்கியுள்ளது இந்நூல்.

- தினமணி

● பேராசிரியர் மோகனின் ஆய்வுத் திறத்தையும், நடை நலத்தையும், உரை வீச்சையும், இலக்கியம் பற்றிய நேர்திறனையும் அறிதற்குரிய ஆவணமாக இந்த நூல் விளங்குகிறது. அவரது நூல்களைப் பற்றி அறிவதோடு, அவரைப் பற்றியும் அறிந்து கொள்ளுவதற்குரிய கைச்சாத்தாகவும் இந்நூல் திகழ்கிறது.

- புதுகைத் தென்றல்

● பேராசிரியரின் ஒட்டுமொத்தச் செயல்பாடுகளை அறிந்துகொள்ள இந்நூல் பெரிதும் உதவும்.

- தினமலர்

● இன்றைய ஆய்வுப் போக்குகளை நெறிப் படுத்தி வளப்படுத்த இரா.மோகன் பற்றிய பதிவுகளின் தொகுப்பாகவும், பல்வேறு ஆய்வுகளுக்கு முன்னறிமுகமாகவும் திகழும் 'பேராசிரியர் இரா.மோகனின் படைப்புலகம்' என்ற இந்நூல் தமிழ் ஆய்வுலகிற்குத் தேவையான ஒன்றாகத் திகழ்கிறது.

- தமிழ் மாருதம்

௨. இனியவை நாற்பது



● தன்னம்பிக்கை, விழிப்புணர்வு, ஆன்மிகம், வாழ்க்கை அனுபவம், கவிதை, நகைச்சுவை என ஆறு உட்பிரிவுகளில் அமைந்த நாற்பது இனிய கட்டுரைகளின் கூட்டுக் கலவையே இந்நூல்... மொத்தத்தில் கட்டுரைகள் நாற்பதும் இனிக்கின்றன.

- **குமுதம்**

● 6 விதமான கலவைகளை ஒருசேர உள்ளடக்கிய அறுசுவைக் கட்டுரைகளின் தொகுப்பாக இந்த நூல் அமைந்துள்ளது. கருத்துக்களை மேற்கோள் காட்டியும், இடையிடையே சிறுசிறு கதைகள், கவிதை களுடன் இளைய தலைமுறையையும் ஈர்க்கும் வகையில் எழுதப்பட்டு இருப்பதுடன் அவற்றில் இலக்கிய நடையுடன் நூலாசிரி யரின் தமிழ்ப் பற்றும் வீற்றிருப்பதைக் காண முடிகிறது.

- **தினத்தந்தி**

● 'தன்னம்பிக்கை இலக்கிய உலகில் வாசிக்க வேண்டிய சிறப்பான நூல்' என்று கூறும் வகையில் நன்கு உருவாக்கப் பட்டுள்ள ஒரு நூல் இது. கட்டுரை ஒவ்வொன்றும் தடைக்கற்களே இல்லாது படிக்கற்களாய் மேலே நகர்த்திச் செல்லும் நடையமைப் போடு நம்மை வீறு(ர) நடையிடச் செய்கிறது. தன்னம்பிக்கைக்கே தன்னம்பிக்கை உட்ட வேண்டுமென்றாலும் முதலில் வாசிக்க வேண்டிய நூல்களுள் ஒன்றாய் இது படிப்போரின் உள்ளத்தில் பதியும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

- **தமிழ் மாருதம்**

● வாழ்க்கையை வாழ நினைப்பவர்களுக்கு, இந்த நூல் ஒரு கலங்கரை விளக்கம். இதில் உள்ள கட்டுரைகள் சித்தத்தில் தித்திக்கும் தேனாய் இனிப்பன. அந்த அளவுக்கு நடையிலும் கூறியிருக்கும் நயத்திலும் ஆசிரியரின் எழுத்தாண்மையைக் காண முடிகிறது. சின்னச் சின்ன கட்டுரைகளாக இருப்பதுடன், சீரிய கருத்துக்கனவு உள்ளடக்கியும் இருக்கிறது.

- பேராசிரியர் இராம.குருநாதன், தினமலர் 'விமர்சன'த்தில்

3. திறமை தான் நமது செல்வம்

● மற்ற நூல்களில் இருந்து இந்நூல் வேறுபட்டு இருப்பதை மறுப்பதற்கில்லை. நூலாசிரியரின் இலக்கிய அனுபவம், எளிய முறையில் விளக்கும் பாங்கு ஒவ்வொரு கட்டுரையிலும் வெளிப்படுகிறது.

- தினமணி

● சுருங்கக் கூறின் இது ஒரு தன்னம்பிக்கை ஊட்டும் நூல்... முன்னோர் சொல்லைப் பொன்னே போல் போற்றி வாழ்ந்து வருபவர் நூலாசிரியர். அவ்வகையில் வாழ்வில் தாம் பெற்ற அனுபவங்களையும், கற்ற கல்வியின் வழி பெற்ற வாழ்வியல் அனுபவங்களையும் நுணுகி ஆராய்ந்து விளக்கும் முகமாக இந்நூலினைக் கட்டமைத்திருப்பது நூலுக்குத் தனிச்சிறப்பு...

- தமிழ் மாருதம்

● ஒவ்வொரு கட்டுரையிலும் ஒரு செய்தி, ஒரு சுவை என்பதாகப் படிக்கப் படிக்கப் பயனும், பெருமையும் நாம் பெறுவோம், நல்ல நூலென்று இதைப் போற்றலாம்.

- கவிதை உறவு

● நறுக்குத் தெறித்த நடையில், குறுகத் தரித்த குறுங்கட்டுரைகள் ஆழ்ந்த அனுபவக் கனிகளாக உள்ளன... இந்த நூல் பாராட்ட மட்டுமன்று; பரிசாக வழங்குவதற்கும் உரியது.

- புதுகைத் தென்றல்

4. விருந்தும் மருந்தும்

● சங்க இலக்கியங்கள் முதல் தற்கால இலக்கியங்கள் வரையில் படித்துத் துய்த்த அரிய செய்திகளைச் சுவைபட வடித்துத் தருவதில் வல்லவர் பேராசிரியர் முனைவர் மோகன். வாழ்வியல் கருத்துக்களை இலக்கியங் களிலிருந்து பிழிந்து விருந்தாகவும், மருந் தாகவும் இந்நூலில் படைத்துத் தந்துள்ளார்... இலக்கியங்களை எப்படிச் சுவைக்க வேண்டும், அவற்றில் பொதிந்துள்ள காட்சிகளையும் கருத்துக்களையும் எப்படிக் கற்றுணர வேண்டும் என்பதற்கு இந்த நூல் நல்ல வழிகாட்டி.

- ஊற்று

● ஆழமான சிந்தனைகளின் வெளிப் பாடாக உள்ள இந்தக் கட்டுரைத் தொகுப்பில் எல்லாமே வாழ்க்கைக்கும், அதனை வளப் படுத்திக் கொள்வதற்கும் வழி சொல்லும் கட்டுரைகள். இவையனைத்தும் இலக்கியம், சுவை என்னும் தேனில் குழைத்து வழங்கப் பட்டிருப்பது, இதன் கூடுதல் சிறப்பு.

- தினமலர்

● நான்கு பகுதிகளிலும் உள்ள கட்டுரைகள் ஒவ்வொன்றும் தரமானவையாக இருப்பது சிறப்பானது.

- துக்ளக்

● மிகச் சிறந்த முப்பது இலக்கியக் கட்டுரைகள் நான்கு உட்தலைப்புகளில் பகுக்கப்பட்டு தமிழ்ச் சமூகத்திற்குப் படைக்கப்பட்டுள்ளன. இவை விருந்தாகச் சுவையையும், மருந்தாகப் பயனையும் நமக்கு வழங்குகின்றன. படிக்கப் படிக்க சுகமாகவும், சுவையாகவும் உள்ள படைப்புப் புதையல்.

- கவிதை உறவு

5. சங்க இலக்கியச் செவ்வி



● இந்நூலில் உள்ள 30 கட்டுரைகளும் சங்க பாடல்களின் செவ்வியை, பளிங்கு நீரோடை போல் பளிச்சிட்டுக் காட்டுகின்றன... ஒரு சிறு கட்டுரையாயினும் அதற்கான தரவுகளைத் தொகுத்தும் வகுத்தும் சிந்தித்துக் கொண்டு எழுதுகின்றமையால், இது 'மோகன் பாணி' போல்வது என எண்ண வைக்கின்றது. கட்டுரைகளைப் படிக்கும் போது, அதில் ஒரு கட்டுக்கோப்புப் புலனாகிறது. திரு.வி.க., மு.வ., வ.சுப.மா., மூவரிடம் இருந்தும் கற்றுக்கொண்ட திறன் இது.

-மூதறிஞர் தமிழண்ணல் நூலுக்கு எழுதிய அணிந்துரையில்

6. இலக்கிய முற்றம்

● நல்லன எல்லாம் தரும், முப்பது இலக்கியம் மற்றும் சிந்தனை சார்ந்த கட்டுரைகளின் தொகுப்பு இது... சமூக, இலக்கியக் கூட்டங்களில் பேசுபவர்களுக்கு, நல்ல அரிய கருத்துக்களைத் தரும் நூல் இது.

- தினமலர்

7. சங்க இலக்கிய மாண்பு

● சங்க இலக்கியங்கள் கூறும் அரிய கருத்துக்களை, எளிய தமிழ் நடையில் கட்டுரைகளாகத் தந்துள்ளார் நூற்றுக்கும் மேற்பட்ட புத்தகங்கள் எழுதியுள்ள 'புத்தக மகன்' மோகன்... இலக்கியம் படிப்பவர்களுக்கு மட்டுமல்ல, இல்லறம் விரும்புவோருக்கும் உதவும்.

- தினமலர்

● அக மற்றும் புறப்பாடல்களிலும் சில சுவையான காட்சிகளைச் சொல்லி, இலக்கியம் படித்தால் இந்த இன்பமெல்லாம் கிடைக்கும் என்கிற கருத்துக்கு வண்ணச் சுவரொட்டியாக மட்டுமல்ல, வண்ணத் திரையாகவும் காட்சிகளை நம் கண்முன்னே கொணர்ந்து களிப்புறச் செய்கிறார் பேராசிரியர் மோகன்.

- கவிதை உறவு

● தொன்மை வாய்ந்த சங்க இலக்கியம் இன்றைய உள நூல் (Psychology) பார்வையில் எவ்வாறு இயைந்து செல்கிறது என்பதை நூலாசிரியர் பல இடங்களில் நுட்பமாக விளக்குகிறார்... அன்றைய தலைசிறந்த இலக்கியங்களில் இருந்து இன்றைய புகழ் பெற்ற பாடல்கள் வரை, அவற்றில் அவருக்குள்ள பரந்து, விரிந்த, ஆழ்ந்த புலமையைக் காட்டுகிறது.

- மனித நேயம்

● படித்தால் இன்பம் தருவதல்ல சங்க இலக்கியம்; படிக்கப் படிக்க இன்பம் தந்து கொண்டே இருப்பதுதான் சங்க இலக்கியம் என்பதைச் சங்க இலக்கியத்தில் ஆழங் காற்பட்டவரான நூலாசிரியரின் ஒவ்வொரு கட்டுரையும் வெளிப்படுத்துகிறது. படித்து மகிழ வேண்டிய வாழ்வோவியங்கள் - வாழ்வியல் விழுமியங்கள்!

- **தினமணி**

8. செவ்வியல் இலக்கியச் செழுமை

● பல்வேறு ஆய்வரங்குகளில் செந்தமிழின் செவ்வியல் தன்மையை வெளிப்படுத்தும் வகையில் படிக்கப் பெற்ற 12 கட்டுரைகளின் தொகுப்பு நூல். ஆளுமைத் திறனின் இன்றியமையாமையைத் தமிழிலக்கியங்கள் வழிப் புலப்படுத்தியிருப்பது சிறப்பானதாகும்.

- ஊற்று

● சங்க இலக்கியம், திருக்குறள், சிலப்பதிகாரம் ஆகியவற்றில் உள்ள இலக்கியச் செழுமையை ஆசிரியர் நன்கு எடுத்து விளக்கியுள்ளார்.

- தினமலர்

9. மணிமேகலைத் திறன்



- இரட்டைக் காப்பியங்களுள் தனிச்சிறப்பு வாய்ந்த மணிமேகலை பற்றிய பல்வேறு அறிஞர்கள் எழுதிய பதினான்கு அரிய கட்டுரைகளின் தொகுப்பு நூல்.

10. மாணிக்கவாசகர்

- "'மாணிக்கவாசகர்' என்ற நூல் தாங்கள் தியாகராசர் கல்லூரியில் நடந்த புலவர் விழா ஆராய்ச்சிக் கட்டுரைப் போட்டிக்கு 40 ஆண்டுகட்கு முன் எழுதிய கட்டுரையே நூல் வடிவம் பெற்றிருக்கிறது என்பதைப் பார்க்கும் பொழுது வியப்படைந்தேன். 40 ஆண்டுகட்கு முன்பே தங்கள் தமிழ் நடையில் ஈர்ப்பும், கருத்துச் செறிவும் நிறைந்து விளங்குகின்றன... மொத்தத்தில் தங்களுடைய Scholarly Productivity என்னைப் பெரிதும் வியப்பில் ஆழ்த்துகிறது."

- பேராசிரியர் வா.செ.குழந்தைசாமி
நூலாசிரியருக்கு 23.11.2011-இல்
எழுதிய மடலில்

11. கணினி யுகத்திற்குக் கம்பர்



● இது கணினி யுகம். இந்த யுகத்துக்குக் கம்பர் பொருந்தி வருவாரா என்ற ஐயத்தை விலக்கி, எந்த யுகத்துக்கும் கம்பர் பொருந்துவார் என விளக்கியுள்ளார் நூலாசிரியர். கம்பன் பிரியர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கக் கூடிய புதிய வரவு.

- **தினமணி**

● 2010-ஆம் ஆண்டில் பேராசிரியர் இரா.மோகன் நிகழ்த்திய தெய்வத்திரு ஏ.வி.எம். நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவின் நூல் வடிவம். 'காப்பியத்தில் பெரியவர்' எனச் சிறப்பிக்கப் பெறும் கம்பர் இன்றைய கணினி யுகத்திற்கு வழங்கும் செய்திகளை நிரந்தினிது. கூறும் நூல். 2011-ஆம் ஆண்டில் புதுச்சேரி கம்பவாணர் புலவர் அ.அருணகிரி அறக்கட்டளைப் பரிசினைப் பெற்ற நூல் இது.

12. மு.வ. அல்லது முன்னேற்ற வரலாறு



● தமிழ் இலக்கிய உலகில் ஒரு 'சகாப்த'மாகத் திகழும் மு.வ.வை நன்கு தெரிந்தோர்க்கு இச்சிறிய, அரிய நூல் மறக்க முடியாத ஒரு **'மலரும் நினைவு!'** மு.வ.காலத்திற்குப் பின் வந்த இலக்கிய ஆர்வலராம் இளைஞர்க்கு இது ஓர் இனிய தமிழ் **வரலாற்றுப் பதிவு!** மொத்தத்தில் முனைவர் மோகனாரின் இலக்கிய, எழுத்துப் பயணத்தின் இந்த 90-ஆவது 'மைல்கல்' தமிழன்னை மகுடத்தில் **புதியதொரு பொலிவு!**

- மனித நேயம்

● பயனுள்ள குறிப்பு நூலொன்றைப் படித்த உணர்வைப் பெரிதும் தந்துள்ள படைப்பு என்று இந்நூலைப் பாராட்டி மகிழலாம். மு.வ.வின் புகழ் மகுடத்தில் பதிக்கப் பட்டிருக்கிற மோகனின் மற்றுமோர் மரகதக் கல் இது.

- கவிதை உறவு

● இந்நூலில், மு.வ.வின் பலதரப்பட்ட படைப்பு களையும், அவரது வாழ்வு, வாக்கு முதலிய வற்றையும் நிறை கருத்துக்களோடு தமிழ் வாசகர்களுக்கு வழங்கியிருக்கிறார் நூலாசிரியர் இரா.மோகன்.

- ஓம் சக்தி

● இந்நூல், எல்லோரும் படித்துப் பயன்பெறத் தக்க விதத்தில் அமைந்துள்ளது.

- தினத்தந்தி

13.மு.வ. கருவூலம்

● நாள் ஒரு சிந்தனையாக ஓர் ஆண்டிற்கான பேராசிரியர் மு.வரதராசனாரின் 365 சிந்தனைகள் பதினேழு உட்தலைப்புகளில் தொகுக்கப் பெற்றுள்ள நூல் இது. மேலும், இது பேராசிரியர் மு.வ.வை இன்றைய இளைய தலைமுறையினருக்குக் கொண்டு செல்வதற்கும், மு.வ.வின் நூல்களை இலக்கிய ஆர்வலர்கள் மறுவாசிப்புச் செய்வதற்கும் தூண்டும் நூலும் கூட.

14. கவிதைக் களஞ்சியம்

● இந் நூலாசிரியரின் நூறாவது நூல் இது... இருபது கவிஞர்களின் கவிதைப் படைப்புகளில் உள்ள முத்தான கருத்து வரிகளைக் கொண்டு தனித்தனியே ஆய்வு செய்து, அக்கவிஞர்களின் படைப்பாளுமையை நன்கு வெளிப்படுத்தியுள்ளார் நூலாசிரியர்.

- ஓம் சக்தி

● தமிழ்க் கவிதை உலகம் பற்றிய முக்கியமான நூல் இது. கவிதையில் ஆர்வம் உள்ளவர்கள் அவசியம் படிக்க வேண்டிய நூல்.

- தினத்தந்தி

● அற்புதக் கவிஞர்கள் 20 பேர்களின் படைப்புகளை ஆய்வு செய்து தேன் சொட்டும் கட்டுரைகளாக்கித் தந்திருக்கும் பாங்கு வியக்க வைக்கிறது... நற்றமிழ் உலகுக்குக் 'கவிதைக் களஞ்சியம்' மிகமிக அவசியமான ஒன்று.

- பொதிகை மின்னல்

● நல்ல கவிதைகள், நல்ல கவிஞர்கள் ஒரு நல்ல தமிழறிஞரின் நலமான சிந்தனை களோடும், வளமான நடையோடும் வலம் வருகிற தொகுதியாகக் 'கவிதைக் களஞ்சியத்'தைப் பார்க்கிறோம். படித்துப் பயன்பெறப் பாகான நூல்.

- கவிதை உறவு

- தெளிந்த கருத்து, சுருக்கமான நடை, உறுதிபடத் தெரிவிக்கும் திறம் எனத் தமக்கே உரிய பாணியில் நூலாசிரியர் விளக்குவது படிப்பவர்களுக்குக் கவிதையின் ஆழத்தை அறிய வைக்க முயலும். ஆக, பேராசிரியர் இரா.மோகனின் கவிதைக் களஞ்சியம் ஒரு கருத்துக் களஞ்சியமே என்பதில் வியப்பில்லை.

-தமிழ் மாருதம்

15. கவிதைச் சாரல்

● இருபது கவிஞர்களின் பல கவிதைகளைத் தேடிப் பிடித்துத் தம் விமர்சனம் எனும் நாரில் கோர்த்து வாழ்த்தோடு கூடிய ஊக்கம் எனும் நீர் தெளித்துத் தாமும் வியந்து நம்மையும் வியக்க வைக்கிறார் மோகன்... மொத்தத்தில் ஒரு மாறுபட்ட வாசிப்பு அனுபவம் கிடைக்கிறது. கல் மனங்களில் கூட கவிதைப் பூக்களைப் பூக்க வைக்கிற முயற்சியாக இது தெரிகிறது.

- எழுத்தாளர் இந்திரா செளந்தர்ராஜன் நூலுக்கு எழுதிய அணிந்துரையில்

● பாரதியார் துவங்கி பட்டுக்கோட்டை வரை, ஞானக்கூத்தன் முதல் இயக்குநர் லிங்குசாமி வரை, நூற்றாண்டு காலக் கணக்கில், 20 முத்தான கவிஞர்களைத் தேர்வு செய்து, அவர்களின் கவிதை வரிகளைத் திறனாய்வு செய்து, 20 சத்தான கட்டுரைகளை வடித்துள்ளார் எழுத்தாளர், பேச்சாளர், பேராசிரியர் இரா.மோகன்... கவிஞர்களை, அவர்களின் கவிதைகளை மேற்கோள் காட்டி எழுதப்பட்டுள்ள கட்டுரைகளை, சில பக்கங்களில் படித்தாலும், கவிஞர்களின் முழுத் தொகுப்பையும் படித்து விட்ட திருப்தி ஏற்படுகிறது... மேடைப் பேச்சாளர்கள், ஆய்வு மாணவர்களுக்கு உகந்த நூல்.

- தினமலர்

● சிறந்த கவிஞர்களின் படைப்புத் திறன் குறித்த சுவையான கட்டுரைகள்

- பொதிகை மின்னல்

● உலகறிந்த மிகமிகப் பிரபலமான கவிஞர்களிடையே, திறமையாளர்களா யிருப்பினும், அதிகம் பேசப்படாத சில கவிஞர்களின் கவித்துவத்தைக் கவினுற வெளிப்படுத்தி வாசகர்களையும் 'கவிதைச் சாரலில்' நனைத்தெடுத்திருக்கிறார், "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" எனும் 'பெரிய இலக்கிய மனதுக்காரர்' பேராசிரியர் இரா.மோகன்.

- **மனித நேயம்**

16. காந்தீயக் கவிஞருடன் ஒரு கைகுலுக்கல்

● கவியரசர் பாரதியாரின் அடிச்சுவட்டில் முனைப்புடன் இயங்கி இலக்கியம், தேசியம் என்னும் இரண்டையும் ஒன்று சேர்த்துப் பெருமை சேர்த்தவர்களுள் முதன்மையானவர் நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கனார், இன்றைய தலைமுறையினருக்கு அவரை அறிமுகப்படுத்தவும், அவரின் நூல்களைப் படிக்கத் தூண்டவும் உதவும் இந்நூல் 'இலக்கியச் சிந்தனை'யின் ஆதரவுடன் வெளிவந்துள்ளது.

17. குலோத்துங்கம் பண்ணையில் கொய்த கதிர்கள்



● குலோத்துங்கன் படைப்புகளில் கொய்த கதிர்களை, தமிழாய்வில் தனிப்பெரும் தகுதி படைத்த பேராசிரியர், எதையும் நுட்பமாகப் படித்துத் தோய்ந்து, உண்மையையே உரைக்க வல்ல, முனைவர் பேராசிரியர் இரா.மோகன் அவர்கள் தொகுத்தளித்துள்ளார். இந்நூல் தமிழ் நூல்களின் வரிசையில், புதியதொரு வழிகாட்டும் பொன்னூலாகத் திகழ்கிறது.

- தமிழ்ப் பணி

● கவிஞர் குலோத்துங்கன் அவர்களின் கவிதைப் பண்ணையில் கொய்த கதிர்களை நன்கு சமைத்து வாழ்வியலுக்குத் தேவையான நல்உணவாகப் படிப்பவர் பயன்பெறும் வண்ணம் வெளிவந்துள்ள இந்த நூல் பேராசிரியர் மோகன் அவர்களுக்கு மணி மகுடத்துப் பதித்த முத்தாகத் திகழும் என்பது திண்ணம்.

- புதுகைத் தென்றல்

● கவிஞரின் எல்லா நூல்களையும் படித்த நிறைவு மட்டுமல்ல; எல்லா நூல்களையும் படிக்க வேண்டும் என்கிற விழைவையும் தூண்டுகிற நூல்.

- கவிதை உறவு

● புதிய முயற்சி. சிந்திக்க விரும்புவோர் படிக்க வேண்டிய சிந்தனைக் களஞ்சியம்.

- தினத்தந்தி

● இந்நூல் நாளும் நமக்கொரு சேதி தரும் நாட்காட்டியைப் போல் ஆண்டு முழுவதற்குமான வா.செ.கு.வின் சிந்தனைகளை மாதம், தேதி என்ற குறிப்புகளுடன் 365 சிந்தனைத் துளிகளைப் புதிய கட்டமைப் போடு தாங்கி நிற்கிறது. இவை யாவும் கருத்துள்ள கவிதை வரிகள், ஆய்வின் ஆழ் நிலையில் எழுந்த அரிய சிந்தனைகள் என்று சொல்லத்தக்கவையாக அமைந்துள்ளன.

- தமிழ் மாருதம்

● பேராசிரியர் குலோத்துங்கன் அவர்களின் படைப்புகளைப் 'பண்ணையாகவும்' படைப்புகள் வெளிப்படுத்திய சிந்தனைக் கருத்துகளைக் 'கதிர்களாகவும்' உருவகித்து, நாளும் ஒரு வாழ்வியல் சிந்தனையாக நடமாட விட்டிருப்பதே இந்நூல். 'குலோத்துங்கம் பண்ணையில் கொய்த கதிர்கள்' என்ற இந்நூல் பேராசிரியர் வா.செ.கு. அவர்களின் நுண்மாண் நுழைபுலத்தையும் தொகுப்பாசிரியர் முனைவர் இரா.மோகன் அவர்களின் இலக்கிய நுகர்வின் தனித்தன்மையையும் விளக்குகின்றது.

- தமிழாலயம்

18. இலக்கிய மாலை



● இந்நூலில் 36 நூல்களுக்கு அவர் (பேராசிரியர் இரா.மோகன்) எழுதியுள்ள அணிந்துரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. இந்த ஒரு நூலைப் படித்தவுடன் அவரது அணிந்துரைப் பேறு பெற்ற 36 நூல்களையும் படித்த நிறைவு வந்து விடுகிறது. முதற் காரணம் திரு.மோகன் அவர்கள் அந் நூல்களை வாசித்த பிறகே வழங்கியிருப் பதுதான். தொடர்ந்து நூலாசிரியர்களின் கருத்திற்கு இணைந்து வரும் பிற செய்தி களையும் சேர்த்துப் பாராட்டியிருப்பது நமக்கும் ஒரு உற்சாகத்தை வழங்குகிறது.

- கவிதை உறவு

● பிரபலமான படைப்பாளிகளின் நூல் களுக்கு அளித்துள்ள அணிந்துரைகளோடு, இன்று வளர்ந்து வரும் இளம் தலைமுறைப் படைப்பாளர்களின் நூல்களுக்கும் அணிந் துரை நல்கி அவர்களைப் புதிய வெளிச்சத்திற் குள் கொண்டு வந்திருப்பதைப் பாராட்ட வேண்டும்... நூலாசிரியரின் தனித்தன்மை யையும் பரந்துபட்ட அறிவையும் ஒருங்கே காட்டும் கலை இலக்கியக் கூடமாகவே இவ்வணிந்துரை நூல் திகழ்கிறது.

- புதுகைத் தென்றல்

19. அன்புள்ள நிலாவுக்கு...

● தமிழ்த் திரையுலகம் முதல் தனிமனிதர்கள் வரை அனைவரும் ஆதரித்த கடிதம் எழுதும் முறை, தற்போது அருகி விட்ட சூழ்நிலையில் வெளிவந்திருக்கும் முக்கியமான கடித இலக்கியப் பதிவு இந்நூல். இரா.மோகன் 1973 முதல் 1976 வரை தன்னுடைய காதலிக்கு (நிர்மலா) எழுதிய கடிதங்களின் தொகுப்பே இந்நூல். கடிதங்களில் அன்பும், அறிவும், பண்பும், பல அறிஞர்களின் நல்ல கருத்துகளும், நாகரிகமும் பெருகி ஓடுவதைக் காண முடிகிறது.

- தினமணி

● மொத்தக் கடிதங்களையும் படித்து முடித்த நிலையில், ஒரு திருக்குறள் உரை நூலைப் படித்தது போலவும் இருக்கிறது; சில தமிழ்க் காப்பியச் செய்திகளை அறிந்தது போலவும் இருக்கிறது. கூட்டிக் கழித்துப் பார்த்தால் இது மோகன் - நிர்மலா காதல் கடிதங்கள் இல்லை. இதைத் தமிழ் இலக்கியக் காதல் கடிதங்கள் என்பதே சரி.

- எழுத்தாளர் இந்திரா சௌந்தர்ராஜன்
'தினமலர்' விமர்சனத்தில்

20. கவிதைச் சுடர்



● மூத்த கவிஞர் ஈரோடு தமிழன்பன் தொடங்கி இளங்கவிஞர் கு.அ.தமிழ்மொழி வரையிலான 23 கவிஞர்களோடு, மேற்கோளுக்காகப் பயன்படுத்திய கவிஞர்களையும் சேர்த்து மிக அடர்த்தியாகவும் ஆழமாகவும் வந்திருக்கிறது இத்தொகுப்பு. இன்றைய ஹைக்கூ உலகிற்கு மிகச் சரியானதொரு தருணத்தில் வந்துள்ளது. ஹைக்கூவை எழுத நினைப்பவர்களுக்கு 'கவிதைச் சுடர்' ஓர் அமுதசுரபி... மொத்தத்தில் ஹைக்கூ அணிவகுப்பு வெகு சிறப்பு.

- **துளிப்பா கிழமையிதழில் (05.01.2014)**
கன்னிக்கோவில் இராஜா

● 23 ஹைகூ கவிஞர்கள் பற்றிய ஆழ்ந்த திறனாய்வுக் கட்டுரைகள்.

- **பொதிகை மின்னல்**

21. சிற்பியின் படைப்புலகம்



● இலக்கிய இணையர் இருவரும் சிற்பியின் படைப்புலகத்தில் மூழ்கி அரிய முத்துக்களை அள்ளித் தந்திருக்கிறார்கள்... சிற்பியின் படைப்புலகத்தைச் சுவையாகப் படிக்கத் தூண்டியிருக்கிறார்கள். ஒரே மூச்சில் படித்து விடக்கூடிய எளிய, இனிய, தெளிந்த நடை நூலாசிரியர்களுக்கு வாய்த்திருப்பது பாராட்டத்தக்கது... இதில் அமைந்துள்ள பத்துக் கட்டுரைகளும் பத்துப்பாட்டைப் போலச் செம்மாந்து நிற்பவை.

- புதுகைத் தென்றல்

● பேராசிரியர் சிற்பி பாலசுப்பிரமணியத்தின் பன்முகப் படைப்புக்களைப் படம்பிடித்துக் காட்டும் பத்து முத்தான கட்டுரைகளே இந்தப் புத்தகம்... சிற்பியின் பல புத்தகங்களைப் படித்த உணர்வு, இந்த ஒரு புத்தகத்தைப் படிக்கும் போது ஏற்படுகிறது.

- தினமலர்

● ஒவ்வொரு கட்டுரையும் வாசகனின் மனதை மீட்டிச் சிற்பியின் படைப்புலகில் சஞ்சரிக்க வைக்கிறது. தெளிவான ஆய்வுப் பார்வை. அனைவரும் படித்து மகிழ வேண்டிய நூல் இது.

- பொதிகை மின்னல்

● இந்நூலைப் படிக்கும்போது சிற்பியின் நூல்களைப் படிக்க வேண்டும் என்கிற உந்துதலோடு அவருடன் கைகுலுக்கி மகிழவும் தோன்றுகிறது. அற்புதமான தொகுப்பு இந்நூல்.

- கவிதை உறவு

22. மகிழ்ச்சி மந்திரம்

● படித்தலில் கிடைக்கிற இன்பம் படைப்பில் இருக்கிறது. அத்தகு படைப்பு களைத் தருகிறவர் பேராசிரியர் இரா.மோகன் அவர்கள். இந்நூலும் அவ்வரிசையைச் சேர்ந்ததாகும்... படிக்கப் படிக்க இன்பம் தரும் புத்தகம். அருமை.

- கவிதை உறவு

23. நூலின்றி அமையாது உலகு



● பேராசிரியர் இரா.மோகன் அவர்கள் இந்நூலில் வாசித்தலின் சிறப்பை புத்தகங்கள் குறித்த செய்திகளோடு திரட்டித் தந்துள்ளார்... எல்லோருடைய வீட்டிலும் இந்நூல் இருப்பது ஒரு நூலகம் இருப்பதைப் போன்றது. பேராசிரியர் மோகன் பாராட்டிற்குரிய பணியொன்றை இந்நூல் வாயிலாய்ச் செய்துள்ளார்.

- கவிதை உறவு

● மீண்டும், மீண்டும் படிக்க வேண்டிய நூல். வாசிக்காத நாட்களெல்லாம் சுவாசிக்காத நாட்களே என்பது சாலப் பொருந்தும்.

- தமிழ் இலெமுரியா

24. தி.க.சி. எனும் ஆளுமை



● தி.க.சி.யின் ஆளுமையை நூலாகப் பேராசிரியர் இரா.மோகனும், புதுகை மு.தருமராசனும் தொகுத்துள்ளமை அழியாத ஆவணமாக விளங்குகிறது... தி.க.சி. எனும் ஆளுமை என்ற இந்த நூலும், அவரது புகழுடைய பெருமை மிகு வாழ்க்கையைக் காலங்காலமாகப் போற்றக்கூடியதாக இருக்கும்.

- புதுகைத் தென்றல்

● அரும்பாடுபட்டு ஒரு இலக்கியவாதியை இலக்கிய நூலாக்கித் தந்திருக்கும் இரா.மோகன்-மு.தருமராசன் இரட்டையர்களுக்குக் காலம் சிறப்பைத் தரும்.

- பொதிகை மின்னல்

பேராசிரியர் இரா.மோகனின் நூல்கள்

I. புதுதில்லி சாகித்திய அகாதெமி வெளியீடுகள்

இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசை

1. கு.ப.ராஜகோபாலன் (1994)
2. வ.சுப.மாணிக்கம் (1999,2007)
3. கல்கி (2000, 2006)
4. முடியரசன் (2006)

தொகுப்பு

5. தமிழ்க் கட்டுரைக் களஞ்சியம் (2009)
6. தமிழ் ஹைகூ ஆயிரம் (2012)

II. சென்னை மணிவாசகர் பதிப்பக வெளியீடுகள்

ஆராய்ச்சி

7. டாக்டர் மு.வ.வின் நாவல்கள் (1972,1981,1988)
8. அறிஞர் மு.வ. (1975, 1984)
9. சிறுகதைச் சிற்பி கு.ப.ரா. (1978, 2002)
10. புனைகதைத் திறன் (1980, 2003)
11. உரை மரபுகள் (இணையாசிரியர்) (1985, 2003)
12. இலக்கிய வளம் (1989, 1990, 2009)
13. திரு.வி.க. அல்லது வாழ்க்கை விளக்கம் (1990)
14. ஒப்பியல் சிந்தனைகள் (1990)
15. இலக்கியச் சோலை (1994)
16. இலக்கிய அலசல் (1999)
17. இலக்கியச் செவ்வி (2006)
18. இலக்கியச் செல்வம் (2006)
19. இலக்கிய வித்தகர்கள் (2006)
20. புதுக்கவிதைத் திறன் (2006)
21. பன்முகப் பார்வையில் பாரதி (2006)
22. கவிதைக் குயில்கள் (2006)
23. பொதிகை: மலர் 1 (இணைப்பதிப்பாசிரியர்)(1979)

24. பாரதி இயல் (இ.ப.) (1982)
25. புதுக்கவிதை அணிவகுப்பு (1985, 1993)
26. நாவல் வளர்ச்சி (1989)
27. தமிழ் உலா: 2 தொகுதிகள் (இ.ப.) (1993)
28. சிற்பியின் கட்டுரைகள் (1996)
29. கல்கி நூறு (1998)
30. கல்கி கதைகள்: 2 தொகுதிகள் (1999, 2000, 2006)
31. கல்கி கட்டுரைகள்: 3 தொகுதிகள் (1999)
32. செந்தமிழ்த் தேனீ சோமலெ (2002)
33. நாள் ஒரு சிந்தனை (2003, 2007)
34. நகைச்சுவைக் களஞ்சியம் (2004)
35. மு.வ. களஞ்சியம் (2011)

தொகுப்பு

36. மகிழ்ந்ததும் நெகிழ்ந்ததும் (1996)
37. கனவை நனவாக்கும் கலாம் (2003)
38. இலக்கியக் கோலங்கள் (2005)

III. சென்னை வானதி பதிப்பக வெளியீடுகள்

ஆராய்ச்சி

39. காந்தீயக் கவிஞருடன் ஒரு கை குலுக்கல் (1996)
40. கணினி யுகத்திற்குக் கம்பர் (2010)
41. சங்க இலக்கியச் செவ்வி (2010)
42. விருந்தும் மருந்தும் (2011)
43. செவ்வியல் இலக்கியச் செழுமை (2011)
44. மாணிக்கவாசகர் (2011)
45. இலக்கிய முற்றம் (2012)
46. மு.வ. அல்லது முன்னேற்ற வரலாறு (2012)
47. இனியவை நாற்பது (2012)
48. திறமைதான் நமது செல்வம் (2013)
49. இலக்கிய மாலை (2013)
50. கவிதைக் களஞ்சியம் (2013)
51. சங்க இலக்கிய மாண்பு (2013)

52. கவிதைச் சாரல் (2013)
53. கவிதைச் சுடர் (2013)
54. சிற்பியின் படைப்புலகம் (2014)
(இணையாசிரியர்: முனைவர் நிர்மலா மோகன்)
55. மகிழ்ச்சி மந்திரம் (2014)
56. தெய்வத் தமிழ் (2014)

தொகுப்பு

57. மு.வ. கருவூலம் (2012)
58. குலோத்துங்கம் பண்ணையில் கொய்த கதிர்கள் (2012)
59. மணிமேகலைத் திறன் (2012)
60. நூலின்றி அமையாது உலகு (2014)
61. தி.க.சி.எனும் ஆளுமை (2014)

கடித இலக்கியம்

62. அன்புள்ள நிலாவுக்கு (2010)
(பதிப்பாசிரியர்: நிர்மலா மோகன்)

IV. மதுரை மீனாட்சி புத்தக நிலைய வெளியீடுகள்

ஆராய்ச்சி

63. இலக்கிய விருந்து (1998)
64. இலக்கிய வானம் (2000)
65. இலக்கியப் பேழை (2001)
66. இலக்கியச் சிந்தனை (2004, 2009)

தொகுப்பு

67. புதுமைப்பித்தன் முத்திரைக் கதைகள் (2003)
68. கு.ப.ரா. முத்திரைக் கதைகள் (2003)

V. சென்னை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் மற்றும் தாமரை பப்ளிகேஷன்ஸ் (பி) லிமிடெட் வெளியீடுகள்

உரை

69. பத்துப்பாட்டு உரை (1-5) (2004)

ஆராய்ச்சி

70. இலக்கியப் பரல்கள் (2008, 2010, 2011)

தன்முன்னேற்றம்

71. நகைச்சுவை நாயகர்கள் (2009)
72. இன்பமே எந்நாளும் (2000, 2002, 2009, 2012)
73. விரல்கள் பத்தும் மூலதனம் (2006; 2009)
74. விழிப்புணர்வுச் சிந்தனைகள் (2010)

தொகுப்பு

75. இறையன்பு களஞ்சியம் (2010)

VI. சென்னை ஓரியன்ட் லாங்மேன் லிமிடெட் வெளியீடு

76. இலக்கியச் சுடர் (1992, 1996)

VII. சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு

77. வா.செ.கு. என்ற ஆளுமையாளர் (2010)

VIII. மதுரை ஏரகம் மற்றும் சோலை நூலக வெளியீடுகள்

78. ஜெயகாந்தன் சிந்தனைகள் (1978)
79. ஆய்வியல் வழிகாட்டி (இணையாசிரியர்) (1979)
80. புகழ் பெற்ற சங்க இலக்கியப் பொன்மொழிகள் (இணைப்பதிப்பாசிரியர்) (1980)
81. துணுக்குத் திரட்டு (1980)
82. சின்னச் சின்ன இழை (இணை.) (1980)

IX. மதுரை சர்வோதய இலக்கியப் பண்ணை வெளியீடுகள்

83. டாக்டர் மு.வ. கலைக்களஞ்சியம் (1974)
84. டாக்டர் மு.வ.வின் மணிமொழிகள் (1974)
85. டாக்டர் மு.வ.வின் கடிதங்கள் (இ.ப.) (1977)
86. துணுக்கு இலக்கியம் (1979)

X. தஞ்சாவூர் அகரம் வெளியீடு

87. முன்னுரை நாற்பது (2009)

XI. ஞான பரம்பரை வெளியீடு

88. குமரகுருபரர் (2006)

XII. சென்னை விழிகள் பதிப்பக வெளியீடு

89. கவிதை அலைவரிசை: 2 (2012)

XIII. இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற ஆய்வுக் கோவைத் தொகுதிகள்

90. ஆய்வுக் கோவை: 4 தொகுதிகள் (2006)
91. ஆய்வுக் கோவை: 5 தொகுதிகள் (2007)
92. ஆய்வுக் கோவை: 4 தொகுதிகள் (2008)
93. ஆய்வுக் கோவை: 4 தொகுதிகள் (2009)
94. ஆய்வுக் கோவை: 4 தொகுதிகள் (2010)
95. ஆய்வுக் கோவை: 4 தொகுதிகள் (2011)
96. ஆய்வுக் கோவை: 4 தொகுதிகள் (2012)
97. ஆய்வுக் கோவை: 4 தொகுதிகள் (2013)
98. அயலகத் தமிழ் இலக்கியம் (2013)
99. ஆய்வுக் கோவை: 4 தொகுதிகள் (2014)

XIV. மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியற்புலம் மற்றும் பதிப்புத்துறை வெளியீடுகள்

100. பெண்ணியம் (இணைப்பதிப்பாசிரியர்) (1994)
101. தமிழியல்: ஆய்வுக் கட்டுரைகள்-1(இ.ப.) (2003)
102. சிறுவர் இலக்கியம் (இ.ப.) (2003)
103. சீக்கியமும் தமிழ்ப் பண்பாடும் (இ.ப.) (2007)

XV. மதுரை பார்த்திபன் பதிப்பக வெளியீடு

104. இலக்கிய நயம் (1998)

XVI. மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆய்வாளர் மன்ற வெளியீடு

105. பரல்கள்: தொகுதி 2 (இ.ப.) (1976)

XVII. மதுரை ஞாலத் தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மன்ற வெளியீடு

106. பிற துறைத் தமிழ் ஆய்வு (இ.ப.) (2005)

XVIII. மதுரை அறிவகம் மற்றும் செந்தில் புத்தக நிலைய வெளியீடுகள்

107. இலக்கியச் சால்பு (சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத்தின் நிதியுதவியுடன் வெளியிடப் பெற்ற நூல்) (1997)
108. படித்ததும் பிடித்ததும் (தொகுப்பாசிரியர்) (1994)
109. சிரித்ததும் சிலிர்த்ததும் (தொ.ஆ.) (1998)
110. கவிதை அலைவரிசை: 1 (2007)

XIX. சங்க இலக்கிய ஆய்வு மைய வெளியீடு

111. ஐங்குறுநூறு ஆய்வுக் கோவை: 3 தொகுதிகள் (2009)

XX. மேலைச்சிவபுரி, சன்மார்க்க சபை பண்டிதமணி நூற்றாண்டு விழா வெளியீடு

112. பண்டிதமணியின் நடை நயம் (1983)

XXI. மதுரை முத்துப் பதிப்பக வெளியீடு

113. சங்க இலக்கியத் தொகை (பதிப்பாசிரியர்) (2005)

XXII.சிவகங்கை அன்னம் (பி) லிட். வெளியீடு

114. அண்ணல் தமிழ் (இ.ப.) (1990)
115. பண்பார் பேராசிரியர் பரந்தாமனார் (தொகுப்பாசிரியர்) (2006)

XXIII. உலகத் திருக்குறள் பேரவை வெளியீடு

116. திருக்குறள் ஆய்வுக் களஞ்சியம் (இ .ப.) (2005)

ஆசிரியர் குறிப்பு



'மு.வ.வின் செல்லப் பிள்ளை' எனத் தமிழ் கூறு நல்லுலகத்தில் அழைக்கப் பெறும் இரா.மோகன் மதுரையில் 10.12.1949-ஆம் நாளன்று பிறந்தார். தந்தையின் பெயர் இராமமூர்த்தி. தாய் - இராசலெட்சுமி. காரைக்குடி அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் உயர்நிலைப் பள்ளியில் கல்வி பயின்ற மோகன், கவியரசு **முடியரச**னின் மாணவர்.

இவர் மதுரை தீந்தமிழ்த் தியாகராசர் கல்லூரியில் பயின்று 1972-இல் முதுகலைப் பட்டம் பெற்றார்; மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் **'கு.ப.ராஜகோபாலன் சிறுகதைகள்'** என்னும் பொருளில் ஆராய்ந்து 1976-ஆம் ஆண்டில் முனைவர் பட்டம் பெற்றார்.

மதுரை காமராசர் பல்கலைக்கழக அஞ்சல்வழிக் கல்வித் துறையில் 01.11.1976-இல் விரிவுரையாளராகப் பணியில் சேர்ந்த முனைவர் மோகன், 1987-இல் தமிழியற் புலத்தில் விரிவுரை யாளராகச் சேர்ந்தார்; இணைப்பேராசிரியர், பேராசிரியர், ஒப்பிலக்கியத் துறைத் தலைவர், சிறப்பு நிதியுதவித் திட்ட ஒருங்கிணைப்பாளர், புல ஒருங்கிணைப்பாளர், மூத்த பேராசிரியர் எனப் பல்வேறு பொறுப்புக்களில் 34 ஆண்டுக் காலம் தமிழியற் புலத்தில் பணியாற்றினார். மூன்று ஆண்டுக் காலம் பல்கலைக் கழக **ஆட்சிக் குழு உறுப்பினரா**கவும் (Syndicate Member) இவர் பணியாற்றியுள்ளார்.

'டாக்டர் மு.வ.வின் நாவல்கள்' என்பது இரா.மோகனின் முதல் நூல்; 1972-ஆம் ஆண்டில் வெளிவந்தது. ஆய்வும் பதிப்பும் தொகுப்புமாக இதுவரை இவரது 116 நூல்கள் வெளிவந்துள்ளன. இவரது **'இன்பமே எந்நாளும்'** என்ற நூல் பாரத மணித்திரு நாட்டின் முன்னைக் குடியரசுத் தலைவர் டாக்டர் **ஆ.ப.ஜெ.அப்துல் கலாமின்** பாராட்டினைப் பெற்றதாகும். இவரது நூல்கள் பல பல்வேறு பல்கலைக்கழகங்களிலும் தன்னாட்சிக் கல்லூரிகளிலும் பாட நூல்களாகப் (Text Books) பரிந்துரைக்கப் பெற்றுள்ளன.

'இலக்கியச் செல்வர்' **குமரி அனந்தன்** உட்படப் பேராசிரியர் மோகனின் மேற்பார்வையில் இதுவரை 30 பேர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர்; எண்மர் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

பேராசிரியர் மோகன் தேமதுரத் தமிழோசையைப் பரப்புவதற்காகச் **சிங்கப்பூர்** (5 முறை), **மலேசியா** (3 முறை), **அமெரிக்கா** (3 முறை), **இலங்கை, ஷார்ஜா, ஆஸ்திரேலியா** ஆகிய அயல்நாடுகளுக்குச் சென்று வந்துள்ளார். இவர் பல்வேறு வானொலிகளிலும் தொலைக்காட்சிகளிலும் பொதுமேடைகளிலும் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட உரை நிகழ்ச்சிகளை வழங்கியுள்ளார்.

பேராசிரியர் மோகன் புதுதில்லி **சாகித்திய அகாதெமியின் பொதுக்குழுவிலும் ஆலோசனைக் குழுவிலும் உறுப்பினராக இருந்துள்ளார். இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத் தலைவராகவும்** அவர் இருந்து வருகிறார்.

சாகித்திய அகாதெமியின் **'இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசை'**யில் பேராசிரியர் மோகன், **கு.ப.ரா., கல்கி, வ.சுப. மாணிக்கம், முடியரசன்** ஆகியோர் குறித்து நூல்கள் எழுதியுள்ளார். **'தமிழ்க் கட்டுரைக் களஞ்சியம்', 'தமிழ் ஹைகூ ஆயிரம்', 'நாவல் வளர்ச்சி', 'புதுக்கவிதை அணிவகுப்பு', 'நகைச்சுவைக் களஞ்சியம்'** ஆகியன இவர் வெளியிட்டுள்ள சிறந்த **தொகை நூல்கள்** ஆகும்.

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையும், தமிழ்நாடு அறக்கட்டளையும் இணைந்து பேராசிரியர் மோகனுக்குத் **'தமிழ்ச் சுடர்'** என்ற விருதினை வழங்கிச் சிறப்பித்துள்ளன. புதுச்சேரிக் கம்பன் கழகம் வழங்கும் சிறந்த ஆய்வு நூலுக்கான பரிசினைப் பேராசிரியரின் **'கணினி யுகத்திற்குக் கம்பர்'** என்னும் நூல் பெற்றுள்ளது.

2010-இல் வெளிவந்த **'இலக்கிய இணையர் பேராசிரியர் இரா.மோகன்-முனைவர் நிர்மலா மோகன் மணி விழா மல'**ரும் **'பேராசிரியர் இரா.மோகனின் படைப்புலகம்'** என்னும் தொகை நூலும் (2011) தமிழியல் வளர்ச்சிக்குப் பேராசிரியர் மோகனின் பங்களிப்பினைப் பறைசாற்றுவனவாகும்.

மோகன் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் **தகைசால் பேராசிரியராக (UGC - Emeritus Fellow)** மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியற்புலத்தில் இரண்டு ஆண்டுகள் (04.1.2011-03.01.2013) பணியாற்றியுள்ளார்.

தமிழக அரசின் முத்தமிழ்க் காவலர் **கி.ஆ.பெ.விசுவநாதம் விருது** (2011) பெற்றவர் பேராசிரியர் இரா.மோகன் என்பது குறிப்பிடத்தக்கது.

தகைசால் பேராசிரியர் இரா.மோகன்

'மு.வ.வின் செல்லப் பிள்ளை' எனத் தமிழ் கூறு நல்லுலகத்தில் அழைக்கப்பெறும் **இரா.மோகன்**, 10.12.1949-இல் மதுரையில் பிறந்தவர். பெற்றோர் : இராமமூர்த்தி - இராசலெட்சுமி. பள்ளிக் கல்வியைக் காரைக்குடி மீனாட்சி சுந்தரேசுவரர் உயர்நிலைப் பள்ளியிலும், கல்லூரிக் கல்வியை மதுரை தியாகராசர் கல்லூரியிலும் பெற்றார். மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் 'கு.ப.ராஜகோபாலன் சிறுகதைகள்' என்னும் தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் (1976) பெற்றார்.

01.11.1976-இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் சேர்ந்த **மோகன்** விரிவுரையாளர், இணைப்பேராசிரியர், பேராசிரியர், திட்ட ஒருங்கிணைப்பாளர், ஒப்பிலக்கியத் துறைத் தலைவர், புல ஒருங்கிணைப்பாளர், மூத்த பேராசிரியர், ஆட்சிக் குழு உறுப்பினர் எனப் பல்வேறு பொறுப்புகளில் 34 ஆண்டுக் காலம் பணியாற்றியுள்ளார். இவர்தம் நெறிகாட்டுதலில் 30 பேர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர்.

பேராசிரியர் **மோகன்** ஆய்வும், பதிப்பும், தொகுப்புமாக இதுவரை 115 நூல்களை வெளியிட்டுள்ளார். இவரது நூல்கள் பல்வேறு பல்கலைக்கழகங்களிலும், தன்னாட்சிக் கல்லூரிகளிலும் பாட நூல்களாகப் பரிந்துரைக்கப் பெற்றுள்ளன.

பேராசிரியர் **மோகன்** பாரத மாநில வங்கி, புதுச்சேரி கம்பன் கழகம் ஆகியன வழங்கும் சிறந்த நூலுக்கான பரிசு என்றாற் போல் தம் எழுத்து மற்றும் பேச்சுப் பணிகளுக்காகப் பற்பல பரிசுகளும், விருதுகளும் பெற்றுள்ளார். பல்வேறு வானொலி, தொலைக்காட்சிகளில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பட்டிமன்ற நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார்.

இலக்கிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காகப் பேராசிரியர் **மோகன்** சிங்கப்பூர் (6 முறை), மலேசியா (3 முறை), அமெரிக்கா (3 முறை), ஆஸ்திரேலியா, இலங்கை, ஷார்ஜா ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையும், தமிழ்நாடு அறக்கட்டளையும் இணைந்து இவருக்குத் **'தமிழ்ச் சுடர்'** (2002) என்ற விருதினை வழங்கியுள்ளன.

புதுதில்லி சாகித்திய அகாதெமியின் தமிழ் மொழிப் பொதுக்குழு உறுப்பினர், இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத் தலைவர், மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியற்புலத் தகைசால் பேராசிரியர், தமிழக அரசின் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் விருதாளர். (2012) முதலான பல்வேறு சிறப்புக்களையும் பெற்றவர் பேராசிரியர் **மோகன்** என்பது குறிப்பிடத்தக்கது.

வானதி பதிப்பகம்